236

# பால பாரதி

Vol. II  1925  No. 4

ஜூலை [illegible]

JL
m211, N24BB
N25. 2-4.
160206

ரால் எண்—ம. கக௮௦.

ஓம்

# பாலபாரதி

| த்தகம் உ. | ஆடி, கலியாப்தம் ரு௦உஎ. | பகுதி ச. |
| --- | --- | --- |


ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

ஆசிரியர்:

சுத்தானந்த பாரதியார்

பரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி.



OFFICE OF THE REGISTRAR ... 12 AUG 1925 MADRAS



**"Bala Bharati"**

**Sheramadevi. S. I. R.**

**Vol. II. July 1925. No. 4.**


**"பாலபாரதி" சந்தாவிகிதம்**

வருஷச் சந்தா: உள் நாடு ரூ௳ ரு—0—0.
வெளி நாடு ரூ௳ சு—அ—0.

தனிப் பிரதி அணா க0.

# "பால பாரதி"—அட்டவணை

ஆடி, ருOஉஎ.

—(o)—


முகப்புப் படம்—ஒரு கொம்பில் இரண்டு பூக்கள்

தேசத்திருப் பல்லாண்டு (ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்) ... கசுரு

இதை காட்டும் பாதை* ... ... கசுச

நல்லொழுக்கம் (திரு. இலக்குமணப் போற்றி கள்) ... கசுஎ

விவேகாநந்தரின் வீர மொழிகள்* ... ... உOக

பயனுள்ள கல்விப் பயிற்சி (திரு. எல். கே. எல்ம்ஹர்ஸ்து) ... உOஉ

கோரமான பிரெஞ்சு அவந்தவ யுத்தம் (திரு. வ. வெ. ஸு. ஐயர்) ... உOரு

மனிதனுக்கு நல்லுணவு எது? (ஸ்ரீநிபதி இராமேசம் அவர்கள் சொற்பொழிவின் சுருக்கம் ... ... உகஉ

கண் பறிகொடுத்த புலம்பம் (மில்டன்) ... ... உகச

தன்னயம் விடுத்த தாஸர் (ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்) ... உகரு

எதிர்காலக் கண்ணாடி ("எதிர் நோக்கி")* ... ... உஉச

புறப்பொருள் வெண்பா மாலை (ஸ்ரீ ரா. முத்தையர்) ... உஙரு

ராஜகோபாலன் கடிதங்கள் ... ... உசஉ

திரு. வ. வெ. ஸு. ஐயர் நினைவு (ஸ்ரீ ரா. முத்தையர்) ... உசகு

ஆனந்தரங்கப்பிள்ளை தினசரி ... உசஅ

நமது சிற்பச் செல்வம்* ... ... உசகூ

ஆலோகன அவலோகனம்:— பாரதநாட்டின் கண்ணீர்—இன்னும் விடியுங் காலமில்லை—உலக சமாதானத்திற்கு வழி—சீனத்தில் கிளர்ச்சி.* ... உருச


## விளம்பர விகிதம்


| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ... ரூ. | கஉ—0—0. | நீண்டகால விளம்பரத்திற்கு:— | |
| ½ ,, | ... ரூ. | எ—அ—0. | ஒரு பக்கம் ... ரூ. | கO—0—0. |
| ¼ ,, | ... ரூ. | ச—0—0. | ½ ,, ... ரூ. | கு—அ—0. |
| | | | ¼ ,, ... ரூ. | ௩—கஉ—0. |

## உங்களுக்கு எது வேண்டும்?

18-காரட் கோல்ட் பிளேட் கேஸ்.

பொன் கில்ட் டயல் ரவுண்ட் ஷேப்

ரிஸ்ட்லெட் கடியாரம்



பக்கத்தில் சித்திரத்தில் காட்டியபடி கவனமான பொன் கில்ட். இதனுடைய டயல்களில் பார்ப்பவர்களுக்கு வெகு ஆச்சரியத்தை யுண்டு பண்ணும். இது பார்வைக்கு ரூ. 100-க்கு மேலும் மதிப்புள்ளதாய்த் தோன்றும். உயர்ந்த சாமான். சரியான காலம் காட்டும். நெடுங் காலம் போகும். ஆண் பெண் இரு பாலர்களும் உபயோகிக்கலாம். குறைந்த விலை ரூ. 7. 3 கடியாரங்கள் ஒரே தடவையில் வாங்கினால் விலை ரூ. 20.

உயர்ந்த ஜெர்மன் அலாரம்

டைம் பீஸ்



இது புதிதாக ஜெர்மனி தேசத்திலிருந்து வரவழைக்கப்பட்டது. காலத்திற்கு மணியைக் காட்டுவதன்றி இதில் கண்ட அற்புதமான பொம்மை ... கண் சிமிட்டும் செய்யும். ... அலாரம் மணியும் அடிக்கும். மிகவும் ஆச்சரியமானவை. புத்தகங்கள். மூன்று வருஷத்துக்கு உத்தரவாதம்.

விலை ரூபா 5.

விலாசம்:—

**வி. எஸ். வாச் கம்பெனி,**
தபால் பெட்டி 105, மதராஸ்.

## "லோகோபகாரி,"

கோமளேசுவரன்பேட்டை, சென்னை.

ஓர் அரிய வாரப் பத்திரிகை.

—()—

சுவையுள்ள ராஜீய, சாஸ்திரீய, தார்மிக வியாசங்களைத் தாங்கிவருவது.

வருஷ சந்தா: இந்தியா பர்மா லங்கைக்கு ரூ. ... வெளி நாடுகளுக்கு ரூ. ...

## "கதாமாலா"

இது தமிழில் பிரசுரிக்கப்படும் ஒரு மாத சஞ்சிகை. சிறுவர் பெரியோர்களும் கனதனவான்களும், ஏழை எளியோர்களும், எல்லா மதத்தினர்களாகிய ஆண் பெண் அடங்கலும் படித்து ஆனந்திக்கத்தக்க கதைகளடங்கியவை. வருஷ சந்தா ரூ. உ. ஆறு மாதம் ரூ. க¼.

THE KATHAMALA, Commercal Street.
Bangalore, Cantt..

## "சிந்தாமணி,"

ஒரு உயர்தர செந்தமிழ் மாதப் பத்திரிகை பல அறிஞரின் அரிய வியாசங்களுடன் கிரௌன் 1/4ல் எஉ—பக்கங்கள் கொண்டது.

பத்திராதிபர்:— சகோதரி பாலாம்பாள்

வருட சந்தா:-உள் நாடு ரூ.-ங. வெளி நாடு ரூ.-௪. மாதிரி பிரதி அணா கO(தபால் முத்திரையாக அனுப்பவும்) கிடைக்குமிடம், காரியஸ்தன், சிந்தாமணி, விவேகாச்ரமம், மைலாப்பூர், சென்னை.

## ஆரோக்கிய தீபிகை

ஆசிரியர்: யூ. ராம ராவ்

வியாதியில்லாதவர் வியாதி வாராமல் காத்துக் கொள்வதற்கும் வியாதியுள்ளவர் சுய சிகிச்சை செய்துகொள்வதற்கும் சிறந்த வழிகளைக் காட்டும் ஓர் மாதப் பத்திரிகை. வருஷ சந்தா ரூ. க-அ. கிடைக்குமிடம்: காரியஸ்தர், ஆரோக்கியதீபிகை, ரு௨ரு, தம்புசெட்டித் தெரு, சென்னை.

# சிறந்த தமிழ் நூல்கள்!

## பாரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக காடெனவும் புகழ்ப்பெற்ற பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே பெருஞ்சிறப்பு அற்று, பரிகாசத்துக்கிடமாய் விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நாமவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குர லிடும்படியான நிலைமை சேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இந் நிலைமை நீங்கி, முன்போல் உயர் பதம் பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர் நிலைமை யெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முயல வேண்டும். ஆகலின் தேசச் செல்வ நிலைமைகள் [illegible] ஜன சமூகத்தினரும் நன்கறிந்து தேசத்தொழில் விருத்திசெய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முயல வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும்.

விலை ரூ. க—0—0

## மகாத்மா காந்தியின்
## சிறைச்சாலை அனுபவங்கள்

தென்னாபிரிக்காவிலே தர்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமான தவச் சாலையாகக்கொண்டு அரும்பாடுபட்டும் உள்ளஞ் சலியாது சாத்வீக எதிர்ப்பையே சாதனமாகக் கொண்டு, தேசாபிமான தத்துவங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில் அவரால் கூறப்பட்டவாறு எழுதப்பெற்றது.

விலை ரூ. 0—அ—0

## சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஐந்தினுள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழைய நூல் காவிரிப்பூம்பட்டினத்து வணிகராகிய கோவலன் அவன் மனைவி கண்ணகி என்னுமிவர்கள் சரித்திரத்தை விரித்துக் கூறும் அழகிய நூலாகும். அரசர் தமது நீதியில் பிறழ்ந்து தவறினும் உயிர் வாழாரென்பதையும், கற்புடைய மகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் கைதொழுதேத்துவ ரென்பதையும் முன்னர் செய்த இருவினையும் செய்த முறையே செய்தோனை நாடிவந்து பின்னர் உருக்கொண்டு நின்று நுகர்விக்கு மென்பதையும், யாவரு மறிந்துய்யக் கருதி, கதை கூறுமுகத்தானே, இம் மூன்று உண்மைகளும் சிலம்பு காரணமாகப் பெறப்படுதலின் இந் நூற்குச் சிலப்பதிகார மென்று பெயரிட்டனர். ந. பலராமய்யர் அவர்கள் எழுதியது.

விலை ரூ. க—0—0

## மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

சுயராஜ்யம் என்பதை நன்கு விளக்கி ஆதியில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல், நம் தேசத்தில் "நாகரீகம் நாகரீகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் விஷய விபரங்கள் நிர்மல சிந்தையுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போர் மன மயக்கம் நீங்கி, தெளிவு உண்டாகி, தேசாபிமான உதயம் உண்டாகும். விலை ரூ. 0—அ—0

கிடைக்குமிடம்:-

**கணேஷ் கம்பெனி,**
39, தம்பு செட்டித் தெரு, சென்னை.



ஓம்

# பாலபாரதி

புத்தகம் ௨ | ஆடி, கலியப்தம் ௫௦௨௭. | பகுதி ௪

## தேசத் திருபல்லாண்டு *

பூமிக்குப் பூந்திருவே! போற்றித் திருவருட் புண்ணியம் பூத்திடவே
யாவர்க்கும் பேரின்ப மானாய்! அருமறை யோதிய ஆதியனே!
ஆவிக்குள் ஆவியாய் ஆகும் அருளுக்குன் அன்பினின் றாதிபொன்
பாவுக்குட் பாவாகப் பாடும் பரிசிற்கும் பல்லாண்டு பல்குகவே!

* * * *

சீருக்குச் செல்வியாய்த் திறலின் னூரணைத் தெள்ளிய நல்லமுதாய்ப்
பாருக்குத் தேசாபிப் பண்ணோர் பழம் புகழ் பாடும் பரிசியன்ன
வீரர்க்குத் தாயாகி விண்ணோர் துதியேத்த வெற்புயர் சோதியின்னும்
பாரத தேவியின் பாத மலருக்குப் பல்லாண்டு கூறுதுமே!

* * * *

பூரி முரசார்க்க, வானம் முழுப்புகழ் ஆலிக்க, முத்துதிரும்
மாரி வளஞ்செய்ய, மாந்தர் சுதந்திரம் மன்னிடத் தன்னறமும்
வீரப் பெருங்கோங்க, வீங்கிச் சமரச மொற்றுமை, வெற்றிதரும்
ஆரப் பெருக்கோடும் ஆளும் அரசிக்குப் பல்லாண்டு பாடுதுமே!

* * * *

ஆயுளும் ஆற்றலும் ஆண்மைத் திறமேலாங்க! அச்சமொழிந் தானந்த
மாயுளம் பொங்கிட மாண்பு பெருகவே! மண்புவி விண்ணகத்
தாயுறம் ஆகிடச் சண்டை பொழிந்திடத் தன்னய மின்றியருஞ்
சேயுளத் தோடருள் தொண்டர் செயந்தோர்ந்து பல்லாண்டு வாழுகவே!

* * * *

வழி கடந்தொளிர் உன்றன் அறமோங்க! வோங்குக ஆத்மபலம்!
வாழைபடி வாழையாய் வாழ்ந்துன் பணியாற்றி யுய்த்திட மக்களெல்லாம்
கோழைத் தனமின்றி கோலக் குடியர சோங்கிட நித்தியமாய்
வாழி வளங்கல்வி மாந்தர் மகிழ்வொடும் பல்லாண்டு வாழியவே!

---

* தேசபக்தரின் க்ஷேமத்தின் பொருட்டும், பாரத நாட்டின் சுதந்திரத்தின் பொருட்டும் சுத்தானந்த பாரதியாரால் பாடப்பெற்றது.

OFFICE OF THE REGISTRAR OF
12 AUG 1925
MADRAS

16206



# கீதை காட்டும் பாதை

அறிவும் சொலும்

———:[o]:———

"பேரியற் செயலொடு ஆருண்டிரு; இதனி னும் பற்றற இன் வழி யில்லை" என உபநிடதங் கூறுகிறது. இதுவே கீதை தன் பெருமையுள்ள பாக்களில் ஒலிப்பது. நான்காவது அத்தியாயத் தில்,

> அறஞ்செய்க நீ நறின் ஆண்டவனை வந்து
> மறங்காய்த் தளிப்பான் மகிழ்

என்றதன் கருத்துத் தெளிவாகக் காட்டப்பட்டி ருக்கிறது. முதல் இரண்டு அத்தியாயங்களில் அருச்சுனனுடைய கவலை நீங்கி, கரும உணர்ச்சி பொங்கி, பற்றின்றி தன் கடனாற்றும் பண்பு கூறப்பட்டது. அக்கரும யோகம் அருச்சுனனைச் சண்டைக்கு ஏவ மட்டும் சொன்னதல்ல. அது கடவுளான கண்ணன் வைவஸ்வத மனுவுக்கே பல யுகங்களுக்கு முன் சொல்லப்பட்டது. ஆத லின் தன்னயமற்ற பணி வழியே வீடடைதல் பழம் பழங் கொள்கையே. பின்னே பிறந்த கண் ணன் பலயுகங்களுக்கு முன்னே யிருந்த மனு வுக்கு எப்படி வினையறத்தை (கரும யோகத்தை சொல்லி யிருக்கக் கூடுமென்ற ஐயமெழுகிறது. அதற்குத் தான் கண்ணன் "அறமது குன்றி அறமல் தோங்குறி, பிறந்தென் மாயையால் பீட றங் காப்பன் நல்லோர் வாழப் பொல்லோர் வீழ, தொல்லற மோங்கத் தோன்றுவன் யுகந்தொறும். பற்பல தடவை பார்த்த இருவரும் உற்பவித் தோம்; யான் உணர்வேன்; உணராய். பற்றும், சினமும், அச்சமும் விடுத்து, முற்றும் நம்பி முதறி வேற்று, எவ்வழி என்றனை யிடைவிடா தென்னிலும் என்னை யடைந்தோயின் புறுவாரே.

குணஞ் செயலாலே வருணம் நான்காம்; தன்மை கள் பலவால் கன்மமும் பலவாம். கடனுள கரு மம் நடை பெற நன்கு, தலைத்தார், வீரர், வாணி பர், ஊழியர் சாலவுமிருத்தல் சாதியின்நோக்கம். தவமும் தூய்மையும் நேர்மையும், அறிவும் நம் புலனடக்கமும் தாங்குவோன் அந்தணன். தீர முமதுணிவும், போர் திறல் அரசும், கூர்மையும் உள்ளோன் வீரனேயாவான். பயிர்த் தொழில், வாணிபம், பசுவைப் போற்றல் வைசியர் தொழி லாம். மற்றைப் பணிகள் மற்றவர் தொழிலாம். தத்தம் கருமம் தகை பெறச் செய்தல் உத்தமமா கும் உயர் வழி காட்டும். களிப்பும், உறுதிய[illegible] கலக்கமில் மனமும், அழுக்காறற்ற சமரச அறி வுடன் சாந்தமு மெய்தி, ஆசை விடுத்தே ஆற்றும் செயலே—அழியா முத்தி அளித்திடும் அதுவாய்.

யாகமென்பது தியாகமே யாகும். எல்லாவற் றிலும் இறைவனைக் காணல், புலன்களை யடக்கி நலந்செய முனைதல், புலன் தரு நறும் புனை வென விடுத்தே விளங்கிடு ஞான வீட்டினை யடை தல், உடலும் உடைமையும் உதவிப் பணி செயல் வீரம், அடக்கம், வித்தை பயிலல், மூச்சை யடக் கல், சகதி பெருக்கல், உண்டி சுருக்கல், எல்லாம் கருமத் துதித்த யக்ஞம். அறிவொடு கருமம் ஆற்றுதல் உயர்வு. சிரத்தையும் அறிவும் செயி லிற் கலந்தே ஐயம் விடுத்து ஆண்மையோடெழு வீர். என்று கண்ணன் கருமத்தால் ஞான மடையும் வழியையும், ஞானத்தால் பந்தத்தைச் சிதைக்கும் வழியையும் காட்டுகிறான். ஒவ்வொ ருவனுடைய இயற்கைக்கும் தக்கபடி கருமங்க ளேற்படுகின்றன. அவனவன் கொண்ட கருமத்தை ஒழுங்காகச் செய்தால் மேன்மை பெறலாம். உலகு முன்னேற்றமடையவும், சமூக வாழ்க்கை சரிவர நடை பெறவும், மதமும் கல்வியும், காப் பும் ஆட்சியும், விளைவும் வாணிபமும், பணியும் தொழிலும், பாங்காய் நடை பெறவும், தன்னயம் விடுத்த அந்தணரும், காக்குந் திறலுடைய வீர ரும், நாட்டின் செல்வம் பெருக்கும் வணிகரும் பொது ஜன ஊழியத்தில் பொறுமையோடுழைக் கும் வேளாளரும் இருக்க வேண்டியது தான். இவ் வருணங்களில் ஒருவர் உயர்வு ஒருவர் தாழ்வென் பதே யில்லை. மனித சமூகத்தின் அங்கங்களே எல்லாம். மனிதனுக்கு உணவு, உடை, வீடு முத லிய எல்லாந் தேவைகளையும் தருபவன் வேளா ளன், தொழிலாளி. அத் தொழிலாளியாலேயே மனித வர்க்கம் பிழைத்திருக்கிறது. மனிதன் உயிரோடிருப்பது மட்டும் போதாது. அறிவுட னும் இருத்தல் வேண்டும். சமூகத்தின் அறிவை வளர்ப்பவன் தன்னய மற்ற தவத்தனா யிருத்தல் வேண்டும். தன்னைக் காத்துக்கொள்ள மனித னுக்கு உடல் வலியும், மன வலியும் வேண்டும். தன் உணவு உடைகளைத் தூயவழிகளில் ஈட்டும் திற னும் வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அறிவும், தற்காப்பும், பொருளும், தொழிலும் வேண்டியதிருப்பதால் ஒவ்வொருவனிடமும் நான்கு வருணங்களின் குணமும் பொருந்துதல் இன்றியமையாதது. ஒவ்வொரு மனிதனும் அந்தண, அரச, வாணிப வேளாளனுவான். ஆத லின் நான்கு வருணங்களுக்கும் ஏற்ற குணகர்மங் கள் ஒவ்வொருவனிடமும் இருத்தல் வேண்டும். நான்கு வருணம் மனிதனிடத்திலேயே உள்ளது. சமூகத்தை நான்கு பிரிவாகப் பிரித்து உயர்வு தாழ்வு கூறுவது வருணமல்ல. மனிதன் ஓதும் போது வேதியன்; ஆளும்போது அரசன்; விற்கும் போது வாணிபன்; தொழில் செய்யும் போது தொண்டு வேளாளன். அறஞ் செய்புழி அந்த ணன், மறஞ் செய்புழி புலையன். ஆதலின் சாதுர் வர்ணம் குண கர்ம வடிவாக நமக்குள்ளேயே உள்ளது. ஒவ்வொருவனும் தன்னால் முடிந்த கர்மத்தையே யோகமென் றெண்ணி அருள் மலிந்து செய்தால், தன்னயமற்று ஒரு களிப்பும் அன்பும் பிறக்கிறது.

> தொண்டால் உறுமகிழ்வே தொல்புவியுஞ்செய்தோனும்
> அண்டரும் போற்றும் அமிழ்து

தொண்டு செய்து அதனால் பலர் நலமடைந்தார் என்னும் களிப்பே மனித வாழ்வின் அமிழ்து. தனது உடலை அருட் பணிக்கிடுபவன் தனது அன்பை எல்லாருக்கும் பங்கிடுகிறான். தன் னுள்ளிருக்கும் ஈசனை எல்லாரிடமும் காண்கிறான். உலகமே அவனுக்குக் கோயிலாகத் தோன்று கிறது. ஐம்புலன்களும் கடவுளுணர்ச்சி பெறுகின் றன. வாய்மையும், நலமும், நோன்பும், தொண் டும், அடக்கமும் அவனுட் புகுந்து அவனுக்குத் தெய்வீகத் தன்மையைத்தருகின்றன. அப்போது, தான் உடலை வளர்க்க உலகிற்கு வரவில்லை. தனக்காக வாழ மனிதன் வரவில்லை, பிறர்க்காக வாழவே வந்தான் என்னும் அறிவு பிறக்கிறது. ஏதோ ஒரு வினை செய்ய வந்தோம் என்று அவ் வினையைச் செய்து விட்டு, தான் அவ் வினை யல்ல, உடலல்ல, உணவல்ல, தான் தெய்வீக ஒளி என்னும் அறிவு மனிதனுக்கு உண்டாகி றது. அதுவே தானென அறிந்தால் சுக துக் கங்கள் உடலுக் குரியனவே யென்று கலங்காத ஞான வாழ்வை மனிதன் எய்துகிறான். அந்த ஞான வாழ்வினால் தான் தன் இருளையும், பந்தத் தையும் மனிதன் சிதறடிக்கிறான் என்பதே கீதை யின் முடிவு.

சுதந்திரமடைவதே மனிதப் பிறப்பின் நோக் கம்; அந்த தெய்வீகச் சுதந்திர ஒளியைச் சுற்றி வினை யென்னும் புகை மூடிக்கொண்டிருக்கிறது. அவ் வினையே மனிதனை உலகோடு பிணைப்பது.

அவ் வினையைச் செய்துவிடின் மனிதன் விடுபடுகிறான். விடுதலையடையும் வழியைக் கீதையின் ஐந்தாவது அத்தியாயம் கூறுகிறது. மனிதன் கருமங்களை யெல்லாம் உதறியெறிந்து விடுபடலாம். அவற்றைச் செய்து முடித்தும் ஒழுங்காக விடுபடலாம். "வினையை விடுத்தலின், செய்தலே மேலாம். வினையும் அறிவும் வெவ்வே றல்ல. ஞானப்பலனைக் கருமமும் நயக்கும். வினை செய்யாமல் விடுதலை யரிது. தூய அன்பொடுந் தொண்டுகள் செய்து, புலனையும் உடலையும் பொறுமையாய் வென்று, தன்னை யறிந்து, தானென்பதற்று, பற்றை நீத்து, பக்குவமுள்ளோர் விடுதலை பெற்று வீடு சேர்வரே. தன்னை யறிந்தவன் சமத்துவ மெய்துவன். நிலைத்த மனந்தன் நெஞ்சிற் களித்து, புறப் பொருள் சிந்தை யடக்கிப் போகம் வெறுத்து, ஆசை வெகுளி யலைகளை நீக்கி, உள்ளே களித்து உள்ளொளி புணர்ந்து, குறைகளிறந்து, ஐயம் குறைந்து, அனைத்துயிருக்கும் நலத்தினை நாடி, என்னையே எல்லாம் வல்லவனென்றே அறியும் போதே அடைவன் விடுதலை," என்று ஐந்தாவது அத்தியாயம் கூறுகிறது. கரும பந்தம் அகன்றால் தான் மனது கவலையற்றிருக்கும். அப்போது தான் மனிதன் தன்னில் நிலைத்துக் களித்திருக்க முடியும். செய்ய வேண்டிய கருமத்தை விடுத்துச் சந்நியாசம் கொள்வது கடனைத் தீர்க்காது புதுவைக்கு ஓடுவது போலாகும். மாட்டைக் கறந்தே பின்பு கட்டவிழ்த்து புலன்களில் சுதந்திரமாய் மேய விடுவது போல், நாம் செய்ய வேண்டிய கருமக் கடனைப் பெற்ற பிறகே காலதேவன் நமது கட்டவிழ்ப்பான். தன்னயமறுத்து பலனின் இச்சையை விடுத்துத் தொண்டு செய்வதையே மறுபடியும் ஐந்தாவது அத்தியாயம் சொல்லுகிறது.

தன்னயம் விடுவது சாமானியமானதல்ல. அதற்குப் பல சாதனங்கள் வேண்டும். முதலில் எதைக் குறித்துத் தன்னயம் விடவேண்டுமோ அவ் வினையைத் திடமுடன், குறித்துக்கொள்ள வேண்டும். அந்தத் திடபுத்தி ஏற்படுவதற்குத் தியானம் வேண்டும். நமது வினையிலேயே ஒரு மனப்பட வேண்டும். ஒருமனப் படுவதற்குச் சங்கற்பரஹிதனாக வேண்டும். சங்கல்பமென்றால் பல கிளையான யோசனை, பலத்தில் இச்சை வைத்து எண்ணுவது, வரப்போகும் முடிவுகளை எண்ணித் தயங்குதல். இந்த சங்கற்பமானது மனிதனைப் பல எண்ண அலைகளில் பிணைத்து அலைக்கும். தனது உறுதியான வினையினின்று மனிதனை மறைக்கும். இதை விடுத்து ஒரு மனத்துடன் உன்னிய வினையில் உறுதியாய் நிலைக்க எண்ணும் வகையையே கீதை ஆறுவது அத்தியாயம் கூறுகிறது.

"தோற்றப் பொருளில் தொத்தில்லாது, சங்கற்பத்தை முற்றுந் தவிர்த்து, தன்னை யறிந்து தளர்வை யகற்றி, தானே தனக்குத் தமரும் துணையும், தன்னால்தானே தானுயர் வெய்தல், என்றே யறிந்து அமைப்புற்று, கலங்கா மனமும் விலகாப் புலனும், நேயரும் பகைவரும் ஒன்றெனநினைக்கும் சமபுத்தியுடன் தனிமை நாடி தியானஞ் செய்தல் சீரிய நல்லோர்."

இனித் தியானம் செய்ய வேண்டியஇடம் ஆசனம் முதலியவற்றைச் சொல்லுகிறார். "மிதத்தோடுண்டு மிதத்தோடுறங்கி, இடமுந் தூய தாய், இருக்கை தருப்பையாய், நிமிர்ந்தேயமர்ந்து புலப்பொருள் மறந்து, சுற்றம் நோக்காது சுழிமுனை நோக்கி, புருவ நடுவே பார்வை பொருத்தி, காமம் வெகுளி கலக்கமே யற்று, பொறியும் மனமும் புந்தியுமடக்கி, பிரமசரியம் பிடித்து நடத்தி என்னை எண்ணி இடைவிடாதிருப்பின் அன்னும் தானுய்ச் சுதந்திர வீடே. காற்றலைக்காது கதிர் விடுமெரிபோல், ஆட்டமற்றே அமர்ந்திருப்பவரே சமமொடு தன்னில் சகலமும் காண்பர். என்னில்



எல்லாம் எல்லாவற்றிலும் என்னையே காண்பர் எண்ணுறு தூயர். என்றார் கிருஷ்ண பகவான்.

அருச்சுனன் "ஏ கண்ண! சஞ்சலமுடைய நெஞ்சகந் தன்னைக் கொஞ்சமும் நிறுத்தல் கூடிலதென்னே?" என்றான். கண்ணன் "சஞ்சலமுடைய நெஞ்சினை வெல்லக் கொஞ்சங்கொஞ்சமாய்த் துறத்தலே துணையாம்; அடக்க அடக்க அடங்கும் மனமே. செய்தமட்டிற் சித்தி கிடைக்கும். இம்மையில் யோக முயன்று விட்டவன் மறுமையில் தக்க மாண்புடன் பிறந்து, விட்டதினின்று தொட்டுவன் தவத்தில்," என்றார். ஆதலின் நாம் செய்யும் நன் முயற்சிகள் இப் பிறவியில் அரைகுறையாயினும் பழுது படினும் மறு பிறவியில் விட்ட படியினின்று தொடங்கி நம்மைத் தாண்டி மேலே கொண்டு செல்லும் தைரியத்தை கீதை நமக்குத் தருகிறது. ஆதலின் நம்மை ஆன்மா வென அறிந்து, தன்னயம் விடுத்து, அன்பு நிறைந்து நமது வினையை எண்ணி, ஒரு மனத்தோடு திண்மை பூண்டு, முயல வேண்டும்.

நினைப்பி னுருவே நிசமாகும் நல்ல
நினைப்பு தனையே நினை.

நம்பு, நினை முயல் நாடொருமை ஞானமாம்
இன்பம் பிறக்கும் இனி.

இறந்தும் கரும மிருப்பதனால் பின்னர்
பிறந்தும் அலையுமுயிர்ப் பெட்பு

என்பதே தியான யோக அத்தியாயத்தின் கருத்து. மற்ற அத்தியாயங்களை மறுமுறை ஆராய்வோம்.

# நல்லொழுக்கம்

(திருவாளர் இலக்குமணப் போற்றிகள்)

——— :[o]: ———

இவ் வுலகத்திலுள்ள அறிவுள்ள பிராணிகளுள் மனிதரே சிறந்தவர். ஏனென்றால், மனதைப் போன போக்கில் விடாமல் தீமையை ஒழித்து நன்மையிற் செலுத்துவது அறிவின் இலக்கணமென நாயனார்

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்றருளியபடி பகுத்தறிவை யுடையவர் மனிதர் ஆகின்றனர். அந்த அறிவைக் கல்வியினாலும், கேள்வியினாலும், வளர்த்தல் வேண்டும். தோண்டத் தோண்ட மணலில் ஜலம் ஊறுவது போலக் கற்கக் கற்க அறிவு வளருமென

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்ற திருக்குறளாலும்; கேள்வி பற்றி,

"கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை"

என்ற திருக் குறளாலும், நம் நாயனார் உபதேசிக்கின்றனர். அந்த அறிவுடன் ஒழுக்கம் நிலை பெற வேண்டுமானால் ஒழுக்கத்திற்கு நல் அறிவு காரணமாகும்.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு"

ஜலமானது தான் சார்ந்த நிலத்தின் தன்மையை அடைவது போல, மனதானது தான் சார்ந்த கூட்டத்தாரது இயல்பைப் பெறுவதாகும். ஆதலால் தர்மங்களை உணர்ந்து சிறந்த அறிவைப் பெற்றவர்களை நாம் சார்ந்துகொள்ளல் வேண்டும்.

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"

அத் தகைய பெரியோர்களுடைய துணையோடு நம்முடன் ஒத்த அறிவினராகிய நண்பர்களுடைய சிநேகத்தையும் தேடிக் கொள்ளல் வேண்டும். இந்த நண்பர்களில் ஒருவர் மற்றவரிடத்தில் பயனைக் கருதிச் சேருவரேல், அவர் நண்பரல்லர். திருடர் ஆவர்.

"உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்"

நண்பர்களில் ஒருவன் மற்றவர் குற்றத்தைக் கண்டபொழுது அவர்களைக்கண்டித்துத்திருத்துவதே நட்பின் இலக்கணமாகும்; ஒருவர் ஒருவரைப் பரிகாசம் செய்து கொள்வதற்காக ஏற்பட்டதன்று நட்பு.

"நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

இம் மாதிரியான சிநேகிதர்களே நல்ல நட்பினர் ஆவர். இத்தகையோரை ஏதேனும் கொடுத்தாவது நட்பினராகக் கொள்ளல் வேண்டும்.

"குடிப் பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு"

ஆனால் அறியாமையினால் துஷ்டர்களுடைய நட்பு ஏற்பட்டுவிட்டால் ஏதேனும் கொடுத்தாவது அதை விலக்கிக் கொள்ளல் வேண்டும்.

"மருவுக மாசற்றார் கேண்மை யொன்றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு"

துஷ்டர்கள் யாதொருகாரணமுமின்றிப்பிறருக்கு அநீதியாகக் கெடுதல் செய்பவர் ஆவர். ஆனால் அந்தக் கெடுதலானது நல்லவர்களைப் பாதிக்க மாட்டாது. ஏனென்றால்

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு"

என்று நாயனார் அருளிச் செய்திருப்பதால் ஒருவருக்கும் கேடு நினையாமலிருப்பதே உத்தமமாகும். யாரொருவர் கேடு நினைத்தார்களோ அவர்களைக் கெடுப்பதற்குத் தர்மக் கடவுள் சித்தமாக இருக்கிறார். ஆதலால் நமக்கு ஒருவன் கேடு செய்தால் அவனுக்கு நன்மையே செய்ய வேண்டும்.

"இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்".

ஓர் பொருளும், அதன் நிழலும் விட்டுப் பிரியாதது போல தீமை செய்தவனைக் கேடு விட்டு விலகமாட்டாது.

தீயவை செய்தார் கெடுதல் நிழறன்னை
வீயா தடியுறைந் தற்று".

ஒருவன் முன்நிமிஷத்தில் பிறருக்குக் கேடுசெய்தால் அக் கேடானது பின்நிமிஷத்தில் தானே அவனை வந்தடையும்.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்"

எவனுடைய சித்தம் நடுவு நிலைமையை விட்டு விலகுமோ அவன் கெடுவான் என்பது உறுதி.

"கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்"



ஆதலால் அறிவுடையவன் பிறர் வருத்தத்தைத் தன் வருத்தம்போலக் கருதல் வேண்டும். அவ்விதம் கருதாவிட்டால் அறிவு படைத்ததினால் யாதொரு பயனுமில்லை

"அறிவினா லாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை".

அறிவுடையவர் அன்பும் இரக்கமுமுடையவராதல் வேண்டும். அன்புடையார் பிறரைத் தம்மைவிட அதிகமாகப் பேணுவார். பிறருக்காகத் தம் உயிரைப் பலி கொடுப்பார்

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு".

அன்பாகிய குணத்தில் நமக்கு எப்பொழுதும் உண்மையே உண்டாகும். நாம் உண்மையாக அன்பைச் செலுத்துவதால் உலகம் நம்வசப்பட்டு விடும். நமக்குப் பகையே கிடையாது. எல்லாரும் நண்பராவர். நம்மிடத்திலுள்ள தீய குணங்கள் தலைகாட்ட இடமின்றி நசித்துப் போகும். நாளுக்கு நாள் நல்லொழுக்கமே மேலிட்டு வளரும். நல்லொழுக்கத்தால் சகல நன்மையும் உண்டாகும்.

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்".

நல்லொழுக்கமாவது யாது? வாய்மை, பொறுமை கொல்லாமை, இன்னா செய்யாமை, வெகுளாமை, அழுக்காறாமை, பிறர் மனைவியை விரும்பாமை, பிறர் பொருளைக் கவராமை, புறங் கூறாமை முதலியனவாம்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்"
"பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று"
"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்"
"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"
"நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற"
"அழுக்கா றுடையார்க் கது சாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது"
"பிறன் மனை நோக்காதபேராண்மை சான்றோர்க்
கற னொன்றோ வான்ற வொழுக்கு"
"நடுவின்றி நன்பொருள்வெஃகிற்குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்,,
"ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு"

என்று உரைக்கப் பட்ட திருக்குறள்களின் கருத்தை ஆராய்ந்து நடக்கின் அது நல்லொழுக்கமாகும். ஆகவே, தொகுத்துச் சொல்லின், நாம் குற்றத்தை நீக்கி குணத்தைக் கடைப் பிடிக்கும் அறிவை உடையோம். அந்த அறிவைக் கல்வி கேள்விகளால் வளர்க்கத் தகுதி யுடையோம். அதற்குத் துணையாகக் கற்றல், கேட்டல் உடைய நீதிவாய்ந்த பெரியோரைச் சார்ந்து கொள்ளல் வேண்டும். அன்றியும், நம்முடன் ஒத்த அறிவுடையவர்களையும் நண்பர்களாகக் கொள்ளல் வேண்டும். நாம் ஒருவரோடொருவர் நட்புக் கொள்ளுங் காலத்தில் நட்பிற்கே யல்லாது வேறெதினும் ஓர் பயனைக் கருதி நட்டல் ஆகாது. உண்மையான நண்பர்கள் ஒருவர் குற்றத்தை மற்றவர் காணும் பொழுது உடனே கண்டித்துச் சீர்ப்படுத்துதல் வேண்டும். சிரித்து விளையாடுவதையே சிநேகிதர் கடமையாகக் கொள்ளலாகாது. நல்ல நண்பினரை பொருள் செலவிட்டேனும் தேடிக் கொள்ளல் வேண்டும். ஆனால் தீய நட்பினரை பொருள் செலவிட்டேனும் விலக்கல் வேண்டும். கெட்டவர்கள் கேடே நினைப்பார்கள். பிறருக்குக் கேடு நினைக்கிறவன் தானே

கெடுவான். நல்லவர்கள் பிறனொருவன் தங்களுக்குக் கேடு செய்தாலும் அவனுக்கு நன்மையே செய்து நல்வழிப் படுத்துவார்கள். ஏனென்றால் கேடு நினைப்பவர்களுக்கு தர்மக் கடவுள் கேட்டையே உண்டாக்குவது போல நன்மை நினைப்பவர்களுக்கு நன்மையே அருளுவர். ஒருவனுடைய ஆக்கமும், கேடும் அவனுடைய மனதானது முறையே நீதியையும், அநீதியையும் நாடுவதற்குத் தக்கதாக நிகழ்கின்றன. நன்மைக்குக் காரணம் நல்லொழுக்கமாகும். மனப் பூர்வமாய்ப் பொய் சொல்லாமலும் பிறர் தமக்குச் செய்த குற்றங்களை மனதில் தங்க வொட்டாமல் மறந்தும், தனக்கு உயிர் ஆபத்து வரும்படிக்கான துன்பத்தை பிறர் செய்த போதிலும், அவருக்குக் கொலைபாதகமான செயலைச் செய்யாமலும், தன் கோபமே தனக்குப் பகை என்பதை யறிந்து கோபத்தை ஒழித்தும், தன்னைக் கெடுப்பதற்கு வேறு பகை இல்லாவிடத்தும் பொறாமையே போதுமான பகை என்பதை உணர்ந்து பொறாமையை விட்டும், பிறர் மனைவியை விரும்புகிற தீய குணத்தைச் செறுத்து வெற்றி பெறுவதே வீரத்திலும் வீரமாவதை உணர்ந்து பிறர் மனைவியை இச்சியாமலும் நீதியின்றி பிறர் பொருளை விரும்பினால் குடி கெட்டுக் குற்றமுமுண்டாவதால் பிறர் பொருளை இச்சியாமலும், பிறர்குற்றங்களை ஆராய்வதன் முன்னர் தன் குற்றங்களை ஆராய்வதால் பிறரது செயல்களில் குற்றம் தோன்றாதாதலின், புறங்கூறுதல் ஒழித்தும், பின்னும் நீதி நூல்களிற் கூறிய சகல நற்குணங்களையும் கடைப்பிடித்தும் ஒழுகுவதே நல்லொழுக்கமாகும்.

ஆகவே இந் நல்லொழுக்கத்தைப் பெற்று அதில் நிலைபெறுவதற்குத் தெய்வபக்திதான் முக்கியமான சாதனமாகும். அகரமாகிய எழுத்து தான் முதலில் தனித்து நின்றும் மற்றைய உயிர்களோடும், மெய்களோடும் கலந்து நின்றும், விளங்குவது போல கடவுளானவர். உயிருள்ள பிராணிகளிடத்தும் உயிரில்லாத வஸ்துக்களிடத்தும் வியாபித்து விளங்குகின்றார்.

"அகர முதல வெழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

அவர் ஜீவர்களாகிய நம்மைப் போல் அல்லாமல் நிர்மலமான அறிவே வடிவமாயிருப்பதால் கற்றறிவுள்ள நாம் அவரை அன்புடன் வணங்கல் வேண்டும்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்"

அவரை பக்தி செய்தாலன்றி நம்முடைய மனக் கவலை யொழியாது.

"தனக்குவமை யில்லாதான் றாள் சேர்ந்தார்க் [கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது"

அவரை பக்தி செய்தால் நம்முடைய பிறவி நோய் நீங்கும். பக்தி செய்யாவிட்டால் பிறவி நீங்காது. ஆதலால் கடவுளையே பக்தி செய்ய வேண்டும்.

"பிறவிப் பெருக்கட னீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேரா தார்"
"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

# விவேகாநந்தரின் வீர மொழிகள்

—[o]—

ஒவ்வொரு ஆன்மாவும் முற்றும் தெய்வத் தன்மையுள்ளது. புலன்களையும், மனதையும், இயற்கையையும் அடக்கி நமதுள்ளிருக்கும் அந்த தெய்வீக வொளியை அடைவதே நமது ஜீவனின் நோக்கம். இதைக் கர்மத்தாலேனும், பக்தியாலேனும், யோகத்தாலேனும், தத்துவ ஞானத்தாலேனும் அடைந்து சுதந்திரமாயிரு.

இதுவே மதத்தின் முடிபு. உபதேசங்கள், கொள்கைகள், ஆகமங்கள், வேதங்கள், கோயில்கள், விக்கிரகங்கள் எல்லாம் அதற்கு இரண்டாவதேயாகும். மனிதனுக்குள் முன்னேயே இருக்கும் தெய்வீக சக்தியை வெளிப்படுத்துவதே மதத்தின் முடிபு. நம்மிடத்தில் முன்னேயே இருக்கு மறிவை வெளிப்படுத்துவதே படிப்பின்



வேதாந்த கேசரியாகிய ஸ்வாமி விவேகானந்தர்

நோக்கம். இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு உயிருக்கும் ஐம்புலன்களைக் கடந்த ஒரு சக்தியுள்ளது.

சிறு புழுக் கூட ஒரு நாள் தன் புலன்களைக் கடந்து கடவுளை யடையும். ஒருவருடைய வாழ்வும் வீணல்ல. வீண் என்பதே உலகில் இல்லை. நூறு தடவைகள் துன்ப மடைந்தும், நூறு தடவைகள் உருண்டு விழுந்தும் மனிதன் முடிவில் கடவுளை அடைகிறான். நாம் கடவுளிட மிருந்தே வந்தோம். அற்பம் பெரிதென்ப தின்றி உயிர்கள் கடவுளிட மிருந்தே வந்து எல்லாருக்கும் பொதுத் தந்தையான கடவுளிடமே சேருகின்றன. தெரிந்தோ தெரியாமலோ உலகம் முழுதும் கடவுளை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. எல்லா உயிர்களும் நம்முடன் பிறந்தவைகளே. செடிகளும், விலங்குகளும் மனிதர்களும் எனது சகோதரர்களே. உயிர்களுக்குள் தீய சகோதரர், நல்ல சகோதரர், தெய்விக சகோதரர் அஞ்ஞான சகோதரர் முதலிய எல்லாரும் ஒரே கடவுளை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றனர். அவைகளெல்லாம் ஒரே ஆற்றின் வழியே சமுத்திரத்திற்குச் செல்லுகிறார்கள். ஒருவருக்கும் பின் போக்கு இல்லை. எல்லாரும் முன்னேறிக் கொண்டேதா னிருக்கின்றனர். சுதந்திர முயற்சியே படைப்பின் நோக்கம். உலகம் அன்பினின் றுதித்து, அன்பில் வளர்ந்து, அன்புடனேயே சேருகிறது. நாம் சக்தி, வன்மை, என்று சொல்லுவதெல்லாம் நமக்குள்ளேயே யிருக்கிறது. அதை அறிந்து பாரத வீரர்களே எழுமின், விழிமின், கருதிய கருமம் முடியும் வரையில் உழைமின்!

# பயனுள்ள கல்விப் பயிற்சி

## சிக்ஷா சத்திரம்

(திரு. எல். கே. எல்ம்ஹர்ஸ்து எழுதியது)

சாந்தி நிகேதனில் சில வருஷங்களாகவும், ஸ்ரீநிகேதனில் கிராம மறு நிர்மாண ஸ்தாபனத்தில் இரண்டு வருஷங்களாகவும் கையாண்டுவந்த கல்வி முறையின் முடிவு தான் சிக்ஷா சத்திரம். முன்னால் ஏற்பட்ட வெற்றிதோல்விகளிலிருந்து சாமான்யமாய் ஊகிக்கக்கூடிய ஆதாரங்களின் மேல் அது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

குழந்தைகளின் இயற்கை முக்கியமாய் என்னவென்றால், அவர்களுடைய ஸகஜத்வமும் கபடமின்மையுமே. சம்பிரதாயத்துக்குக் கட்டுப்படாமலும் சுபாவ இச்சையால் ஏவப்பட்டும் புலத்தால் வெகு உச்சாகத்தோடு பரிசோதனைகள் செய்த அனுபவத்திலிருந்தும் குழந்தைகள் ஞானம் அடைகிறார்கள்!

மிருகங்களின் குட்டிகளிலும் அந்தக் கவலையற்ற உற்சாகத்தைக் காண்கிறோம். அவைகளுக்கு வாழ்க்கையே விளையாட்டு, பிரபஞ்சம் கட்டுக்கதை. பூனைக்குட்டிக்கு எது அசைந்தாலும் மூஞ்சூறாகவும், நாய்க் குட்டிக்கு எந்த மெதுவான விட்டுச்சாமானும் தான் அலட்டக்கூடிய எலியாகவும் தோன்றுகிறது. இவைகளின் உள்ளே ஒரு ஜீவ சக்தி இருந்துகொண்டு குறித்த சில வழிகளில் வளரச் செய்து, தம்மைத் தாம் காப்பாற்றிக்கொள்ளும் விதமாய் சிரமத்துடன் அனுபவம் பெறச்செய்து கொண்டிருக்கிறது. அது; வளர்ந்தவர்களுக்குக் குழந்தைப்பருவத்தின் அஜாக்கிரதையான ஆனந்த எக்களிப்பாகப் படுகிறது.

வளரும் செடியில் கூட, முளைவிட்டுக் கிளம்புவதில் அதே மாதிரி அபரிமித உற்சாகம் தோன்றுகிறது. இந்த முதல் முளை நுனியிலிருக்கும் ஜீவசத்து அவ்வளவு அதிகமாயிருப்பதால் விதையின் சத்து இன்னு மிருக்கையிலேயே, முளை மேலும் மேலும் முளைக்கிறது. விதையின் சத்து ஆய்விட்டபோதும், வளரும் முளை திறந்த ஆகாயத்தில் மேல் நோக்கி ஓங்குகிறது. இந்த முதல் முளைக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அது போனதுதான். பின்னிட்டு மரம் முளைத்தாற் கூட அந்தச் செடியின் முக்கிய ஜீவசத்து வளர்ச்சியில் குன்றிப் போய்விடும்.

மனிதக்குழந்தையிலும் இதே குணம் காணப்படுகிறது. இது போலவே இயற்கைக்கு விரோதமான கொஞ்சுதலாலும் அடக்குதலாலும் குழந்தைகளின் எதிர்கால வாழ்வை நிரந்தரமாகக் கெடுத்துவிடலாம். குழந்தைப் பருவத்தின் விளையாட்டுப்புத்தி வீணல்ல. பின்னே படவேண்டிய சிரம ஊக்கத்தோடு, அது நெருங்கின சம்பந்தமுள்ளது. தற்போது அதைக் காப்பாற்றும் கவலை பெற்றோர்களிட மிருக்கிறது.

நம் குழந்தைகள் விஷயத்தில் நாம் இதை அடிக்கடி மறந்து விடுகிறோம். நாம் அவர்களுக்கு பொம்மை உலகத்தைக் கொடுக்கிறோமேதவிர, உண்மை உலகந்தான் நாம் நம் இளமைப் பருவத்தில் விரும்பியதென்பதை மறந்து விடுகிறோம். உண்மையாகவே தோட்டம் வைத்தலும், குகைகள் தோண்டுவதும் நிஜமான கோடரியால் விறகு பிளப்பதும், பற்ற வைக்க நெருப்பும், பிசைந்த ரொட்டி தட்டமாவும் குழந்தைப் பருவத்தில் நமக்குப் பரம ஆனந்தத்தைக் கொடுத்தன; ஆயினும் விளையாட்டுச் செங்கற்களும், விளையாட்டு வீடுகளும் வீட்டுக்கருவிகளும், விளையாட்டு சமையல் அறைகளும் நாம் வெறுக்கக் கொடுத்தார்கள். நிஜமான வேலை கொடுத்தாலும் அது சிரமத்தை உண்டுபண்ணக் கூடியதாயிருந்ததே தவிர, பல பொருள்கள் செய்ய இடம் கொடாம லிருந்தது.

ஆகவே சிக்ஷா சத்திரத்தின் நோக்கம் என்னவென்றால்—குழந்தைப் பருவத்தின் ஜீவ உற்சாகமும், ஸகஜத்வமும், வசீகரமுமுடைய அனுபவத்தைக் கொண்டு, எல்லா இளஞ்சீவனும் ஆனந்தமும் பயிற்சியும் அடைவதே. தாம் படர்தலுக்கு வேண்டிய அவகாசமும், இளமுளைக்கு வளரப் போதிய இடமும் இருக்க வேண்டியது போலக் குழந்தைகளுக்கும் வளர்ச்சிச் சுதந்திரம் கொடுத்தல் வேண்டும். குழந்தை, புதிதாய்த் தானே உண்டாக்கக் கூடிய ஸாதகங்கள் நிறைந்த சாமான்களினிடையே மிகுந்த சுயேச்சை யடைகிறது. உற்சாகமான விளையாட்டுப் போன்ற வேலையாகிய ஆராய்ச்சிக்கு சௌகரியங்களும், புதியபுதிய அனுபவங்களை முறையே தருகும் விளையாட்டுத் தன்மையுள்ள வேலையும் கொடுத்து வளரும் குழந்தை ஆறு வயது முதல் பன்னிரண்டு வயது வரையில் தான், பஞ்சேந்திரியங்களாலும் முக்கியமாய் ஊறறிவாலும், கைகளை உபயோகப்படுத்தலாலும் தன்னை மறந்து அதன் வேலையில் மனப்பதிவடைகிறது. ஆகையால் சிக்ஷா சத்திரத்தில் சேர்ந்ததும் முதலிலிருந்தே பிள்ளைகள் கை வேலையும், வீட்டு வேலையும் கற்க ஆரம்பிக்கிறார்கள். பட்டடையில் தாமே தேர்ச்சியுடன் சாமான்கள் செய்வதிலும் சிருஷ்டி சாத்தியத்தாலும் கை பயிற்சியும் சுவாதீனமும் அடைகிறது.

இப்படிப் பல வகைகளில் அநுபவம் அடைந்த பிறகு தான், அவைகளை ஒற்றுமைப் படுத்த அவசியம் தோன்றும். அதன் மேல் அதை எடுத்துச் சொல்லவும், ஐம்பொறிகளில் கண்டுபிடித்தல்களை ஒருங்கு சேர்த்து நடித்துக் காட்டவும் தோன்றும். வாழ்வின் உண்மைகளையும் தேவைகளையும் நோய் அறிய முன்பாக, நிஜ வாழ்க்கையில் சந்தித்துக் கவனிக்காத விஷயங்களைப் பற்றி, மூன்றும் மனிதர்கள் சொல்வதைக் கேட்க மணிக்கணக்காய்க் குழந்தைகளை அடைத்துவைத்திருப்பது அக்கிரமம்.

பிலிப்பைன் தீவுகளில் விவசாயப் பாடசாலை ஒன்று இருக்கிறது. அதில் சுமார் ௫00 பையன்கள், தங்களுடைய சிறிய நிலங்களைத் தாங்களே ஆண்டு அநுபவித்தும், தங்கள் குடிசைகளைத் தாங்களே கட்டிக் கொண்டும், தங்கள் வரவு செலவுக் கணக்கையும், சமூக நிர்வாகத்தையும் தாங்களே பார்த்துக் கொண்டும், தங்களுடைய மிருகவர்க்கங்களைத் தாங்களே மேய்த்துக் கொண்டும், தங்களால் உண்டாகும் லாபங்களைத் தாங்களே எடுத்துக் கொண்டும் வருகிறார்கள். அந்தப் பாடசாலைத் தலைவர் சொன்னதாவது:—"எங்களுடைய வகுப்பறை வேலை, எங்கள் அனுபவமே. இங்கிலீஷ் பாடம் மாத்திரம் அவர்கள் வாழ்க்கைக்குச் சிறிதும் சம்பந்தப் படாததால், உருசியற்றதாய் இருக்கிறது. அதில் பிள்ளைகளுக்கு ஒரு அக்கரையும் உண்டாக்க என்னால் முடியவில்லை".

சிசைஷ சத்திரத்தில் 'வீட்டு வேலை' என்னப்படுவதில் கீழ்க்கண்டவைகள் முதற் கல்வி முறையாகக் கருதப்படும்:—

இருப்பிடத்தைக் கட்டலும், சுத்தம் செய்தலும், அலங்கரித்தலும், கொல்லை ஏற்படுத்தலும், அதைத் தக்கபடி உபயோகித்தலும் அப்புறப் படுத்தலும், சமையல் செய்வதும், பரிமாறுவதும்; வஸ்திரம் துவைப்பதும், சீர் செய்வதும் தன்னைப் பற்றின சுகவழியும், ஆரோக்கியமான நடையும்.

தனித்தனி சுய சிகைஷ; சமூக சுய ஆட்சி. தற்காத்தல், விருந்தோம்பல்; நெருப்பை அவிக்கவும் அடக்கவும் சாதகம்.

இவற்றில் ஒவ்வொன்றிலும், ஒருகலை கற்கவும், ஒரு அலுவலின் நிர்வாக சக்தியிலோ தேர்ச்சியும் சாஸ்திர அறிவும் வேண்டியிருக்கிறது. எல்லாவற்றிலும் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமும், குடும்ப அங்கமாய்ச் சேர்ந்திருப்பதன் பொறுப்புகளையும் பிரயோஜனங்களையும் அறிவுடன் ஒப்புக் கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கிறது.

வீட்டுவேலை என்பது அநேகமாய் கை வேலையாய் இருக்கும். ஆயினும் இளவயதிலிருந்தே சம்பாத்தியம் கொடுக்கக்கூடியதும் சிறு கைகள் செய்யக் கூடியதுமான கைத் தொழில்கள் குழந்தைகளுக்கு ஆரம்பித்தல் நலம். உற்பத்தியாகும் வஸ்து வீட்டில் முக்கியமாய் உபயோகப்படக் கூடியதாகவாவது அல்லது கடையில் சுலபமாய் விலையாகக்கூடியதாகவாவது இருந்தால் தான் தன் கைகளின் தேர்ந்த உபயோகத்தால் சுயரக்ஷண சக்தியை அறியச் சாதகமாகும்.

பின் குறிக்கப்படும் ஏதாவது தொழிலை சில வாரங்களிலேயே கற்றுக்கொள்ளலாம்.

நூல்திரி, நாடா, பட்டை, சால்வை, அரைக் கச்சை நெய்தல்;

நூல் கம்பளியும், துப்பட்டியும் நெய்தல் (தறிகளைக் குழந்தைகளே சுலபமாய் மூங்கிலால் செய்து கொள்ளலாம்).



நாணல் செருப்பு, நாணல் பாயும், படுக்கையும் நெய்தல்.

தையல் வேலை; காயிதம், மை செய்தல்.

சுலபமான மரச் சாயங்களால் சாயந்தோய்த்தல், மர அச்சுகளால் நூல்துணிகளுக்கும் காலிகோத் துணிகளுக்கும் கரைகட்டுதல்; சூளை போடாதசெங்கல் செய்தல். மேற் சொன்ன கைப் பழக்கக் கல்வியால், அளவற்ற அறிவும், புலப் பயிற்சியும், வாழ்க்கை நலனும், சுதந்திரமும், ஜீவன வழியும் ஏற்படு மெனச் சொல்லவும் வேண்டுமோ? (விஸ்வபாரதி)

# கோரமான பிரெஞ்சு துவந்துவ யுத்தம்

(திருவாளர் வ. வே. ஸுப்ரஹ்மண்ய ஐயர்)

———— :[o]: ————

பிரெஞ்சுக்காரரின் துவந்துவ யுத்தத்தைச் சில துடுக்கர் பரிகசிக்கிறார்கள். ஆனால் நம் காலத்து மகா அபாயகரமான ஸ்தாபனங்களில் அது ஒன்றாகும். ஏனெனில் திறந்த வெளியிலேயே அவ் யுத்தம் நடைபெறுகிறது. அதனால் மல்லர்களுக்கு ஜலதோஷம் பிடித்தே தீரும். இதிலிருந்து நல்ல காற்றுள்ள இடத்திலேயே இவ் இதற் போர் நடைபெறுவதால் இதைப் போல ஆரோக்கியத்தை வளர்க்கும் ஔஷதம் ஒன்றும் கிடையாது என்று ஒரே பிடியாய்ப் பிடிக்கிறார்களே, அவர்களுடைய பிரசங்கமும் தணிந்துவிடும்.

முனியே காம்பெத்தாவும் முனியே புர்த்துவும் சட்டசபையில் உக்ரமாக ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பேசிக்கொண்டார்கள் என்று கேள்வியுற்றேனோ இல்லையோ, உடனே ஓகோ இது லேசிலே தீராது என்று நினைத்துக் கொண்டுவிட்டேன். ஏனெனில் காம்பெத்தா எனக்கு வெகு நாளைய சிநேகிதனானதால் இவனது மறத்தன்

* துவந்துவ யுத்தம்— ஆங்கிலத்தில் டியூவேல். ஒருவன் இன்னொரு மனிதனைக் கௌரவத் தாழ்வாகப் பேசினாலும், பின்னவன் முன்னவனைத் துவந்துவ யுத்தத்துக்கு அழைத்துப் போர் புரிவது எல்லா ஊர்களிலும் தொன்றுதொட்டு வழக்கமான உணர்ச்சி. நோயும் லோபமும் பெருகி வந்திருக்கிற இந் நாளில் இவ் வழக்கம் அற்றுப் போய்விட்டது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இம்மாதிரி துவந்துவ யுத்தத்தைக் குற்றமாக்கி அதிற் கலந்து கொள்வோருக்குக் கடுமையான தண்டனை விதிக்கிறார்கள். பிரெஞ்சுக்காரர்களுக்குள் துவந்துவயுத்தம் வழக்கிலிருக்கிறது. ஆனால் அறிவுப் பயிற்சியில் காலம் செலவழிப்பவர்கள் இத்தகைய யுத்தத்தில் சந்தோஷத்தோடு கலந்து கொள்ளமாட்டார்கள் என்பது வெளிப்படை. இந்த ஹாஸ்யம் எழுதியது மார்க்கு துவெயின் என்னும் அமெரிக்க விதூஷகனானவன். அவன் பிரெஞ்சு இலக்கிய ஆசிரியரும் பிறரும் மாமூல்படி செய்ய வேண்டியதாயிருக்கும் துவந்துவயுத்தத்தில் காட்டும் பயத்தையும் பிறவற்றையும் பரிகசிக்கிறான். இத் தகைய துவந்துவயுத்தம் ஆதியில் வாளாயுதம் வைத்து நடைபெற்று வந்தது. கைத்துப்பாக்கி சுழலி (சுழற்றுபாக்கி) ரிவால்வர் முதலியன தோன்றிய பிறகு அவைகளே பெரும்பாலும் இவ் யுத்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

மையும் பயங்கரமான சுபாவத்தையும் நான் அறிவேன். அவனது பிரம்மாண்டமான சரீரத்தில் ஒவ்வொரு மயிர்க்காலிலும் தன்னை அவமதித்தவனைப் பழி வாங்கிவிடவேண்டும் என்கிற தாகம் துருவிக்கொண்டு நிற்கும் என்றே நான் நினைத்தேன்.

ஆகையால் அவன் என்னை வந்து பார்க்கட்டும் என்று காத்திராமல் நானே அவனைப் பார்க்கச் சென்றேன். நான் எதிர்பார்த்தபடியே அவன் மிக ஆழமான பிரெஞ்சுச் சாந்தத்தினுள்ளே அமிழ்ந்திப் போய்க் கிடந்தான். பிரெஞ்சுச் சாந்தம் என்றேன். ஏனெனில் பிரெஞ்சுச் சாந்தத்துக்கும் நம் நாட்டுச் சாந்தத்துக்கும் சற்று வித்தியாசமுண்டு. அவன் அறை முழுவதும் அவனது தட்டு முட்டுகளின் உதைந்த துண்டு துணுக்குகள் அலங்கோலமாய்க் கிடந்தன. அவைகளுக்கிடையில் அவன் புனுகுப்பூனையைப் போல விடு விடு என்று நடந்து கொண்டிருந்தான். அப்போதைக்கப்போது அவன் அத்துணுக்குகளைக் காலால் எற்றி எறிந்துகொண்டு செல்வான். பல்லை நற நற வென்று கடித்துக் கொண்டு, யந்திரத்தினின்று மாவு உதிர்த்துவது போல வசவுகளைக் கொட்டிக்கொண்டே நடப்பான். மேஜையின் மீது அவன், அம்பாரமாக அடுக்கி வந்த ரோமப்போரின் மீது, இடைக்கொரு விசை நின்று தன் தலையிலிருந்து பறிக்கும் ஒவ்வோர் கொத்து மயிரை அவன் சேர்த்து வைத்துக் கொண்டு வருவான்.

இத் தகைய சாந்தத்தோடிருந்த காம்பெத்தா என்னைக் கண்டதும் தனது தொந்தியில் என்னை வளைத்து மார்புறத் தழுவி, இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டு, நாலைந்து முறை இறுகக் கட்டிக்கொண்டு பிறகு தன் நாற்காலியினுள்ளே என்னைத் தூக்கி வைத்து விட்டான். என் இனால் நின்று உடம்பு நிதானத்துக்கு வந்ததும் காரியத்தினுள் பிரவேசித்தோம்.

இப் போரில் நான் துணையாக நிற்க வேண்டும் என்பது உன் விருப்பமாக இருக்கும் என நான் நம்புகிறேன் * என்றேன். 'சந்தேகமென்ன அதிலே? என்றான் காம்பெத்தா.

அவன் மரணசாசனம் எழுதி முடித்ததும் எதிரியால் அடிபட்டுக் கீழே விழும்போது என்ன, வார்த்தைகள் சொல்லிக்கொண்டு விழுதல் கௌரவமாக இருக்கும் என்று யோசிக்கத் தலைப்பட்டான்.

'ஈசுவரனுக்காக, என் நாட்டுக்காக, பேச்சுச் சுதந்திரத்துக்காக, மனித ஜாதியின் அபிவிருத்திக்காக, மனிதனுடைய சர்வ சகோதரத்துவத்துக்காக 'உயிர் துறக்கிறேன்!'

என்ற இவ் வார்த்தைகளைச் சாம வார்த்தைகளாகச் சொன்னால் எவ்வாறிருக்கும் என்று என்னைக் கேட்டான்.

இவ் வார்த்தைகளைச் சொல்லுவதானால் சாவு வெகுநேரம் இழுக்குமே என்று ஆக்ஷேபித்தேன். க்ஷுபரோகக்காரன் வாயில் அது பொருத்தமாக இருக்கலாம், ஆனால் மான பூமியான ரணகளத்துக்கு அது ஒவ்வாதே என்றேன். மாண பூர்வ வாக்கியங்கள் பலவற்றைப் பற்றித் தர்க்கித்த பிறகு, கடைசியாக அரும்பாடுபட்டுப் பிரான்ஸு வாழ்வதற்காக நான் உயிர் விடுகிறேன் என்ற

* துணை — துவந்துவ யுத்தத்தில் இகலுவோர் ஒருவரோடொருவர் பேசுவதாவது ஒருவர்க் கொருவர் எழுதிக்கொள்வதாவது இடையாது. ஒவ்வொருவனும் ஓர் துணையை (ஸெகந்து) தெரிந்தெடுத்துக் கொள்வான். இவ் விரு துணைவருமே ஆயுதங்கள், இடம், நேரம் முதலிய சகல விஷயங்களையும்பற்றித் தீர்மானிப்பார்கள்



பூட்டுக்கு மரண வாக்கியத்தை வெட்டி விடும்படி செய்தேன். அவனும் அதைப் பாராமல் படித்துக் கொள்ளுவதற்காகத் தன் குறிப்பில் எழுதிக் கொண்டான்.

இந்த வாக்கியம் சந்தர்ப்பத்துக்கு ஏற்றதாக இல்லையே என்றேன். ஆனால் இறுதி வாக்கிய விஷயத்தில் சந்தர்ப்பம் பெரிய தில்லை என்றும், அதற்குப் பகட்டுத்தான் அவசியம் என்றும் சொன்னான்.

அதற் கடுத்தாப்போல் ஆயுதத்தைப் பற்றிக் கவனிக்க வேண்டுமன்றோ? எனது முதலாளிதனக்கு உடம்பு சௌக்கியமில்லை என்றும், இதையும் மற்ற விஷயங்களையும் பற்றி நானே கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லி விட்டான். ஆதலால் பூர்த்துவின் துணைக்கு ஒரு கடிதம் எழுதி நானே அதை அவனிடம் கொண்டு போய்க் கொடுத்தேன். அது பின் வருமாறு:

ஐயா:—மு. பூர்த்துவின் இகலை மு. காம்பெத்தா ஏற்றுக்கொண்டு, பிலெஸி-பிக்கேவைப் போர்ப் பூமியாக நியமிக்கும்படி எனக்கு ஆணையிட்டிருக்கிறார்; நேரம் நாளைக் காலை சூரியோதயம்; ஆயுதங்கள் கோடரிகளாகும்.—இங்ஙனம் தங்கள் மதிப்புள்ள மார்க்கு துவெயின்,

மு. பூர்த்துவின் துணைவன் இந்த லிகிதத்தைப் படித்ததும் நடு நடுங்கினான். உடனே,

"ஐயா இத் தகைய மல்லின் பயன் என்னவாம் என்று கருதினீர்"

என்று கடுமையான சுவரத்தில் என்னைக் கேட்டான்.

'சரி, பார்க்கலாம், என்னதான் ஆகும்?

'என்னவா?' இரத்தம் பெருகுமன்றோ?'

'விஷயம் அதுதான். ஆனால் கேட்பது மரியாதை இல்லை என்றுவதானால், உங்கள் கட்சி என்னத்தைப் பெருக்க உத்தேசித்துக் கொண்டிருந்ததோ?

அகப் பட்டுக் கொண்டார் திம்மட்டிப்பட்டார். உளறிவிட்டோமே என்று நினைந்து கொண்டு சொல்லிய வார்த்தையை வெழு மூட்டி யெறிய முயன்றார் நம் துணைவன். பரிகாசத்துக்காகக் கேட்டேன் என்று சொல்லி விட்டு, தானும் தன் முதலாளியும் கோடாரியையே பெரிதும் விழைவார்கள் என்றும் ஆனால் பிரெஞ்சு சட்டத்துக்கு அவை விரோதம் என்றும், ஆயுதத்தை மாற்ற வேண்டுமென்றும் அவர் சொல்லி முடித்தார்.

சற்று நடந்துகொடுத்துக்கொண்டு விஷயத்தை ஆழ்ந்து கருதலானேன். பதினைந்து தப்படி தூரத்தில் காத்லிங் பீரங்கிகளைக் கொண்டு போர் செய்வதே மான பூமியில் கௌரவமான முடிவு காத்தக்க வழியாகும் எனத் தோன்றிற்று. அவ் வெண்ணத்தை எதிரியின் துணையிடம் சொன்னேன்.

ஆனால் அது ஏற்றுக் கொள்ளப் படவில்லை. சட்டம் அதற்கும் குறுக்கே நின்றது. சுழி குழற் துப்பாக்கிகள் (ரைபிள்) உபயோகிக்கலாம் என்று பார்த்தேன். பிறகு இரட்டைக் குழாய்த் துப்பாக்கிகள் சிபாரிசு செய்தேன். அதன் பிறகு கப்பற் படையில் உபயோகிக்கப்படும் கோல்த் துச் சுழற் துப்பாக்கிகளாவது இருக்கட்டும் என்றேன். ஆனால் இவை யனைத்தையும் எதிரி திரஸ்கரித்துத் தள்ளி விடவே சற்றுயோசித்துப் பார்த்துவிட்டு முக்கால் மைல் தூரத்தில் நின்று கொண்டு ஓட்டாஞ்சல்லிகள் விட்டெறியலாம் என்று ஹாஸியமாய்ச் சொன்னேன். ஹாஸிய உணர்ச்சியில்லாத ஒருவனிடம் ஹாஸியம் தன்னைப் பிரயோகித்து வியர்த்தமாக்குவதனைக்குப் பிடிப்பதே யில்லை. ஆகவே இந்தப் பிரேரணையை

தன் வீரனிடம் சொல்லிப் பதில் கேட்டு வருகிறேன் என்று அவன் மூட்டை கட்டிக்கொண்டு போவதைப் பார்க்கும் போது எனக்கு வயிறு எரிந்தது.

அவன் சீக்கிரம் திரும்பித் தன் முதலாளி முக்கால் மைல் தூரத்தில் நின்றுகொண்டு ஓட்டாஞ் சல்லி விட்டெறியும் உத்தேசத்தைப் பெரிதும் விழைவதாகவும், ஆனால் இதில் சம்பந்தமில்லாத போகிறவர் வருகிறவர்களுக்கு அப்போர் அபாயம் தரக்கூடியதாதலால் அதை மறுத்து விட்டதாகவும் சொன்னான். அப்போது நான்,

'ஐயா, சங்கதி என் ஆழத்துக்கு மேல் போய் விட்டது. எனக்கு இவ் விஷயம் அண்டவில்லை. தாங்கள் ஓர் ஆயுதத்தைக் குறிப்பிடலாமா? ஒரு வேளை தங்கள் மனதில் ஏற்கெனவே குறித்து வைத்துக்கொண்டே யிருப்பீர்'

அவன் முகத்தில் ஒளி தோன்றிற்று. 'ஆம் வைத்துக் கொண்டுதான் இருக்கிறேன்'. என்றான். அவ்வாறு சொல்லிக் கொண்டே சட்டைப் பையெல்லாம் தேடத் தலைப்பட்டான்—எத்தனை பைகள்!—

கடைசியாக அவனுக்கு அகப்பட்டது. மார்ச் சட்டைப் பையினின்று இரண்டு சிறு பொருள்களை எடுத்துக் கீழே வைத்தான். வெளிச்சத்தில் கொண்டு போய்ப் பார்த்த பிறகு அவை கைத்துப்பாக்கிகள் என்று கண்டேன். அவை ஒற்றைக் குழலுள்ளவையாய், கைக்கு அடக்கமாய் வெள்ளிப்பிடி வைத்தனவாய் இருந்தன. அவைகளைக் கண்டதும் என் மனம் பரவசமாகி விட்டது—பேச நா எழவில்லை. அவற்றில் ஒன்றை வாய் பேசாமல் எடுத்துக் கடிகாரச் சங்கிலியில் மாட்டிக் கொண்டு மற்றதை எதிரியின் துணையிடம் கொடுத்தேன். அவனும் சுருட்டி யிருந்த ஓர் தபால் முத்திரையைப் பிரித்து அதனுள்ளிருந்த பல மருந்துக் கார்த்தூஸ்களில் ஒன்றை எடுத்து என்னிடம் கொடுத்தான். ஒரே ஒரு கேப்புத்தான் உபயோகப் படுத்துவது உமது இச்சையோ என்றேன். பிரெஞ்சு சட்டத்தில் ஒன்றுக்கு மேல் உபயோகிக்கக் கூடாது என்றான். சரி, நீரே தூரத்தைக் குறிப்பிடும் என்றேன். ஏனெனில் இந்த வார்த்தைகளை யெல்லாம் கண்டு என் தலை கிறுக்கேற்று. 'அறுபத்தைந்து கஜம் தூரம் இருக்கட்டும் என்று கூறினேன். 'ஐயா ஐம்பது கஜம் தூரத்தில் தீபாவளித் துப்பாக்கி இதை விட அபாயகரமாக யிருக்குமே? சற்று யோசித்துப் பாரும்; உயிரை வாங்குவதற்காக இக்கப் போர் தொடங்கப் படுகிறதா, அல்லது நமது முதலாளிகள் சிரஞ்சீவிகளாக இருக்க வேண்டும் என்று தொடங்கப் படுகிறதா? என்று கேட்டேன்.

ஆனால் எத்தனை சொல்லியும் அவன் முப்பத்தைந்து கஜத்துக்குக் கீழ் ஒரு அங்குலம் கூட இறங்க மாட்டேன் என்று சொல்லி விட்டான். இதற்கும் வெகு சலிப்புடன்தான் இணங்கினான். பெரு மூச்சு விட்டுக் கொண்டு,

'இந்தக் கொலை சம்பந்தமாக நான் கையைக் கழுவி விட்டேன்; அதன் பழி உம்மையே சாருக!' என்றான்.

இனி என் சிங்கத்தினிடம் சென்று இம் மானக்கேடான ஏற்பாடுகளைப் பற்றிச் சொல்லுவது தான் காரியம் என்று நினைத்து திரும்பினேன். அறையினுள் நான் பிரவேசிக்கையில் அவன் வேடியின் மீது தன் தலையிலுள்ள கடைசி ரோமக் கற்றையை வைத்துக் கொண்டிருந்தான்.

என் புறம் தாவி,

'உன்னைக் காணும் போதே தெரிகிறதே, யுத்த ஏற்பாடுகளெல்லாம செய்தாகி விட்டாயா?'



என்று கேட்டான்.

'ஆம், செய்தாகி விட்டது.'

அவனது முகம் சற்று வெளுத்தது. தாங்கலுக்கு மேஜையைச் சற்றுப் பிடித்துக் கொண்டான். ஒரு விநாடி இரண்டு விநாடி நேசகாலம் புஸ் புஸ் என்று பெரு மூச்சு விட்டான். அவன் இதயத்தில் அத்தனை குழப்பம் இருந்தது. பிறகு கரகரப்பான தொண்டையோடு என் காதில், 'ஆயுதம்! ஆயுதம்! சடிதி, என்ன ஆயுதம்?' என்று ஓதினான்.

இது தான்! என்று சொல்லிக் கொண்டு, வெள்ளிப் பூண் போட்ட அந்தப் பொம்மைத் துப்பாக்கியை எடுத்துக் காட்டினேன். அதைக் கடைக்கணித்தானோ இல்லையோ,

அப்படியே மயங்கி மலை போலச் சாய்ந்து விட்டான்.

பிரக்ஞை வந்ததும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு,

இயற்கைக்கு விரோதமாக மனதை அடக்கிக் கொண்டு சாந்தமாக இருந்தேனே அது என்னை அயர்த்தி விட்டது, ஆனால் அதிக பலஹீனம்! என் தலை விதியை மனிதனைப் போலவும் பிரெஞ்சுக்காரனைப் போலவும் அநுத்துார்வேன்' என்று சொல்லிக் கொண்டு நின்றான். அவன் நின்ற நிலை யின் காம்பீரியம் மனிதனுக்கு எட்டாது—சிலைகள் கூட அதை வெல்வது அரிது. பிறகு அவனுடைய ஆழமான ஷட்ஜஸ்வரத்தில்,

'பார், சாந்தமாக நிற்கிறேன். ஆயத்தமாக இருக்கிறேன், தூரம் எவ்வளவு, உரைத்திடுவாய்!' என்றான்.

'முப்பத்தைந்து கஜம்'......

பெருக்க அவனைத் தூக்க முடியவில்லை. ஆனால் அவனை உருட்டி விட்டு முதலில் பச்சை ஜலத்தை விட்டுப் பிரக்ஞை தெளிய வைத்தேன். அவனும்,

'முப்பத்தைந்து கஜமா?—ஆனால் ஏன் கேட்க வேண்டும்? அந்தக் கிராதகன் கொலை செய்து விட வேண்டும் என்றே உத்தேசித்திருக்கிற போது இச் சிறிய விஷயங்களைப் பற்றி அவன் யோசிப்பானேன்? ஆனால் ஒன்று மாத்திரம் சொல்லுவேன், நான் உயிர் துறக்கையில் பிரெஞ்சு தீரர்கள் எவ்வாறு உயிர் துறக்கிறார்கள் என்று உலகம் அறிந்து கொள்ளும்.'......

கடைசியாக காலை ஒன்பதரை மணிக்கு ஊர்கோலம் புறப்பட்டது. முதலில் எங்கள் வண்டி வந்தது— அதில் காம்பெத்தாவையும் என்னையும் தவிர வேறொருவரும் இல்லை. அதற்குப் பின்னே மு. புர்த்துவும் அவனது துணையும் ஓர் ரதத்தில் வந்தனர். அவர்களுக்குப் பிறகு தெய்வத்தினிடம் நம்பிக்கை யில்லாத இரண்டு பிரசங்கிகள் வந்தனர். இவர்கள் எதற்கு என்று கேட்பீர்கள்—நம் வீரர்களில் ஒருவர் சாய்ந்ததும் அவர்களைப் பற்றிச் சரம கவிகள் பாடுவதும் சரம பிரசங்கம் செய்வதுமே அவர்களது காரியம். அவர்கள் மரணப் பிரசங்கங்களை எழுதி அவை யெழுதப் பட்ட காகிதங்களை உட்சட்டைப் பையில் செருகி வைத்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னே தலைமை ரணவைத்தியரும் அவர்களது ஆயுதப்பெட்டிகளும் வந்தன. அவர்களுக்கடுத்தாப் போல் எட்டு சாதா வைத்தியர் தங்கள் சொந்த வண்டிகளில் ஏறி வந்தனர். அவர்களுக்கும் பின்னால் அகால மரணத்தை விசாரிக்கும் ஓர் உத்தியோகஸ்தன் குதிரை மீதேறி வந்தான். அவனுக்குப் பின்னே இரண்டு பாடைகளும், பிணந்தூக்கிகளும் பிறரும். எல்லாவற்றிற்கும் பின்னே ஓரே மூட்டமாய் மூடியிருந்த

மூடுபனியைத் துளைத்துக் கொண்டு இவர்களுடைய கையாட்கள், தலையாரி ஊர் ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து பெருங்கூட்டமாய் வந்தனர். கூட்டம் வெகு ரசிகயாக இருந்தது—வெளிச்சம் மாத்திரம் இருந்திருந்தால் காட்சி நேத்திரானந்தமாயிருந்திருக்கும்.

பேச்சு மாத்திரமில்லை. என் ஜோடியோடு பேசப் பலதடவை முயன்று பார்த்தேன்—ஆனால் நான் சொல்வது அவன் காதில் விழவில்லை எனநினைக்கிறேன்— அடிக்கொருவிசை தனது குறிப்பை எடுத்துப் பார்த்துக் கொண்டு பிரான்ஸ் வாழ்வதற்காக உயிர் துறக்கிறேன் என்று உருப் போட்டுக்கொண்டு வந்தான்.

களத்துக்கு வந்ததும் நானும் எனது ஜோடியும் முப்பத்தைந்து கஜம் அளந்து ஸ்தான நிர்ணயம் செய்வதற்காக சீட்டுக் குலுக்கினோம். ஆனால் அந்த அந்தகாரத்தில் யார் எங்கே நின்றால் தான் என்ன? ஆகையால் சீட்டுக் குலுக்கினது கேவலம் சம்பிரதாயார்த்தமே யொழிய வேறில்லை.

லாந்தலை வைத்துக்கொண்டு துப்பாக்கிகளைக் கெட்டித்தோம். பிறகு எங்கள் வீரர்களை அவரவர்கள் ஸ்தானங்களில் நிறுத்தினோம்.

அந்தச் சமயத்தில் அங்கு கூடிய ஜனங்கள் எமது வீரர்களது வலதுபுறமும் இடதுபுறமும் நின்றதைத் தலையாரிகள் கண்டனர். அவர்களைப் பத்திரமான இடத்தில் நிறுத்துவதற்காகத் தலையாரிகள் சற்றுத் தாமதம் கேட்டனர். தாமதம் கொடுக்கவும் பட்டது.

தலையாரிகள் ஜனங்களை எங்கள் வீரர்களின்பின் புறம்நிறுத்தியதும் * நாங்கள் மறுபடியும் ரணத்துக்குச் சன்னத்தமானோம். அந்தகாரம் இன்னும் அதிகமாகிவிடவே, சுடுங்கள் என்று சமிக்ஞை சொல்லுமுன் ஓர் வீரன் எந்த உலகத்தில் என்று மற்றவனுக்குக் காட்டுவதற்காக ஒரு கூச்சல் போடுவது அவசியம் எனத் தலையாரிகளாகிற நாங்கள் தீர்மானித்துக் கொண்டோம்.

இவ் ஏற்பாடுகளெல்லாம் செய்து விட்டு என் வீரனிடம் வந்தபோது அவன் உற்சாகமற்றிருப்பதைக்கண்டு வருந்தினேன். அவனை உற்சாகப்படுத்த ஆனமட்டில் முயன்றேன். சொன்னேன், 'ஐயா' பார்வைக்கு எப்படியிருந்தாலும் உண்மையில் பயப்படுவதற்கு அத்தனை காரணம் இல்லையே. ஆயுதங்களின் தன்மையைப் பார்க்கையில், ஓரே கார்த்தூஸ்தான் உபயோகிக்கப்படும் என்பதை நோக்குகையில் இன்னும் தாராளமான தூரத்தையும் மூடுபனியின் கனத்தையும் கவனிக்கையில், இது மாத்திரமா, ஒரு வீரன் மற்றைக் கண்ணாகவும் மற்றவன் வாணக் கண்ணாகவும் சமீப திருஷ்டனாகவும் இருக்கும் போது இந்தப் போரில் மரணம் ஏற்பட்டுத்தான் தீரும் என்பதற்கில்லை. நீங்கள் இருவரும் இந்தப் போரினின்று உயிரோடு மீளுவீர்கள் என்பதற்கு மிட முண்டு. ஆதலால் மனம் தேறிக் கொள்ளும், கவலையை விடும்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் என் வீரன் கவலை நீங்கினான். ஏனெனில் என் பேச்சு நின்றதும், 'எனக்குப் பிரக்ஞை வந்துவிட்டது. ஆயுதத்தைக் கொடு!' என்றான்.

அவனுடைய விஸ்தீரணமான அங்கையின் மத்தியில் நான் கொடுத்த அந்தத் துப்பாக்கி ஏகாந்தமாக —தன்னந்தனியாக ஒரு கொசுவைப் போல நின்றது! அதைப் பார்த்ததும் அவன் நடுங்கினான். சோகம் நிறைந்த முகத்தோடு அதைப் பார்த்துக்கொண்டு 'சாவுக்காக அல்ல நான் பயப்படுகிறது—சரீரம் விகாரமாகி விடுமே என்றே பயப்படுகிறேன்,' என்றான்.

* வீரர்கள் குறியில் அவ்வளவு புலிகள்



மறுபடியும் அவனை உற்சாகப்படுத்திய பின் பயனாக, 'இந்த கோர நாடகம் துவங்கட்டும். என் பின் புறம் நிற்பாய்—நண்பனே இந்த பயங்கரமான சமயத்தில் என்னை கைவிட்டு விடாதே என்றான்.

அப்படியே நிற்கிறேன் என்று வாக்களித்து, எதிரி நிற்க வேண்டும் என்று எதிர் பார்க்கக் கூடிய இடத்தை நோக்கி என் வீரனது துப்பாக்கியை இலக்கு வைத்துக் கொடுத்ததுடன், என் ஜோடி போரிடும் கூச்சலையும் உற்றுக் கேட்டுத் துப்பாக்கியைச் சுட வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தேன். அவ்வளவுதான் உடனே, காம்பெத்தாவின் முதுகில் நன்றாய்ச் சாய்ந்துகொண்டு ஓ—ஓய் என்று அண்டங்கள் நடுங்கும்படி கூவினேன். எதிரியின் துணையும் இதற்கு ஜவாப்பாய் ஓர் கூச்சல் போட்டான். உடனே 'ஒன்று இரண்டு, மூன்று—சுடு' என்று கூவினேன்.

பிசுக்கு, பிசுக்கு என்று இரண்டு சிறு ஓசைகள் கேட்டது—அவ்வளவுதான், ஓர் மாம்ஸ மலை என் மேல் வீழ்ந்து என்னைச் சட்டினியாக்கிவிட்டது.

உடம்பெல்லாம் நசுங்கி நொந்து போயிருந்தாலும், உயர வெகு தூரத்திலிருந்து

'சாகிறேன்—அட இழவே' எதற்காகச் சாகிறேன்— ஆ, ஆம், பிரான்ஸுக்காக! பிரான்ஸு வாழ்வதற்காக நான் உயிர் துறக்கிறேன்!' என்ற வார்த்தைகள் என் காதில் லேசாக வீழ்ந்தன.

ரண வைத்தியர்கள் உடனே மொய்த்துக் கொண்டு பூதக் கண்ணாடியை வைத்து * காம்பெத்தாவின் உடல் முழுவதும் சோதித்துப் பார்த்தார்கள்—காயம் என்று சொல்லத் தகுந்தது ஒன்றும் காணப்படவில்லை என்ற சுப செய்தி எல்லோர்க்கும் தெரிந்தது. அதன் பிறகு நிகழ்ந்த சங்கதியை என்னென்று சொல்லுவேன்?

நம் வாள் வீரர் இருவரும் ஆனந்த பாஷ்பம் பெருக ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து கொண்டனர்; என் ஜோடி என்னை ஆலிங்கனம் செய்துகொண்டான்; ரண வைத்தியர், வாசாலகர் பிணந்தூக்கிகள், தலையாரிகள்—என் அனைவரும் பரஸ்பரம் ஆலிங்கனம் செய்துகொண்டார்கள், தன்யவாதம் கூறிக்கொண்டார்கள், ஆனந்தக் கண்ணீர் வடித்து ஆற்றினார்கள். அவ்விடத்து ஆகாயமே புகழாலும் பேசரிய ஆனந்தத்தாலும் நிரப்பிவிட்டது.

செங்கோலும் கிரீடமும் தரித்த அரசனாக இருப்பதினும் பிரெஞ்சு துவந்துவம் ஒன்றின் வீரனாக இருப்பதே உயர்ந்த பதவி என்று எனக்குத் தோற்றியது.

இந்தக் கெடுபிடி யெல்லாம் அமர்ந்த பிறகு அங்கிருந்த வைத்திய வர்க்கம் ஒருவரோடொருவர் கலந்து பேசிக்கொண்டு, பல ஆக்ஷேபனை சமாதானங்களெல்லாம் செய்தான பிறகு, வெகு ஜாக்கிரதையாகச் சிகித்சை செய்து சுசுருஷையும் செய்து வந்தால் நான் பிழைத்தல் அசாத்தியமில்லை என்று அபிப்பிராயம் கொடுத்தார்கள். என் வெளிக் காரியங்களை விட அந்தரிக காரியங்களே கொடியவையாயிருந்தன—ஏனெனில் விலா எலும்பு ஒன்று ஒடிந்து எனது நுரையீரலைத் தொளைத்து விட்டது—சிரைகளும் நாளங்களும் நசுங்கி பக்கம் மாறி ஏறிக் கொண்டன. என் கையை இரண்டு இடங்களில் சேர்த்துக் கட்டி, வலது சப்பையை இழுத்து யதாஸ்தானத்தில வைத்து, மூக்கையும் மேலே தூக்கி விட்டார்கள். என்னை யெல்லோரும் சூழ்ந்து கொண்டு வியந்தார்கள். நாற்பது வருஷ காலத்தில் பிரெஞ்சு துவந்துவ யுத்தத்தில் அடிபட்ட முதல் சூரன் என்று என்னுடன் கணக்கற்ற உற்சாகிகள் அறிமுகம் செய்துகொண்டனர்.

* Rontgen Rag.

அனைவரும் தரிசனை செய்யும்படி அன்னே ஊர்கோலத்தின் தலையில் வைத்து பாரிஸுக்குள் கொண்டு போய்ச்சேர்த்து வைத்தியசாலையில் அலங்காமல் இறக்கினார்கள்.

மானுபரணர் சிலுவை எனக்கு அளிக்கப்பட்டது. ஆனால் அதினின்று எத்தனைபேர் தப்புகிறார்கள்? *

# மனிதனுக்கு நல்லுணவு எது?

## (நீதிபதி இராமேசம் அவர்கள் சொற்பொழிவின் சுருக்கம்)

:[o]:

உலகில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் அளவு கடந்து உண்ணுகிறார்கள். அவர்கள் நாவிற்காக உண்கிறார்கள். வயிற்றிற்காக வில்லை. உணவில் தாது வர்க்கங்களும், மாவுப்பும், கொழுப்பும், இனிப்பும், சுண்ணாம்பும் இருக்க வேண்டும். இயற்கை ஆகாரத்தில் இவை மலிந்திருக்கின்றன. சமைத் துண்பது காலத்தை வீணாக்குவதே யாகும். தாது வர்க்கங்கள் மனித சரீரத்திற்கு இன்றியமையாதவை. இரத்தத்தில் புளிப்பு அதிகப் பட்டால் அதுவே வியாதியாகும், பலக் குறைவிற்கும் காரணமாகும். உப்பு வர்க்கங்கள் அதிகரித்திருப்பதே ஆரோக்கியமானது. ஆனால் மாக் கறிகளிலும் பழ வர்க்கங்களிலுமுள்ள இயற்கையான உப்புகளே இதமானவை. காய்ச்சப்பட்ட மண்ணுப்பாவது சமுத்திர உப்பாவது தீமை தரும். வியாதி கண்ணுக்குத் தெரியாத கிருமிகளால் (பூச்சிகளால்) [Microbes] உண்டாகிறதென்பது பிசகு. ஆனால் சரீரத்தில் அஜீரணம் முதலிய கெடுதல் இருந்தால்தான் வியாதிகள் உண்டாகின்றன. அப்பொழுதுதான் கிருமிகளும் நமது இரத்தத்தில் விருத்தியாக இட முண்டாகிறது. சரீர சௌக்கியமுள்ளவரை கிருமிகளால் ஒன்றும் கெடுதி செய்ய முடியாது. வியாதிகள் உண்டாகக் காரணம் நம்மிடத்திலேயே இருக்கிறது. நம்முடைய சரீரம் அசுத்தம் நிறைந்துள்ளதாயிருந்தால் அப்போதே வியாதிகள் உற்பத்தியாகின்றன. கிருமிகளும் காற்றும், மழையும் நமக்கு விரோதிகளாகின்றன. இல்லாதவரைப் புசல் காற்றும் மழையும் நம்மை ஒன்றும் செய்யாது.

சமுத்திர உப்பை விசேஷமாக உட்கொண்டு வருவதினாலேயே நம்முடைய சரீரத்திற்கு வேண்டிய அளவுக்கு மேற்பட்ட உப்பு உள்ளே படிந்து போய்விடுகிறது. அதை வெளிப்படுத்த சரீரம் எவ்வளவு முயற்சி செய்தும் சரிப்படவில்லை. ஒரு சீறல் காற்று அடித்ததும் இந்த உபரி உப்பானது மறுபடியும் இரத்தத்தில் கலந்து கொள்ளப் பார்க்கிறது. அதனாலேயே ஜலதோஷம், இருமல், ஜுரம் முதலிய நோய்கள் உண்டாகின்றன. இந் நோய்கள் மேலே கண்ட கெடுதியான பொருளை வெளிப்படுத்த வேண்டியே

* Cross of the Legion of honoar. (Croix de la legion d' honneur) இது ஓர் பிரெஞ்சு பட்டத்தின் சின்னம். இது யோக்கியதா யோக்கியதை பார்க்காமல் எல்லோர்க்கும் கொடுக்கப்படுகிறது என்று பரிகசிக்கிறான்.



160-206

கடவுளால் உண்டாக்கப்பட்ட வாயில்களாகும். (மாறு வேஷம் பூண்ட மகா தேவர்களாகும்). வியாதிகளைக் கண்டு பயப்பட வேண்டாம். நம்மிடம் அடைந்துள்ள கெடுதல்களையே வெளிப்படுத்த அவைகள் பிறக்கின்றன. பதார்த்தங்களை இயற்கையன்னை பக்குவம் செய்து கொடுத்த வண்ணமே புசிப்பது நன்மை பயக்கும். சமையல் நிலையிலே மனிதன் வீண் காலம் போக்கி ஆயுளைத் தின்பதிலேயே இட்டு வயிற்றிற்கு அடிமையாகிறான். சமையல் செய்யப்பட்ட உணவே தீங்கைத் தரக்கூடியதாகும். அதிக மஸ்தான போஜனங்களை உட்கொண்டதால் மாத்திரம் தேக சௌக்கியம் உண்டாக மாட்டாது. வயிறு எவ்வளவு ஜீரணிக்க முடியுமோ அவ்வளவே உட்கொள்ளுவதுதான் உடம்பிற்கு நலம் பயக்கும்; நோயற்ற வாழ்விற்கு வித்தாகும். அதற்கு மேல் ஆவலோடு நாக்கிற்கு அடிமைப்பட்டு உண்ணும் விருந்தும் வீணாகும்; சமயத்தில் விஷமாகும். உடல் சதை பெருத்திருப்பதனால் நல்ல சௌக்கியம் உண்டாகிவிட்டது என்று நினைக்கக் கூடாது. இரத்த சுத்தி பெற்றிருந்தாலே சுகாதாரத்தின் அறிகுறியாகும்.

"என்னைப் பார்த்து அநேகர் இவ்வளவு தெரிந்து கொண்டிருந்தும் அனுபவத்திற்குக் கொண்டு வந்தும் நான் இளைத்துப் போய் விட்டதாகச் சொல்லுகிறார்கள். இளைத்திருப்பதாலும் பெருத்திருப்பதாலும் காரியம் ஒன்றுமில்லை. இயற்கை உணவால் அதற்கு முன்னிருந்ததை விட நூறு பங்கு அதிகமான [illegible] மனத்திடமும் பெற்றிருக்கிறேன்" என்று ராமேசம் சொல்லுகிறார்.

மீன், மாமிசம், தானிய வர்க்கங்கள், பருப்பு வர்க்கங்கள் இவைகளில் இரும்பு அதிகமாயிருக்கிறது. ஆனால் இன்றியமையாத மா உப்பும் சுண்ணாம்பும் இல்லை. பால், பால்கட்டி, முட்டை, இவைகளில் மா உப்பும், சுண்ணாம்பும் மிகுந்து இருக்கின்றன. எண்ணெய் தினுசுகள், வெண்ணெய், பாலாடை, வெள்ளைச் சர்க்கரை, இவைகளில் இரும்பாவது மா உப்பாவது சுண்ணாம்பாவது இல்லை. மாமிசம், தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய்கள், வெள்ளைச் சர்க்கரை இவைகள் மிகுந்த தீங்கிழைக்கும் பதார்த்தங்களேயாம். ஆனால் பழ வர்க்கங்களும், மாக்கறிப் பொருள்களும், கோஸம்பரிகளும், இரும்பு மா உப்பு சுண்ணாம்பு முதலியவற்றை அதிகமாகப் பெற்றிருந்ததால் மேலான உணவுப் பொருள்களாகும். மாக்கறிப் பொருள்களைத் துண்டம் துண்டமாக நறுக்கி அவைகளில் புளிக்காத தயிரும் கலப்பது கோஸம்பரி. அல்லது பச்சைக் கறியும் எலுமிச்சம்பழ ரஸமும் மிளகு பொடியும் கலப்பதே கோஸம்பரி செய்யும்முறை. மேலும் மாக்கறிப் பொருள்களிலும் கனிவர்க்கங்களிலும் ஜீவ அணுக்களும் (Vitamines) சர்க்கரையும் இருக்கின்றன. இவைகளே சரீரத்திற்குச் சக்தி தரும் வஸ்துக்களாகின்றன. நாம் தினந்தோறும் உட்கொள்ளும் மாக் கறிப்பொருள்களோ சொல்பம். அவைகளையும் நாம் சரியாகப் பக்குவம் செய்வதில்லை. அதிகத் தண்ணீரில் அவைகளை வேகவைத்துத் தண்ணீரை வடிய வைத்து விடுகிறோம். அம் மாதிரி செய்வதால் [illegible]ள்ள பொருள்களும் இயற்கையான உப்புகளும் வீணாகப் போய்விடுகின்றன. பழங்களை நாம் மிதமாய் உபயோகிக்கிறோம். அவை [illegible] தப்பாக எண்ணுகிறோம். இயற்கை யுணவை வெறுப்பதால்தான் நமக்கு வியாதிகள் தடையின்றி வருகின்றன.

கேப்பை (கேழ்வரகு) நல்ல உணவுப் பொருளாகும். ஏனெனில் அதில் சரீரத்திற்கு இன்றி

யமையாத தாது வர்க்கங்கள் இருக்கின்றன. ஆனது பற்றியே அநேகம் வியாதிக்காரர் முக்கியமாய் நீர் அதிவு காசம் முதலிய நோய் உள்ளவர்கள் கேப்பையைச் சாப்பிடுவது நல்லதெனச் சிறந்த மருத்துவர் கூறுகின்றனர். (இப்படிப் பட்ட உத்தமமான கேப்பை தற்காலத்தவருக்கு இளப்பமாக இருக்கிறது. "என் மகன் காசத்தால்கிடந்தபொழுது கேப்பையைத் தான் சாப்பிட்டான். நானும் ஒரு வேளை கேப்பைசாப்பிடுகிறேன்" என்று ரமேசம் சொல்லுகிறார்.

மேலும் வெள்ளைச் சர்க்கரை, மண்ணுப்பு, சமுத்திர உப்பு, மிளகாய், மிளகு மஸாலை, முதலிய காரப் பொருள்கள் தேகத்திற்கு மிகவும் கெடுதலை விளைவிக்கும். அவற்றை அதிகமாக உட்கொண்டால் நிச்சயமாகக் கொடிய தீங்கிழைக்கும். ஏனெனில் நரம்புகளை அவைகள் சவுக்கடித்தாற் போல அதிக வேலை செய்யும்படி தூண்டுகின்றன. ஆதலால் அளவுக்கு மிஞ்சி சாப்பிடும்படி ஏற்படுகிறது. மேலும் ஜீரணக் கருவிகளை அவைகள் அதிக வேதனைக்குள்ளாக்குகின்றன மேலும் அவைகள் போஜன பதார்த்தங்களும் ஆக மாட்டா. அவைகளே தொந்தியைப் பெருக்கச் செய்கின்றன. சிலரை மெலிந்து போகும்படி செய்கின்றன. ஓயாத தண்ணீர் விடாயை உண்டாக்கிவிடுகின்றன. பல வியாதிகளுக்கும் காரணமாகி பலத்தைக் குறைக்கின்றன.

பால் சிறந்த உணவே. அதிலும் காய்ச்சாத பாலே சிலாக்கியமானது. தீட்டின அரிசி, முட்டை மீன், மாமிஸம், புளி, இவைகள் கொடிய நோயை உண்டாக்கும். கேப்பையும் வெள்ளாட்டுப் பாலும் மிகவும் நல்லது. வியாதிகளைத் தடுக்க வேண்டுமானால் மருந்துகளை உள்ளுக்குச் சாப்பிடுவதாலும் ஊசிகொண்டு குத்திக்கொள்வதாலும் (Injection) ஆக மாட்டாது. சூரிய வெளிச்சத்தாலும் சுத்தமான காற்றினாலும் எல்லாவற்றையும்விட சரியான ஆகாரத்தினாலுந்தான் நோய் தீர முடியும்.

தானிய வர்க்கங்களும் பருப்பு வகைகளும் தேங்காய் முதலிய கொட்டைப் பொருள்களும் குறைவாகவே உபயோகிக்கப்பட வேண்டும். புதிதான பழங்களையும் மாக்கறிப் பொருள்களையும் விசேஷமாய் உபயோகித்து வரவேண்டும். இப்படிச் செய்து வந்தால் நாளடைவில் மண்ணுப்பையே விலக்கிவிடலாம். இதுவே சுகத்தைத் தரும் உபாயம். உணவான பழ வகைகளையும் சிறிது கொட்டைகளையும நன்றாக மென்று உண்டு, நல்ல காற்றும், வெய்யிலும், பட வாழ்வதே நோயற்ற வாழ்விற்கு வித்தாகும்.

## கண் பறிகொடுத்த புலப்பம்

இருண்டு கிடக்குமிப் பேருலகில் எனக்கிட்ட காலத்தி லொரு பகுதி செல்லு முன்னரே என் விளக் கவிந்த கொடுமையையும், பயன்படுத்த வொண்ணுமலும் பயன் படுத்தாவிடில் என்னையே



...தப்பனதுவுமான இந்த ஒரே கொடையை ஈசன்என்வசமீந்தருளியவிந்தையையும், இவ்வாறு என்னையாக்கியோனது திருத்தொண்டிலேயே இக் கொடையைச் செலவிட்டுக் கேட்குநாளில் ஒழுங்கான கணக்குங் கொடுத்து ஆண்டவனது கோபத்துக்குப் பாத்திரனாகாது தப்பவேண்டுமேயென்று என்னாவி யஞ்சுவதையும், ஆய்ந்தோய்ந்து பார்க்கும் நேரமெல்லாம், மடமையிற் பிறந்ததோர் கேள்வி என்னுள்ளத்தே யெழும் "வெளிச்சத்தையும் வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டு உனக்கிட்ட வேலையை ஏன் முடித்தாயில்லை என உறுக்குவானோ ஒரு கடவுளோ?

ஆனால் அந்தக் காலிலேயே பொறுமை பெறு மூண்மைக் காவலன் இம் முறையிடு முனைவிளம்பு முன்னர் விடையுமளிப்பான்: "ஈசனுக்குமனிதன் செய்தாகவேண்டிய தொன்றுமில்லை. எடுத்துக் கொள் என்று கொடுத்து விட்டதற்குக்கணக்குக் கேட்டாகவேண்டியதுமில்லை- நம் சக்தியறிந்து அவன் நம் தலையில் நோகாது வைக்கும் அற்பச் சுமையை உள்ளங் குளிர்ந்தேற்றுக்கொள்பவரே அவனது உண்மைத்தொண்டர். அவனது வைபவம் ராஜவைபவம். அவனாணையைச் சிரமேற் கொண்டு, பூ ஜலமண்டலங்களைத் தாண்டிச் சலியாது பறந்து செல்லும் ஊழியர் ஆயிரக்கணக்காயுளர்—ஆயினும் ஆங்கு கைகட்டி வாய் புதைத்துச் செவி சாய்த்து சும்மா நிற்குமவரும்ஊழியரே."

மில்தன்.

## தன்னயம் விடுத்த நாவலர்

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரால் எழுதப்பட்டது)

———:[o]:———

*நலத்தாற் புவிமனதன் நாடிபுகு நல்லோன்*
*இலனுவன் கூற்றின் இரை*

காற்றும் புனலும் கசிந்துருகுகின்றன. இந்தியாவின் கண்ணீரும் கம்பலையும் அவற்றை எதிர்க்கின்றன. தந்திக் கம்பிகளெல்லாம் 'தேசபந்து தேசபந்து' என்று இடைவிடாது ரீங்காரமிடுகின்றன. தபால்காரன் கையிலுள்ள சலங்கைத்தடி தேசபந்துவின் பெயரையே ஒலிக்கிறது. உலக் முழுதும் "சிறந்தவன்! தீனரக்ஷகன்! வங்காளத்தின் முடி சூடாமன்னன், தியாகமூர்த்தி, பாரத நாட்டின் சீரிய அணி, தேசபக்த சிங்கம், தன்னயம் விடுத்த துறவி, ஏழைகளின் தோழன், வறிஞரின் செல்வம்! கலைமகளின் அருமை மைந்தன்! மற்றொரு திலகன்! மஹாத்மாவின் வலதுகை! சுதியாசன்! என்று துதித்த வண்ணமாயிருக்கிறது! நற்குணப் பண்புப் பெயர்கள் அனைத்தும் தாஸரையே தழுவி நிற்கின்றன! தீனபந்துவின் பூதவுடல் அவர் எதற்கு உழைத்து வந்தாரோ அந்த மண்ணோடு கலந்து விட்டது. அவர் புகழுடலே நம்முன் நிற்கிறது. அப் புகழுடலின் நாடிகளே அவருடைய தியாகம், தலையே அவர் நாட்டன்பு. சித்தரஞ்சன தாஸரின் பொய்யுடல் இனி வரப்போவதில்லை. புகழுடல் இனி

போகப் போவதில்லை. எது உண்மை? மனிதனுடைய தர்மமா அதர்மமா நாம் அறிவோம்.

* * *

கல்கத்தா நகரில் ருஸாரஸ்தாவில் ஒரு மாளிகை யுள்ளது. அதைச் சுற்றி இன்று வலுத்த கூட்டமாயிருக்கிறது. பெரிய ஜனங்கள் வியந்து வியந்து ஆரவாரிக்கிறார்கள். புன்னகையல் மலர்ந்த திருமுகமும், இனிய இன்சொல்லும், மனதைக் கவர்ந்தக்க தோற்றமு முள்ள ஒரு அழகன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து, வந்தவர்களிடம் சில உறுதிச் சீட்டுகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, பணத்தைப் பிடி பிடியாக எண்ணித் தந்து கொண்டிருக்கிறான். "எவ்வளவு பெருந் தன்மை! தந்தையின் மானத்தை யாரே இப்படிக் காப்பாற்றினார்! பாபு பூபன் தாஸ் எங்கு எந்து இளைத்துக் கடனாளியாகி, கடன் கொடுக்க முடியாது நீதிமன்றத்தில் கடன் விடுதலை யடைந்தான். அவர் திருமைந்தன், தந்தையின் பெருங் கடனைத் தீர்க்கிறான். என்ன அருமை! உலக சரித்திரத்தில் இதுதான் இத்தகைய முதல் உதாரணம் என்று நீதிபதி ப்ளெட்சரே கூறுகிறார்" என்று ஜனங்கள் பலவாறு புகழ்ந்து பொங்குகிறார்கள். இப்படிப் புகழப்பட்டுச் சாய்வு நாற்காலியில் விளங்குபவரே நமது சித்தரஞ்சன தாஸர்.

நமது தாஸர் செல்வ மரபில் உதித்தனர். அவர் மரபினர் ஒரு காலத்தில் சிற்றரசராகக்கூட இருந்ததுண்டு. இம்மரபில் பாபு பூபன் மோகன தாஸர் என்ற ஒரு தாராளர் உதித்தார். இவர் கல்கத்தா நீதி மன்றத்தில் ஒரு அட்டர்னியாகி ஜீவனம் செய்து வந்தார். பிரம்மோ பப்ளிக் ஒபினியன், வங்காளப் பொது எண்ணம், என்ற உ பத்திரிகைகளையும் நடத்தி வந்தார். தன் வேலையில் அதிகமாக ஈட்டி அளவுக்கு மிஞ்சிச் செலவழித்தார். பல இளைஞர்களைத் தாங்கினார். பல ஏழைகளின் வறுமையை நீக்கினார். ஆனால் தானே வறியரானார். சந்தனக் குறடு தேய்ந்தாலும் கந்தம் குறைவுபடுமோ? தனது வறுமை நிலையிலும், கற்பகக் கையனாகிய பூபன் பாபு வருவோர்க்கு வறியாது கொடுத்து வந்தான். தன் நிலைமைக்கு மேல் கடன் வெள்ளமாய் ஏறிற்று. தன் கடன்பட்ட நெஞ்சைக் கடன்காரர்கள் பின்னும் கலக்கித் வாட்டுவித்தலே, வேறு வழியின்றி பூபன்பாபு நீதிமன்றத்தில் கடன் விடுதலைக்கு வேண்டுகோள் செய்துகொண்டான். கடன் விடுதலைச் சட்டம் நீட்டிய கைகள் ஈகை வீரத்தால் இளைத்த திருக் கைகளை அறிந்து நீதிபதி பூபன்பாபுக்குக் கடன் விடுதலை செய்தார். காலநீத்ந்த கடனுக்குக் காப்புச் சான்றிடைத்தது.

பூபன்பாபுக்கு மக்கட்பேறு மலிந்திருந்தது. அம் மகனருள் சூரியன் போல் விளங்கினவரே நமது சித்தரஞ்சனர். சித்தரஞ்சனரின் சகோதரர்களிலொருவரான பி. ஆர். தாஸ் என்பவர் பாட்னா உயர்தர மன்றத்தில் நீதிபதியாயிருந்தார். எஸ். ஆர். தாஸ் என்பவர் கல்கத்தாவில் அட்வொகேட் ஜெனரல். தாஸின் இரண்டு சகோதரிகளும் ஒற்றுமையாமைக்காகப் பாடுபட்டுநின்றனர். பாபுபூபன பிரம்ம சமாஜத்தன். ஆனால் சித்தரஞ்சனர் இந்து மதத்தையே தழுவினார்.

தாஸரின் குலவிளக்காய் உதித்த சித்தரஞ்சனர் தன் குலத்திற் குரிய நற்குண மனைத்தையும் பொருந்தி, தைரியமும், அன்பும், இரக்கமும் ஊக்கமும், சுறுசுறுப்பும், கூர்மதியும், சொல்வன்மையும், நிகரற்ற ஈகைக் குணமும் கொண்டு விளங்கினார். அக்காலத்தில் உயர்வெனக் கருதப்பட்ட ஆங்கிலக் கலைக்கடலை எளிதிற் கடந்தார். பவானிபுரம் லண்டன் மிஷன் பள்ளிக்கூடத்தில் தொடங்கி கல்கத்தா மகாராணிக் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்றார். தன் மதிப்பை உயர்ந்த உத்தியோகத்தினால் உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு நமது தாஸர் இங்கிலாந்து



சென்று ஐ.ஸி.எஸ். பரீக்ஷைக்காகப் படிக்கத் தொடங்கினார். ஆனால் அவர் பாரிஸ்டர் பரீக்ஷையிலேயே தேர்ந்தார்.

அப்போதுதான் தாஸர் மனதில் இயற்கையாக விதைக்கப்பட்டிருந்த நாட்டன்பு அரும்பி மலர்ந்துகொண்டிருந்தது. அச் சமயம் பாரத மாதாவின் சுதந்திரச் சங்கான தாதாபாய் நௌரோஜி ஆங்கிலப் பார்லிமென்றத்தில் ஒரு இடம் பெற முயன்று கொண்டிருந்தார். நமது தாஸர் தனது இந்து சகோதரனான நௌரோஜியின் எண்ணம் நிறைவேற, நாட்டன்பின் சுவை நிறைந்த தனது சொல்வன்மையைக் காட்டி யுழைத்தார். அப்போது அவர் செய்த சில சொற்பொழிவுகள் ஆங்கிலப் பத்திரிகைகளால் வியக்கப்பட்டன. ஜான் மக்லீன் என்ற ஒரு பாராளவை அங்கத்தினர் இந்து முகம்மதியரை இழிந்து கூறியதைத் தடுத்துத் தாஸர் சொன்மாரி பொழிந்தார். மக்லீன் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார் தன் அங்கத்தின் பதவியையும் இழந்தார். இவருடைய சொல் திறத்தால் இங்கிலாந்தின் அமைச்சர் தலைவரான க்ளாட்ஸ்டனின் நட்பு இவரை யடைந்தது. க்ளாட்ஸ்டனின் தலைமையின் கீழ், இந்தியாவின் நிலைமையைப் பற்றி நமது தாஸர் பேசினார். இப்படி நாட்டன்பு மனம் நிறைந்து சொற் பெருக்கு எடுக்கத் தாஸர் தன் ஆங்கில நாட்டு வாழ்வை முடித்துக்கொண்டு கஎஅ ம் ஆண்டு தாய் நாடு வந்து சேர்ந்தார்.

நமது தாஸரின் தேசாபிமானமும், துணிவும், ஊக்கமும், அவரை இளமையிலேயே ஒப்பற்ற நாட்டுத் தலைவராக்கி யிருக்கக் கூடும் ஆனால் தாஸரைச் சுற்றிப் பணமுடையும், கவலையும், கடன் விடுதலைச் சீட்டு வாங்கினவரின் மைந்தன் என்ற அவமானமும் சூழ்ந்து கொண்டன. முதலில் தனது குடும்பத்திற்கு ஏற்பட்ட வசையைப் போக்கியே பின்பு தன் நாட்டின் குறையைத் தீர்ப்பதெனத் தீர்மானித்தார். தனது வக்கீல் தொழிலைப் பெரு முயற்சியுடன் ஆற்றி வேண்டிய பொருளீட்டித் தன் தகப்பனாரின் கடனை முற்றிலும் தீர்த்து விட்டார். இந்த நற்செயல் இவர் பெயரை வங்காளம் முழுதும் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவிக்கும், ஈகைக்கும், பெருந்தன்மைக்கும் ஒரு பழமொழி யாக்கியது. நீதி வழக்காளராகிய தாஸ் செய்த பிறர்க்குதவி கொஞ்சமன்று. ஏழைகள் பக்கம் இலவசமாகப் பேசினார். க௯௦அ-ம் ஆண்டு, அரசாங்கத்தார் ஸ்ரீ அரவிந்தகோஷை விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள். நமது தாஸர் தனது சட்டத்திறமையை முற்றும் காட்டி அரவிந்தரை விடுவித்தார். அரவிந்தரின் பெருமையையும் தூய வாழ்வையும் தாஸ் அப்போது உலகறியக் காட்டினார். தன் புகழ் அரியணையின் முதற்படியைத் தாஸ் அடைந்தார். திருமகளின் கருணையால், கல்கத்தா உயர் நீதி மன்றத்தில் வழக்காளராகி, அளவற்ற செல்வத்தை ஈட்டினார். வறுமை யென்னும் வெப்பியின் கொடுமையை அனுபவத்தில் பொறுத்தாராதலின், இப்போது செல்வ நிழலிலுள்ள தாஸ் ஏழைகளை மறக்கவில்லை. ஏழைகளுக்கு இறைக்க இறைக்கச் செல்வமும் ஊறிக்கொண்டே யிருந்தது. தானும் வேண்டுமட்டும் அனுபவித்தார். தான் கண்டபடி தானம் கொடுப்பதைச் சுருக்கிக் கொள்ள ஒரு நண்பர் அவருக்குச் சொன்னபோது தாஸர் "அப்படிக் கொடுப்பதில் எனக்குச் சிரமம் ஏற்படவில்லையே" என்றார். ஈகையையே தனது அறமாகக் கொண்ட தாஸர் இப்போது தனது பொருளை மட்டும் ஈந்து வந்தார். செல்வருந் தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் தாஸர் வீட்டில் நாள்தோறும் நல் விருந்து நடந்து கொண்டே யிருக்கும். ஆங்கில உண்டி இலக்கணத்தையே தாஸர் பற்றினார். உயர்ந்த விரிப்பு

களைக் கொண்ட மேஜைகளின் மேல் உணவுத் தட்டுகள் வில்லைச் சேவகர்களால் கொண்டு வந்து வைக்கப்படும் சத்தம் தாஸ் வீட்டின் அன்ன தானத்தைப் புகழ்ந்து பேசும். இந்தியாவின் இராஜப் பிரதிநிதிகளையும், உலகின் அரசர்களையும்விடத் தாஸ் அதிகப் பணம் சம்பாதித்தார். அவருக்கு மாதம் சுமார் ௫0,000 ரூ. வரும்படி கிடைக்கும்.

தாஸ் இலக்கியப் பயிற்சி மிகுந்தவர். கவிதையும் ஆற்றலுள்ளவர். கீர்த்தனங்களில் ஆர்வமுள்ளவர். பாடகர்களைத் தாஸ் மரியாதையுடன் ஆதரித்தார். ௧௮௯௪, ௯௬-ம் ஆண்டுகளில், சித்தரஞ்சனர் அழகான வங்காள, ஆங்கிலக் கவிகள் புனைந்து வெளியிட்டார். மலஞ்சா என்ற வங்கப் பாட்டுகளை அவர் பாடிப் புத்தகமாக வெளியிட்டு அறிஞருக்குச் சிறந்த விருந்தளித்தார். சாகர சங்கீர்த்தனம் என்ற இனிய பாட்டுகளையும் வெளியிட்டார். 'நாராயண' என்ற ஒரு மாதப் பத்திரிகையைப் பெரிய இலக்கியர்களும் விலக்கொணா விருந்தெனக் கொள்ளும்படி நடத்தினார். தாஸரின் எழுத்துக்கள் சுதந்திர உணர்ச்சியையும், சுவையையும் ஈந்தன. தன் இலக்கிய மேம்பாட்டால் ஒருமுறை வங்காள இலக்கியப் பெருங் குழுவிற்குத் தலைவராக விளங்கினார்.

பொருளீட்டுவதிலும், துய்ப்பதிலும், வழங்குவதிலும், சொற்புலமையிலும் மட்டுமே தாஸ் காலம் போக்கவில்லை. அவருடைய மனம் தேச விடுதலையின்பால் சென்றுகொண்டேயிருந்தது. நாட்டின் மேல் உண்மையான காதல் வைத்தார். நாட்டின் நிலைமையைப் பற்றி எண்ணி எண்ணிக் கண்ணீரால் பாரத தேவியின் கால் நீராட்டியவருள் தாஸர் ஒருவர். அப்போது வங்காளத்தில் நிறைந்த புரட்சி இயக்கத்தால் தாஸர் முற்றிலும் வெளிக் கிளம்பவில்லை. இருப்பினும் இந்தியாவைத் தின்னும் வறுமையும், மடமையும், அடிமைத்தனமும், கோழைத்தனமும், ஒற்றுமையின்மையும், அவர் மனதை உறுத்தின. ஆதலின் தேச விடுதலைக்காகப் பலவிடங்களில் பிரசங்கங்கள் செய்தார். தான் அரசாங்கத்தாருக்குச் சற்று அனுகூலமாயிருந்திருந்தால் தாஸ் ஒரு ராஜப் பிரதிநிதியாகவிருப்பாரென்பதில் தடையில்லை. ஆனால் பட்டங்களும், உத்தியோகங்களும் பெற்று, அரசாங்கத்தின் புன்னகையில் மின்னவோ தாஸ் வாழ்வெடுத்தார்? அவர் வந்த வினை வேறு. அதுவே தேச விடுதலை. அதற்காகவே அவர் உழைத்தார். அவர் பொது ஜன உணர்ச்சி மல்கியவர். சுதந்திரத்தில் களிப்பவர். பாரத சபையில் சேர்ந்து ஊக்கமுடன் உழைத்தார்.

அப்போது பெசண்டம்மையின் சுய ஆட்சிக் கிளர்ச்சி, தாஸைத் தன் சட்டப் புத்தகத் துறைகளினின்று வெளிக் கிளப்பிற்று. ௧௯௧௬, ௧௭-ம் ஆண்டுகளில் இந்திய சுய ஆட்சியைப் பற்றிப் பல அரிய பிரசங்கங்கள் செய்தார். பெசண்டம்மையார், வாடியா, அருண்டேல் என்னும் இருவருடனும் அரசாங்க விருந்தினராக பெண்டுலெண்டால் சிறை வைக்கப்பட்டபோது தாஸரின் நாட்டன்பு இன்னும் பெருகியது. அம்மையாரைச் சிறையிட்டது தப்பெனக் கண்டித்துப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அவ்வாண்டு கல்கத்தாவில் நடந்த பாரதச் சபையில் ஒரு அரிய சொல்லடுக்கினால் சுய ஆட்சித் தீர்மானத்தை ஆதரித்தார். அப்போது முகம்மதலியை அரசாங்கத்தார் சிறையில் வைத்திருந்ததைக் குறித்து பலமாய்க் கண்டித்தார். அன்று நாட்டின் சுதந்திரத்திற்காக மலர்ந்த வாய் ஆவி போம் வரையில் பிரச்சொல் மணம் பரப்பிக் கொண்டேயிருந்தது. பாரத மக்களின் ஒற்றுமையும், உறுதியும், உணர்ச்சியும் பெருகவும்,



ஜாதிமத வேற்றுமைகள் நீங்கவும், தைரியமாகத் தங்கள் பிறப்புரிமையைக் கேட்கவும் தாஸரின் வீர மொழிகள் தூண்டின. நாடு விழித்துக் கொண்டது:

"ஒரு போதும் இந்தியா வெல்லப்பட்டதுமல்ல; வெல்லப்படுவதுமல்ல. உலக முழுவதிலும் இந்து பாரத நாடு தன் உயர்ந்த நோக்கங்களையும், ஆதர்சத்தையும், நாகரீகத்தையும் பதிப்பிக்கும். அந்த வேலை இன்றே ஆரம்பித்து விட்டது. உலகம் இந்தியாவின் உபதேசங்களைக் கேட்கிற வரையில் அந்த வேலை பெருகிக் கொண்டே செல்லும்." என்று சென்னையில் கடலொலியைக் கடந்து கர்ஜித்த நமது தாஸரின் முழக்கம் இன்னும் நமது காதிலேயே இருக்கிறது.

திலகர், தாஸர், மகாத்மா போன்ற உத்தமர்களின் பெரு முயற்சிகள் நாட்டின் விடுதலைக்கு [illegible]த்தைக் கொண்டு வந்தன. நாடு சுதந்திர தாகமெடுத்து எழுந்தது. பலர் பல துறைகளில் சுதந்திர ஊற்றைத் தேடிக் கிளர்ந்தனர். பேச்சுக்களும், கூட்டங்களும், போசனைகளும், செய்கைகளும் பெருகின. இவற்றைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்த அரசாங்கத்தார் சுதந்திர தாகத்தினரை அடக்க ரவலட்டுச் சட்டம் ஏற்படுத்தினார். சிறைச்சாலைகளும் அகன்றன. மகாத்மா அச் சட்டத்தைத் தன் சத்தியாக்கிரகத்தால் எதிர்த்தார். நாடெங்கும் விரதமிருந்து சுதந்திர தேவியை வழிபட்டனர். அப்போது பஞ்சாபில் அமிருதசரசில், ராமநவமியில் சுதந்திரக் கூட்டங்கள் நடைபெற்றன. ஜலியன் வாலாபாக்கில் நடந்த சம்பவத்தை என்று நினைத்தாலும் இந்தியரின் சதையாடும், கண்கள் நீர்க்கும். நமது பஞ்சாபிகள் மீது எறியப்பட்ட குண்டுகள் தமது மானத்தின் மீது எறியப்பட்டதென எண்ணி, ரவீந்திரர், மணி ஐயர் போன்றோர் பட்டம் விடுத்ததும், நாட்டன்பர் அலறியெழுந்து கிளர்ந்ததும், தேச பக்தரின் கண்ணீர் சிந்து நதிக்கொரு உபநதியாகக் கலந்ததும் நமது மனதில் இன்னும் பச்சையாயிருக்கிறது.

நமது தேச பக்த சிங்கமான தாஸரின் மனப்பான்மை எல்லாருக்கும் இச் சமயம் எப்படியிருக்குமென்பது தெரிந்ததே. எழுத்தாலும் சொல்லாலும் ரவலட்டு சட்டத்தைக் கண்டித்தார். அப் பஞ்சாப் படுகொலையைப்பற்றி விசாரிக்கும் சபையில் தானும் ஒரு அங்கம் பெற்றார். அங்கு மானமும் நிறையும் கொள்ளை கொடுத்துத் தவித்த ஏழை மக்களுக்குத் தாஸர் ௫0,000 ரூ. வரையில் செலவழித்தார். என்ன கருணை என்ன தயாளம்! அவர்களுடைய பரிதாப நிலைமையையும், அவர்களுக்குச் செய்யப்பட்ட அநீதியையும் உண்மையாகத் தெரிவித்தார். ஜலியன்வாலாபாக் தாஸரைத் தேசியத் துறவிற் கழைத்தது. தன் தகப்பன் கடனைத் தீர்த்துக் குலத்தின் மானத்தைக் காத்தது போலவே தன் நாட்டின் மானத்தையும் காக்கத் தாஸரை பாரததேவி அழைத்தாள். தாஸர் தன் அன்னையின் பணியைச் செய்வதில் தன்னையே மறந்தார். மகாத்மாவும் ஒற்றுழையாமைச் சங்கை அப்போதுதான் கையிலெடுத்திருக்கிறார். அமிருதசரசில் நடந்த பாரத மகா சபையில் தாஸர் சட்டசபைக்குள்ளிருந்து ஒற்றுழையாமை செய்யவேண்டுமென்று ஆர்த்தார். மகாத்மா, சட்ட சபையையும் சேர்த்து முற்றும் ஒற்றுழையாமையைப் போதித்தார். லோகமானியர் இருவருக்குமிடையேயுள்ள கொள்கை வேற்றுமையைத் தீர்த்து பரஸ்பர ஒத்துழைப்பு வேண்டுமெனத் தீர்மானித்தார். தேச பக்தர் எத்தனை கேட்டும், பஞ்சாப் துயரத்தை ஆற்றாது அரசாங்கத்தார் வாளாயிருந்ததால் நாட்

டன்பரின் வீர வுணர்ச்சியும், தியாக உறுதியும், எழுந்தது இனி வாயாலும் பேனாவாலும் செய்ய வல்ல தொன்றுமில்லை, காரியத் தீர்மானங்களில் காரியமில்லை யென்று மனதின் கடுவே மிளிரும் பாஞ்சோதியின் முன் நாட்டின் மானத்தைக் காத்து சுதந்திரம் பெறுந்த உறுதி செய்து கொண்டனர். லாலா லஜபதியின் தலைமையிற் கூடிய பாரத சபை ஒத்துழையாமையை ஒலித்து ஏற்றுக்கொண்டது.

மகாத்மாவின் ஒத்துழையாமைச் சக்தி சாந்தம், பொறுமை, தைரியம், அன்னியப் பொருள் நீக்கம் என்னும் உண்மைகளை ஒதுக்கி திசை யெல்லாம் தொலித்தது. அதுவே பாரத தேவியின் அழைப்பெனக் கருதி நாட்டினர் பலர் அடிமை உத்தியோகங்களை அன்றே விடுத்தனர். மிடி மையை அணிந்தனர். சிறுர்கள் அரசாங்கப் பள்ளிக்கூடங்களினின்று வெளியே வந்தனர். வக்கீல்கள் தமது வழக்கு விடுத்து நாட்டிற்காக உழைக்க முன் வந்தனர். சட்டசபை விட்டு நீங்கப் பட்டது. இராட்டினத்தின் ரீங்காரம் நாடெங்கும் சுதந்திர தேவிக்கு மங்கள வாத்தியம் முழங்கிற்று. சிறைச்சாலைகள் அருள் தொண்டரின் தவச் சாலைகளாயின. தாஸருக்கு சட்டசபை விலக்கில் நம்பிக்கை யற்றிருந்தும் தேசம் தீர்மானித்த வழியைப் பின்பற்றி நடந்தார்.

## தாஸரின் தியாகம்

புத்தருக்கும் அரிய தியாகத்தைத் தாஸர் செய்தார். தேச மக்கள் படும் கீழ்மையை எண்ணினார். தன் இடம்ப வாழ்வைக் கனன்றார். மாளிகைச் சுகத்தை வெறுத்தார். ஏழையின் வாழ்வைப் பிடித்தார். தன்னை இத்துணை நாள் தங்கச் சங்கிலியால் கட்டியிருந்த வக்கீல் தொழிலை விடுத்தார். மாதம் ஆயிரக் கணக்கான ரூபாய் வரும்படி செய்வித்த வழக்குத் தொழிலைப் பிழையென விடுத்தார். நாடு பிழைக்கும் நற்றொழிலில் உழைத்தார். வயிற்றிற்காக வாதாடுவதை விடுத்தார். தேசத்திற்கான வீர மொழிகளைத் தொடுத்தார். கலைவக்கல் மாளிகையை முனிந்தார். அம்பலந் தோறும் நின்று ஏழைகளுடன் உழைக்க முனைந்தார். தன்னை இதுகாறும் ஏழைகளிடமிருந்து பிரித்த அகங்கார இடம்ப உடைகளைக் கொளுத்தினார். பாரிஸினின்று சலவை செய்து வரும் பகட்டான விலையுயர்ந்த அங்கிகளை மலை மலையாக எரித்தார். தன் நாட்டு ஏழைகள் கையால் நூற்று நெய்த கதர் ஆடையை, ஏழைகளுக்கு உணவளிக்கும் கற்பகத் தருவை, நாட்டின் விடுதலைக் கு நல்லணியை, அன்பின் அறிகுறியை அணிந்தார். அனிச்ச மலரினும் மென்மையான அரச உடல், உயர்ந்த சல்லாக்களை விடுத்து முரட்டுக் கதரைக் கட்டியது. தன் நாட்டிற்காகச் சாந்தப் போர் புரியப்போகும் வீரர் அணிந்த கதரைத் தானும் அணிந்தார். வழக்குக் கட்டுகளைச் சுமந்த கை, இராட்டினத்தால் விளங்கியது. நாட்டின் விடுதலைப் பொறியின் சக்கரத்தைத் தாஸ் சுழற்றினார். தாஸரும் ஏழைகளோடு நாள்தோறும் நூற்றலை முதற் கடனாகக் கொண்டார். கைராட்டினத்தைச் சுமந்து கிராமங்கள்தோறும் சென்று "கதர், இராட்டினம் நூற்றால், பிற நாட்டுப் பொருள் விலக்கு, மது விலக்கு, பள்ளிக்கூட, உத்தியோக பஹிஷ்காரங்களைப்பற்றிக் கோஷித்தார். தான் தன் மைந்தன் போல நேசித்துவந்த வங்காள வாலிபரை அழைத்தார். லக்ஷக்கணக்கான வாலிபர்கள் பள்ளிக்கூடங்களைக் காலியாக்கி வெளியே வந்து தங்கள் தியாகமூர்த்தி இட்ட பணிகளைச்



சட்டெனச் செய்தனர். தேச விடுதலைக்காகத் தியாகஞ் செய்தவர்களின் குடும்பங்களைக் காப்பாற்றினார். வாங்காளம் தாஸரின் வீர மொழிகளை நடத்திக் காட்டியது. வீடுகள் தோறும் இராட்டினத்தின் ஓங்காரமும், நாட்டுப் பாட்டுகளும், தாஸரின் புகழும் பாடப்பட்டன. வங்காள மெங்கும் சுதந்திர தேவியின் ஒளி பரவிற்று. தாஸரின் திருமொழிகளின் எதிரொலி உலகெங்கும் பாவிற்று. அவருடைய வீரத் துறவை வையமெல்லாம் பண்ணுடன் போற்றியது. தாஸர் தன்னையுந் துறந்தார். வேலையைத் துறந்தார். போகந் துறந்தார். அன்னார் வாழ்வை இன்புறச் செய்த இளமயிலான வாசந்தி தேவி, தன் கணவன் பற்றிய துறவறத்தைத் தொடர்ந்து பற்றினாள். அரசிக்கும் அரிய அணிகளைச் சிந்தி எறிந்தாள். கதரையே நல்லணியாயணிந்தாள். தன் மெல்லிய கரங்களால் நாட்டின் விடுதலைக் கருவியைப் பிடித்து நூற்றாள். வங்க நாட்டுப் பெண்களுக்கு ஒரு உதாரணமாக விளங்கினாள். தாஸரின் இரண்டு சகோதரிகளும் கதரணிந்து, சுதந்திர கோஷத்துடன் நாட்டிற்கு உழைத்தனர். தன் ஒரே குமாரனை செம்மை வழுவாத சிரரஞ்சன தாஸனும் நாட்டின் விடுதலைக்காக உழைத்தான். தன் இரண்டு பெண்களும் உழைத்தனர். ஆ! தன் குடும்பமே பாரத நாட்டின் அருட் பணியை அணிந்து விளங்கிற்று. தியாகத்தின் எல்லையை தாசரே கண்டார். புத்தர் தான் மட்டும் துறவியானார். தாசர் குடும்பத்தோடு நாட்டிற்காகத் துறந்தார். தாஸர் வாழ்க! வீரத் துறவு வாழ்க!

இப்படித் தன்னையும் பொருளையும் ஈந்து தாயின் உழைப்பை மேற்கொண்ட தாஸர் ௧௯௨௧-ம் ஆண்டு டிசம்பர் மீ கைது செய்யப்பட்டார். அச்சிங்கத்தைச் சிறையிட அதிகார வர்க்கத்தினர் இரண்டு மாதம் தயங்கினர். ௧௯௨௨-ம் ஆண்டு பிப்ரவரி மீ முதல் ஆறு மாதங்களாக நமது தாஸரின் நீண்ட உழைப்பை மெச்சி அரசாங்கத்தார் ஆலிபூர் சிறைச்சாலையில் இளைப்பாற்ற மீந்தனர். ஆறு மாத காலம் தாஸர் தவம் செய்தார். செல்வத்தில் தவழ்ந்த சீமான் நாட்டிற்காகச் சிறையிலும் புகுந்தார். "தாஸரோ தைரி! சிறையோ தேசபக்தரின் பரிசு," என்று உலகெல்லாம் நடுங்கிற்று.

செல்வ முனிந்தும் சிறை புக்கும் சீர்மையுடன்
நல்லோர் உழைப்பர் நயந்து

என்ற நீதிமொழிக்கு இலக்காகவே தாஸர் அவதரித்தார் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்! சில மாதங்களுக்குப் பிறகு மகாத்மாவும் எரவாடா சிறையில் தவமிருக்கலாயிற்று.

"சித்தரஞ்சனர் நீடூழி வாழ்க! தேசபந்து நீடூழி வாழ்க! தியாகமூர்த்தி வாழ்க!" என்று வங்காளம் முழுதும் கூடி வாழ்த்துக்கள் பாடி, பூச்சொரிந்து ஆனந்தக் கண்ணீரால் அடி மலரைக் கழுவ, நமது தேச பந்து தாஸர் சிறையினின்று வெளி வந்தார். உடனே தன் தேசிய வேலையைத் தொடங்கினார். அப்போது வங்காளக் கவர்னராயிருந்த ரோனால்ட்ஷேயுடனும், ராஜப் பிரதிநிதியுடனும் கலந்து பேசி நாட்டின் நிலைமையையும் இந்தியரின் விருப்பத்தையும் கூறினார். ஒன்றும் பயனில்லை. தாஸரின் பெயர் கேட்கும் போதெல்லாம் பாரத மக்களுக்கு சுதந்திர உணர்ச்சி பொங்கி யெழுந்தது.

௧௯௨௨-ம் ஆண்டு டிசம்பர் மீ கயையில் கூடிய பாரத சபையில் தாஸர் தலைமை வகித்து வெகு உருக்கமாகப் பேசினார். பாரத தேவியின் உள்ளம் அவர் வாக்கு வழியாக வந்தது. அன்று தான் தாஸர் சட்ட சபையிற் புகுந்து நாட்டிற்

காக வழக்காட வேண்டுமென்ற பிரசங்கத்துடன் சுயராஜ்யக் கட்சியைத் தோற்றுவித்தார். தேசாபிமானிகள் சட்ட சபையில் வேலை செய்தால் நாட்டிற்கு நலமான விதிகளைச் செய்யலாம். அப்படிப் போகும் அங்கத்தினர், மந்திரி முதலிய உத்தியோகங்களையாவது பட்டங்களையாவது பெற மறுக்க வேண்டும். எல்லா விஷயங்களையெல்லாம் ஒற்றுமையாகவே தைரியமாகி ஜனங்களுக்கு நலமுண்டாகும்படி நடக்க வேண்டும் என்று தாஸர் உரைத்தார். தேசபந்து சீனிவாசய்யங்காரைப் போன்றோரெல்லாம் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தனர். மஹாத்மா சிறையினின்று வந்ததும் சுயராஜ்யக் கட்சியினருக்கும் அவருக்கும் நீண்ட வாதங்கள் ஏற்பட்டதெனினும் முடிவில் மஹாத்மாவும் தாஸரின் கட்சியையும் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. சட்டசபை தாஸரின் சுதந்திரப் பேச்சுகளாலும், தைரியமான உரைகளாலும் எதிரொலித்தது. அந்த வீர வுரைகள் அளவற்ற வேலைகளைச் செய்திருக்கின்றன. நமது தமிழ் நாட்டில் தாஸரின் திருவடிகள் பட்டபோது அவருடைய சொல்லடுக்கையும், திறனையும், நாம் நேராகக் கண்டோம். தஞ்சாவூரில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு மிகவும் அருமையானது. இரட்டையாட்சியை ஒரு ஆட்டம் ஆட்டி வைத்தது. இந்தியர்களின் காற்றுப் பையில் சுதந்திரப் பிராணவாயு பெருகியிருக்கிறதென அரசாங்கத்தார் அறிந்து கொள்ளும்படி செய்தது தாஸர் சட்ட சபைக்குள்ளிருந்து செய்த வேலையன்றோ? மோதிலால் நேருவும் தாஸரும் பாரத மாதாவின் பக்கத்தில் சட்ட சபையில் பேசிப் பல வெற்றிகள் பெற்றனர். மஹாத்மாவும் தாஸரும் தேசிய இயக்கத்தின் இரண்டு கண்களாகவே விளங்கினர். பெல்காம் மஹா நாட்டில் ஸ்வராஜ்யக் கட்சியினரின், செல்வாக்கு மிகுந்தது. பம்பாய், மத்திய மாகாணம், எங்கிலும் ஸ்வராஜ்யக் கட்சியினர் வெலுத்தனர்.

பெல்காம் மஹா நாட்டிற்குப் பின் தாஸரின் சரீரம், அபார உழைப்பினால் அயரத் தொடங்கிற்று. நீரிழிவு வியாதி நமது தாஸரை அழித்தது. சிலகாலம் இந்நோயே வருத்தியது. நமது இந்தியர் ஒழுங்காகக் காப்பாற்றுக் குறையினாலும் தற்கால நாகரிகக் குடிகளாலும், ஆடம்பரமான அநந்த உடைகளாலும், தேகப் பயிற்சியின்மையாலும் யாவினும் முதன்மையாக நாட்டிற்குச் சுதந்திரமில்லாக் கவலையாலுமே, பிணிவாய்ப்பட்டு நாட்டின் மணிகளெல்லாம் கொஞ்ச வயதிலேயே கூற்றிற் கிரையாகின்றனர்!

தாஸர் சில நாட்கள் தன் உடம்பின் நலத்திற்காக பாட்னாவில் வசித்தார். தன் உடலுக்கு எத்தனை நோய் வரினும் சட்டசபைக் கூட்டங்களுக்கு வந்து தன் தாய் நாட்டிற்காகப் பேசாதிருக்கமாட்டார். ஒரு நாள் அவர் நாற்காலியில் சுமக்கப்பட்டும் வந்து பேசினார்.

தாஸரின் இறுதி நாட்களில் அவர் தன் உடைமையை யெல்லாம் நாட்டிற்காக முற்றும் ஈந்தார். கிராம வாழ்க்கையை ஒழுங்காக அமைத்து ஏழைக் குடியானவர்களுக்கு நலஞ் செய்யவே பல முயற்சிகள் செய்து கொண்டேயிருந்தார். ஏழை இந்தியர் நாளைக்கு கஞ்சி அரை கூடக் கிடைக்காது பட்டினியால் வருந்துவதை எண்ணினார். நாட்டின் எளிமையைப் போக்கத் தான் எளிமையை யணிந்தார். மன்னர் மன்னரும் வாழவிரும்பிய தன் பெரிய அரண்மனையைப் பெண்களுக்கு ஒரு பெரிய வைத்தியசாலை வைப்பதற்காக தருமஞ் செய்து விட்டார். ஆயிரம் பேர் இருக்கக் கூடிய இடத்தில் தான் ஒருவன் இருப்பது உலகின் பொது உடைமைக்குப் பிழையென உணர்ந்தே அப்படிச் செய்தார். தன் பொருள்களைக் கோயிலுக்கும், நாட்டுக்கும், ஏழைகளுக்குமாய்ப் பங்கிட்டார். தன் தேவைக்கு மட்டும்



வேண்டியதை வைத்துக்கொண்டு டார்ஜிலிங்கில் ஒரு சிறு வீடு கட்டி அதில் எளிய வாழ்வு வாழ்ந்து வந்தார். இந்த அரிய தியாகம் அவருடைய அருட் தொண்டிற்கு ஒளியீந்து அவரை உலகம் போற்றத் தக்க உத்தமத் துறவியெனக் காட்டியது. மஹாத்மாவே தாஸர் தேசத்திற்காக விடுத்த ரஸ்ஸா தெரு மாளிகையைப் பார்த்துக் கண்ணீர் சொரிந்தாராம்.

மஹாத்மாவின் வங்காளப் பயணத்தில் தாஸர் அவருக்கு மிக்க உதவி செய்தார். பல விடங்களில் தாஸர் நீண்ட சொற்பொழிவுகளால் மஹாத்மாவின் கொள்கைகளை அங்கீகரித்தார். அவர் சாத்வீக தர்மத்தை முற்றும் கைக்கொண்டார். மஹாத்மா மறுபடி டார்ஜிலிங்கில் அவருடன் சில நாட்கள் தங்கிப் பேசினார். தாஸருக்கு எப்போதும் தேச நினைப்பேயிருந்தது. மஹாத்மாவுக்கு வெகு தைரியமீந்தே பேசினார். ஆனால் கொடிய நோய் திடீரென்று நமது தேசபந்துவின் ஆவியை உறிஞ்சிற்று. "தேசபந்து எனக்குச் சரமகவி பாடுவா னென்றிருந்தேன். இப்போது நான் அவர் சாவைப் பார்க்க நேர்ந்ததே" என மஹாத்மா விம்மி விம்மி அழுதார். உலகெல்லாம் ஒரே வியசன இருள் மூடியது. "அந்தோ தாஸரா போய் விட்டார்" என்று மக்கள் தாயை யிழந்த கன்றுபோல் வாடித் தவித்தனர். அவருடைய பிரேதம் கல்கத்தாவிற்கு வந்ததும் நான்கு லக்ஷத்திற்கு மேற்பட்ட கூட்டம் தேசபந்துவிற்காகக் கண்ணீருகுத்து நின்றது. வெகு சிறப்பாகத் தேசபந்துவிற்கு ஊர்கோலம் நடைபெற்றது. ஊர்கோலம் தாஸ் தருமஞ் செய்த மாளிகைக்கு வந்ததும் அனைவரும் அவரை அதனுட் கொண்டு செல்ல வேண்டுமென்றனர். ஆனால் வசந்தா தேவி தன் கணவன் நாட்டிற்காக விடுத்த வீட்டில் மறுபடி நுழையக் கூடாதென மறுத்தாள்! என்னே இவ் வரிவையின் அருமை!

காளிகட்டத்தில் தீக் கடவுள் தாஸரை வாரியணைத்துக் கொண்டார். தாஸரின் உடல் பஞ்ச பூதங்களுடன் கலந்துவிட்டது. ஆனால் அவருடைய வாழ்க்கை நயம் மனித வர்க்கத்தின் இதயத்தில் பதிந்துவிட்டது. தன்னயம் விடுத்த அருட் பணியாளனை உலகம் எவ்வாறு போற்றுகின்றதென தாஸரின் வாழ்க்கை காட்டுகிறது. உண்மையும் திண்மையும் நன்மையும் தாஸரின் சரிதையில் பல உதாரணங்களைக் காணும். இந்தியாவின் விடுதலைச் சரிதை எழுதும்போது தாஸரின் சரிதை அதில் பளிச்சென்று திலகர், காந்தி, முதலியோரின் சரிதைபோல் விளங்கும். சுதந்திர ஆலயத்தின் கதவுகள் திறக்கும்போது தாஸரின் திருவுரு பொன்னால் வார்க்கப்பட்டுத் தோன்றும். அத்தகைய தாஸரின் பிரிவு ஆற்றொணாதுதான். ஆயினும் நமது வருத்தத்தை யெல்லாம் அவர் உழைத்த நாட்டிற்கு உழைத்து சுதந்திர கோபுரத்தைக் கட்டி முடிக்கும் சிறந்த வீரமாக மாற்றுவோம்.

தாஸர் வீழும் மனித உடலை நீத்து வாழும் அமரரானார். தன்னயமுள்ள மனிதரிடையில் சுதந்திரப்போர் செய்து அது வெற்றிபெற பரமாத்மாவின் பலத்தைத் தேடச் சென்றிருக்கிறார். அவருடைய தன்னய மறுப்பு, நமது உடலை மறந்து சுதந்திர வேலையில் ஈடுபட நம்மைத் தூண்டுகிறது. சாகப் போகும் மனிதர் செத்த உடலுக்கு வருந்துகிறார்கள். ஆனால் தாஸர் ஆவியுடலோடு நம்மிடை உலவி நம்மை தேச பந்துக்களாக இன்னும் தூண்டிக்கொண்டேயிருக்கிறார்.

நல்லவரோங்க நலமோங்கிப் பூவெங்கும்
எல்லோரும் வாழ இசை.

# எதிர்காலக் கண்ணாடி

("எதிர்நோக்கி" எழுதுவது)

பாரதமணிஸ்வாமிகள்

[உலகில் போர்களும் இருளும் பெருகியிருக்கின்றன. இந்தக் கொடிய இருள் நிலை மிக மிக, விடிவு காலம் நெருங்கி வருகிறது. அக்காலத்தில் மனிதரெல்லாம் தன்னடிப்பும், தன்முயற்சியும், ஒற்றுமையும், சமரசமும், தன்னம்பிக்கையும்கொண்டு தேவை [illegible] உழைத்து உரிமை தொண்டாற்றி [illegible] வாழ்வு வாழுவர். அக் காலத்தை "எதிர்நோக்கி" பஞ்சதந்திரம் போன்ற ஒரு கதைக்கொத்தால் சொல்லுகிறேன்.]

மானஸபுரியில், ஜோதி என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் நற்குணமே உருவானவன். எல்லாருக்கும் நன்மையே எண்ணுபவன். கடவுள் தன்மையுள்ளவன். எல்லாரும் தொழத்தக்கவன். வாழ்விலும், வீழ்விலும், மனம் வேறுபடாதவன். எனினும் அவனுக்கு ஒரு கவலை ஏற்பட்டது.

ஜோதிராஜனுக்கு, டம்பன், மந்தன், பாசன், என்ற மூன்று பிள்ளைகள் உண்டு. இம் மூவரும் தீய குணங்களெல்லாம் உருவானோர். டம்பன் தன்னை அலங்கரித்துக்கொள்வதிலும், புதிது புதிதாய் மோட்டார்கள் வாங்குவதிலும், மாடிவீடுகள் கட்டுவதிலும், பணக் கொழுப்புள்ளவருக்கு விருந்து வைப்பதிலும், ஏழைகளைக் கண்டபடி கொடுமையுடன் நடத்துவதிலும், தன் வாழ்வைக் கழித்தான். இவனால், அவ்வூரிலுள்ள பணக்காரர்களுக்கெல்லாம் ஊற்றம் ஏறி, ஆயிரம் ஏழைகள் இருக்கக் கூடிய இடத்தில் தங்களுடைய பங்களாக்களை யமைப்பதும், அரைப்பட்டினி வில்லைச் சேவகரை வைத்துக்கொள்வதும், தனித்தனி மோட்டார் வைத்துக்கொள்வதும், அயல் நாட்டு ஆடைகள், மாதிரிகள், உணவுகளை, உண்டு ஜம்பம் கொண்டாடுதலும், தங்களைவிட ஒரு மாடி குறைவாகக் கட்டினோரை மதியாதிருப்பதும், உழைப்பாளிகளை வருத்தும் மனமும், வேலை செய்யாத கைகளும், நடக்காத கால்களும் ஏழைகளிடம் பரிவில்லா நெஞ்சமும், கொள்ளையடித்தாயினும் பணக்காரனாக வேண்டுமென்ற கொள்கையும் பரவி, வறுமைக்கும் மடமைக்கும் காரணமாயிருந்தனர்.

மந்தன், சூதாட்டத்திலும் ஊனைத் தின்று ஊனை வளர்ப்பதிலும், சூதாட்டத்திலும், காப்பி, டீ, புகையிலை, கஞ்சா, கொக்கோ முதலிய தீய பண்டங்களையுண்டு தன்னைச் சேர்ந்தோரையும் பழகும்படி செய்வதிலும், தான் ஒரு வேலையும் செய்யாது, வேலை செய்வோரையும் கெடுத்துச் சோம்பேறியாக்குவதிலும் காலங் கழித்தான். இவனால் பலர் கெட்டனர். பிற நாட்டுத் துணிகள், செய்பொருள்கள், முதலியவற்றையே இவர்கள் வாங்கவே, நூற்றல், நெய்தல், இரும்புவேலை முதலிய பழமையான கைத்தொழில்களும் பாழாகி, ஊரைவிட்டு ஓடின. செல்வமெல்லாம் அயல் நாட்டிற்கு ஓடி வறுமை புகுந்தது. தீய பழக்கங்களால் மடமை புகுந்தது. குடியால் மதிமயக்கமும், அதனால் காமமும், சூதர், கள்வர், கொலையும், உண்டாகி, ஊர் பாழானது. மனமெல்லாம், சோர்பல், கோபம், தீய எண்ணங்களுக்கு இருப்பிடமானது. தங்கள் மத உண்மைகளை மறந்து பல மதத்தினரும் ஒருவரோடொருவர் போரிடத் தொடங்கினர்.

பாசன், இவ் இருவர்க்கும்மேல் ஒரு படி சென்றவன். தற்புகழ்ச்சியும், பிறர் பொருளைத் தந்திரமாகக் கொள்ளையடிப்பதும், பணம்பாசையைப்



பெருக்கி, பயிராசையைக் குறைப்பதும், தான் எண்ணியது நன்மையோ, தீதோ, என்று கூட எண்ணாது காரியங்களைச் செய்வதும், இவன் தொழிலாயின. இதனால் ஊரில் பெண்ணாசையும் பொன்னாசையும் பெருகி, பரத்தை யருக்கும் பணக்காரனுக்கும், தீயவருக்கும் காலமானது. ஏழைகள் மிக்க வருந்தினர், குடியானவர் தம் தொழில் விட்டனர். அரிசி கூட அன்னியநாட்டினின்று வரவேண்டியதாயிற்று. நாட்டில் பஞ்சமும், பாவமும், வறுமையும், மடமையும், குடிகொண்டன.

இப்படி ஊரைப் பாழ்படுத்தும் மைந்தர், தன் மைந்தரானதைப்பற்றி, அரசன் நொந்தான். அவர்கள் முகத்தைப் பார்ப்பதையும் வெறுத்தான். அரசன் ஏதாயினும் தங்களை எதிர்த்துப் பேசினால், மூவரும் சேர்ந்து அரசனைக் கொன்று விடுவார்கள் போல இருந்தது. அரசன் பெரியோரைக்கொண்டு பிள்ளைகளை சீர்திருத்த எண்ணி, சிறந்தோரை அவர்களிடம் அனுப்பினான். அனுப்பிய சிறந்தோரையும், பிள்ளைகள் கெடுத்துவிட்டனர். இனி என்ன செய்வோமென்று கவலையுற்று அரசன் தனியாகக் காட்டிற்குப் புறப்பட்டான்.

தன் எண்ணத்தால் பசியே தோன்றாது அரசன் காட்டின் வழியே செல்லுகையில், ஒரு சிறு குடிசை தென்பட்டது. அதைச் சுற்றிலும் மரங்கள் இருந்தன. பக்கத்தில் ஒரு கிணறு இருந்தது. இராட்டினத்தின் ஓங்காரமும், நெசவின் "டக் டக்" என்ற ஓசையும், ஏற்றின் கடூவோசையும் கேட்டது. உள் சென்றான். வாலிபர் பலர் நூற்கவும், நூல் பயிலவும், பாடவும், நெய்யவும் கண்டான். அவர்களுடைய சுறுசுறுப்பில் மகிழ்ந்து, அவ்விடத்தின் வரலாற்றை வினவினான்.

இதுவே "பாரத சக்தி" ஆசிரமம். இதன் ஆசிரியர் பாரதமணி ஸ்வாமிகள். இவர் வாலிபரை சுயேச்சையான வழிகளில் பழக்கிவந்தார். ஏற்று முனையிலும் கதிர் முனையிலும் தறியிலும் உழைத்து, அவரவர்கள் தங்கள் உணவுடைகளை அடைந்து, மற்றக் காலத்தை யெல்லாம், பரோபகாரத்தில் செலவழிக்கும்படி வாலிபர்களைத் தூண்டினார். உலகிலுள்ள வறுமை, மடமை, அடிமையைத் தொலைப்பதற்குத் தன் கொள்கைகளே வழியென்றெண்ணி, அவற்றைப் பரப்ப இப்போது சீடர்களைத் தயார் செய்துகொண் டிருக்கிறார். சீடர்கள் இடம்பமில்லாத தொழிலும், நோவிக்காத செயல்களும் செய்து களித்தனர்.

இப்படி அரசன் "பாரத சக்தி" ஆசிரமத்தைக் குறித்து ஆவலாய்க் கேட்டுக் கொண்டிருக்கும் போது பாரதமணி ஸ்வாமிகள், தோன்றினார். இடையில் ஒரு கதர் கோவணமும், தோளில் கலப்பையும், உதடுகளில் புன்னகையும், நாவில் இன் சொல்லும் கொண்டுற்ற, சுவாமிகளை அரசன் பணிந்தான். "பிறர்க்கென வாழ்வாயாக" என்று சுவாமிகள் ஆசீர்வதித்தார். பெரியவருடைய தரிசனத்தினாலேயே அரசனுக்கு, எளிமையும், சுயேச்சை அறிவும் வந்தது. தன் இடம்ப உடைகளைக் களைந்தான். ஒரு கதர்த் துண்டை வாங்கி உடுத்தான். பாரதமணி ஸ்வாமிகளிடம் தானும் ஒரு சீடனாகப் பயின்றான். தன் ஊரை மறந்தான். பெருஞ் சுயேச்சையை அடைந்தான். எனினும் தன் மைந்தர் தம்மையும் ஊரையும் பாழாக்குவதைமட்டும் நெஞ்சு பகீரென எண்ணினான்.

ஒரு நாள் தன் சுவாமிகளிடம் தனியாகத் தன் குறைகளைத் தெரிவித்தான். சுவாமிகளும் அவர்களைத் திருத்த ஒப்புக் கொண்டார். அரசனுடைய களிப்பிற்கு அளவே யில்லை. உடனே

சுவாமிகள், இருபது சீடரோடு புறப்பட்டார். இரகசியமாகவே அரசனுடைய அரண்மனைக்குள் வசித்தனர். சுவாமிகள், தானும் தன் சீடரும் சொல்லும் சிறுசிறு கதைகளால் அரசகுமாரரை நல்வழியில் திருப்புவதாகச் சொன்னார். அரசன் சுவாமிகளுக்கு ஒரு பெரிய பூந்தோட்டத்தில் ஆச்சிரமம் அமைத்தான். அங்கேயும் பாரத சக்தி ஆச்சிரமம் போன்று தொழில் நடத்தி சுவாமிகள் அமர்ந்தார்.

ஒரு நாள் இடம்பன், மந்தன், பாசன், இம்மூவரும், அத்தோட்டத்தை நாடி வந்தனர். அப்போது பாரதர் (பாரதமணி ஸ்வாமிகளின் சீடர்) நூற்றுக் கொண்டும், நெய்து கொண்டும், உழுது கொண்டும், ஆனந்தமாய்ப் பாடிக் கொண்டும், சிலர் சமைத்துக் கொண்டும், சிலர் தண்ணீர் இறைத்துக் கொண்டும் இருந்தனர். ஒருவராயினும் ஒரு நொடியாயினும் வீணாக்கவில்லை. இவ் வாழ்க்கையை இம்மூவரும் அரை நொடி கண்டனர். இதில் ஏதோ புதுமை தோன்றி நின்றனர். ஒருவராவது இவர்களைக் கவனிக்கவில்லை.

வேலையெல்லாம் முடிந்தவுடன், மாலையில் எல்லாரும் நீராடி, தூய்மையுடன், பாரத மாதாவின் திருவுரு முன்னே, பாரதமணி ஸ்வாமிகள் நிஷ்டையிலிருக்க, மற்றவர் தனித் தனியே ப்ராணாயாமம் செய்து வீற்றிருந்தனர். ஒரு மணி ஓசை எல்லோரையும் ஒன்று சேர்த்தது. இனிமையாக சுதந்திர கீதங்களைப் பாடத் தொடங்கினர். ராஜகுமாரருக்குத் தம்மையறியாத ஆனந்தமும், மரியாதையும் எழுந்தது. பாட்டு நின்றதும், பாரதமணி ஸ்வாமிகளின் காலில் விழுந்து "சுவாமீ! எங்களுக்கு நல்ல புத்தி வருவிக்க வேண்டும்" என்றனர். சுவாமிகளும் "பிறர்க்காக வாழ்வீராக" என்று ஆசீர்வதித்து, "இளவரசரே! ஒரு சிறு கதை சொல்லுகிறேன், சீடர்களே! எல்லாரும் கேளுங்கள்" என்றனன். எல்லாரும் பணிவுடன் கேட்கத் தயாராயினர். குருதேவர் "மனுஷ்ய ஜன்மம்" என்ற கதையைச் சொன்னார்,

### க. தனக்காக வாழ்பவன் விலங்கு.

ஆத்மபுரி என்ற ஊரில் விடப்பிரியன் என்ற ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு மூர்க்கன் என்ற ஒரே பிள்ளை உண்டு. தானும் அடக்காது நடந்தது மன்றியில் தன் பிள்ளையையும் தீய வழியில் நடப்பதை அடக்காது விடுத்தான். மூர்க்கன், இடம்பத்திலும், குடியிலும், கூத்தியிலும், விருந்திலும், சூதிலும் பணத்தை வீணாக்கி வந்தான். தன் மகன் கேட்டதும் பணப்பையை அவிழ்த்துத் தந்தையும் கொடுத்தான். அரசகுமாரன் இப்படியாகவே, அவனோடு பழகிய தோழர்களும் சோம்பேறிகளாகிக் குடித்து, தம்மை அலங்கரித்து, இடம்பங்கொண்டாடி ஏழையானார்கள். இவர்களுடைய டம்பத்தால், அயல் நாட்டுச் சாமான்களும் புகுந்து ஊரைக் கொள்ளை கொண்டன. தீய குடிகளும் பழக்கங்களும் அவசியமான, விளைவுகளையும், தொழில்களையும், போட்டி போட்டு அழித்தன. மூர்க்கன் ஒரு நாளைக்கு ஐந்து வேளை உண்பதும், குடிப்பதும், மீதி நேரத்தை, சிரித்து விளையாடி, சூது, சீட்டு, பரத்தையரோடிணங்குவதிலும் காலங் கழித்தான். அரசனுக்குத் தன் மகன் தீயனென்று படவில்லை.

ஒரு நாள் அரசன் காட்டிற்குப் போகும் போது ஒரு ரிஷியானவர், ஒரு பன்றியை மடியில் வைத்து 'என் செல்வமே என் முத்தே என்று கொஞ்சிக் கொண்டிருந்தார். பன்றியும் உறுமிக்கொண்டேயிருந்தது. பக்கத்தில் பல பன்றிகள் மொச்சு மொச்சென்று தின்று கண்ட இடத்தில் மலங் கழித்துக்கொண்டும், சில ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டும் இருந்தன.



இவ் விநோதத்தை அரசன் கண்டு நகைத்து "பெரியவரே இப் பன்றி, அசுத்தமானதல்லவோ இதை ஏன் வைத்துக் கொஞ்சிக்கொண்டிருக்கிறீர்?" என்றான்.

ரிஷி: அரச! நீ இதைவிட அசுத்தமான பன்றியை வளர்த்துக் கொண்டிருக்கிறாய். இதற்கும் அதற்கும் ஒரு வேற்றுமையும் இல்லை. இதுவும், நாள் முழுதும் உண்கிறது. அதுவும் குடிகளுடைய பணத்தை உண்டு குடித்துக் கூத்தாடுகிறது. இதுவும் கண் தெரியாத காமமுடையது. அதுவும் இதனினும் அதிக காமமுடையதாய், பிற மாதரை அழிக்கிறது. இதுவும் குட்டி போடுகிறது. அப்பன்றியும் குட்டி போடுகிறது. இதுவும் சந்தோஷம் வந்தால் சிரிக்கிறது, கோபம் வந்தால் எதிர்க்கிறது, ஆசையுள்ளதை யடைகிறது. அப் பன்றியும் அப்படியே. இப் பன்றியாயினும் பிறருக்குத் தொந்திரவின்றித் தன் உணவையும், சுகத்தையும் தேடுகிறது. அப் பன்றியோ குடித்து சூதாடி, பல மாதரைக் கெடுத்து, தன்னைச் சேர்ந்தவரைக் கெடுத்து, காம,குரோத லோபங்களுக்கு அடிமையாகி, பிறரையும் அடிமையாக்கி, உலகைக் கெடுக்கிறது. இப் பன்றியோ மலத்தைத் தின்று ஜீவாதாரமான காற்றைத் தூய்மைப் படுத்தி உலகிற்கு ஒரு தீங்கும் செய்யாது நன்மையே புரிகிறது. ஆதலின் இப் பன்றி, அந்த மனிதப் பன்றியினும் எத்தனையோ பங்கு மேலன்றோ.

அரசன் வெட்கி, தன் மகனுடைய பன்றிக் குணத்தைக் கண்டு, விசனித்து தான் ரிஷியின் காலில் விழுந்து, தனக்கு நல்ல உபதேசம் செய்யுமாறு வேண்டினான்.

ரிஷி: அரசே மனிதன் பிறருக்கு உதவவும், உண்மையை அறியவுமே உலகில் பிறந்தான் அவனுள் இருப்பது தெய்வத் தன்மை. அந்த தெய்வத் தன்மையை அறியாது அதைச் சுற்றி, காமக் குரோதமாகிய பன்றிகளை மேய விடுகிறான். அதனால் உலகிலுள்ள அசுத்தமான காரியங்களையே செய்து தன் வாழ்வையே சாக்கடை போல் ஆக்கிக்கொள்ளுகிறான். உண்பதும், உறங்குவதும், சிற்றின்பம் நுகர்வதும் ஈனுவதும், குட்டிகளை வளர்ப்பதும் பன்றி கூடத்தான் செய்கிறது. இதைமட்டும் செய்து உயர்ந்த ஞானத்தை மறந்தவன் பன்றியினும் கேடான விலங்காவன். பகுத்தறிவினால் தீயதை விலக்கி, நலங்கொண்டு, சத்தியம், சாந்தம், அஹிம்சை, பரோபகாரம் முதலியவற்றைக் கொண்டவனே மனிதன். தம் மைந்தரை இப்படிப்பட்ட மனிதனுக்காவிடின், ஒரு தந்தையும், பன்றியை வளர்க்கும் மற்றொரு பன்றியே ஆவன்" என்று முடித்தார்.

அரசன் இவ்வரிய சொற்களை யுணர்ந்து, தன் வாழ்வில் அமைத்து, தன் மகனை மூர்க்கனையும், அடக்கித் தீய வழியினின்று விலக்கினான். ரிஷிக்குத் தன் தோட்டத்தில் ஆசிரமம் அமைத்து தன் மகனையே அவருக்குப் பணி செய்ய விடுத்தான். மூர்க்கனும் சாந்தனானான்.

தனக்காக வாழ்பவன் விலங்கு.

இக் கதையைக் கேட்டதும் அரசிளங்குமார் தங்கள் பிழையை எண்ணி, சுவாமிகள் முன்னேயே வருந்தி இனி சுவாமிகளுக்குப் பணி செய்து தங்களைச் சீர்திருத்திக்கொள்வதாகவும் நாள்தோறும் கதைகள் சொல்லும்படியாகவும் வேண்டிக்கொண்டனர். ஒவ்வொரு இரவிலும் உண்ட பின், புதிது புதிதாக சுவாமிகள் கதை சொல்லி, கதைகளின் வழியே மூவரையும் திருத்தினர். அக் கதைகளையே ஒவ்வொன்றாகத் தொடர்ந்து எழுதுகிறோம்.

# ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேச குமார சர்மா எழுதுவது)

## பத்தாம் அத்தியாயம்

### அரச குமாரனுக்கு மங்கள வாழ்த்து

பாடலிபுத்திர நகரத்தில் இன்று நிகழும் உற்சவமும் இன்றைய வைபவ கோலாஹலமும் வர்ணித் துரைக்கத் தரமல்ல. கலிங்க யுத்தத்தில் வெற்றிமாலை சூடி அசோக மஹிபதி இன்று தன் இராஜதானியில் பிரவேசிப்பதாயிருந்தது இக்காரணத்தினால் ஒவ்வொரு நகரவாசியின் உள்ளமும் ஆநந்தத்தாலும் இராஜ நிஷ்டையாலும் பொங்கிப் பூரித்தது. பாடலிபுத்திர நகரத்தை அவ்வூர் ஜனங்கள் அத்தியந்த மனோஹரமான விதத்தில் அலங்கரித்தார்கள். ஒவ்வொரு நகரவாசியின் வீட்டு வாயிலிலும் மகர தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீட்டுக்கு வீடு வெவ்வேறு வண்ணக் கொடிகள் பறந்தன. நகரத்தின் பாதைகளெல்லாம் சுபசூசகமான குங்கும ரேகைக் கோலங்களிட்டு அலங்கரிக்கப் பட்டிருந்தன. நறு மணங் கொழிக்கும் நீண்ட மலர் மாலைகள் வீதிகள் தோறும் கொடிகளில் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தன. தனிகர் மாளிகைகளுக் கெதிரில் சுகந்தத் திரவியம் கலந்த சந்தனக் குழம்பு தெளிக்கப் பட்டிருந்தது. அதன் பரிமளமும் பூமாலைகளின் பரிமளமும் கலந்து விட்டால் கேட்க வேண்டுமா? நகர முழுதும் மனதை மோஹிப்பிக்கும் சுவாசனையே சூழ்ந்தது. பிரதானமான சதுக்கங்களில் பேரிகைகள் முழங்கின. அவற்றின் கம்பீர நாதத்தினிடையே பல வகை மங்கள வாத்தியங்களின் கோஷம் பிரத்தியேகமாய் ஸ்பஷ்டமாய் எழுந்தது. எந்த வழியினூடே சக்கரவர்த்தி அரமனையிலிருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டியதாய் ஏற்பாடு செய்திருந்ததோ அந்த வழியில் ஜனங்கள் பெருந் திரளாய்க் கோலாஹலம் செய்வதைக் கண்டால், இந்த மஹோததி பொங்கி கோஷிக்கிறதென்று கூறக் கூடிய கற்பனா சக்தியுள்ளவன் உள்ளத்திற்கூட சகஜமாய் ஜனிக்கும். இந்திரன் தன் வைபவத்தைச் சுவர்க்கம், புவி, பாதாளம் என்னும் மூவுலகங்களிலும் இணையற்றதாய்க் காட்டச் செய்யும் பொருட்டு அமராவதி யென்னும் திவ்விய நகரத்தை நிர்மாணம் செய்தானாயினும் அவன் இன்றைய கண் கொள்ளாக் காட்சியைக் காண பாடலிபுத்திரத்துக்கு வந்து பார்த்து விட்டுப் பிறகு அமராவதியை நோக்கினால், தேவர்கள் இதுகாறும் கண்டிராத கேட்டுமிராத ஓர் அபூர்வமான அமராவதியையே நூதனமாய்ச் சிருஷ்டிக்கும்படி நேரிடுமென்று இந்த வைபவத்தை யெல்லாம் கண்ட பாடலிபுத்திர நகரவாசிகள் தமக்குள் மிகப் பெருமையாய்ப் பேசிக் கொண்டார்கள். யுவதிகள் தம் வீட்டு வாயிற்படிகளில் மங்களாரத்திகளைக் கையிலேந்திச் சக்கரவர்த்தியின் வரவுக்காகக் காத்திருந்தார்கள். புத்திரவதிகளாகிய சுமங்கலிகள் அசோகன் மேல் புத்திர பாவனையுடன் ஆசி மழை பொழிய ஆவல் கொண்டிருந்தார்கள். பாலக பாலிகைகள் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து தங்கள் முகங்களைப் போல் மலர்ந்திருக்கும் பூக்களைக் கையிலேந்தித் தங்கள் அரசன் மீது வருஷிப்பதற்காக ஆங்காங்கே ஆவலாய்க் காத்திருந்தனர். ஆடவர் குழாம் இன்

உற்சவம் கொண்டாட நிச்சயித்திருந்தது. அதற்காக அவர்கள் இன்று தம் தம் தொழில்களை நிறுத்தி விடுமுறை கொண்டனர். இன்றைய உற்சவத்தை முன்னிட்டு நகரத்தின் சமஸ்த வியாபாரமும் நிறுத்தப் பட்டது. இம் மங்கள மகோற்சவக் கொண்டாட்டத்தில் பாடலிபுத்திர நகரவாசிகள் அனைவரும் களிப்புடன் குழுமி யிருந்தனர். ஸமஸ்த பிரஜைகளும் தம் தம் சக்திக்கும் சிரத்தைக்கும் தக்கவாறு அரசர் பெருமான் மீது இரத்தின மாரியும், முத்து மாரியும், பூமாரியும் பொழிந்துபசரிக்கச் சித்தமாய் நின்றிருந்தனர். கிழக்குத் திசையில் சூரியனும் தன்னுடைய சுகுமாரமான கரங்களைப் பரப்பி அசோக பூபதிக்கு நல்வரவு முகமன் ஆற்று நின்றது. இவ்வளவிலே மேற்குத் திசையில் மங்கள வாத்தியம் இன்னிசையுடன் முழங்கத் தொடங்கவே, அசோக மகீபதி நகரப் பிரவேசம் செய்து விட்டதாக நகரவாசிகளுக்கு நிச்சயமாய் விட்டது. "இராஜாதிராஜனுக்கு ஜய மங்களம், நித்திய சுபமங்களம்!" என்னும் மங்கள வாழ்த்தின் கம்பீரத் தொனி நெடும் பொழுது வரையில் நகர முழுதும் முரலா நின்றது.

அரசர் பிரான் அசோகனது சுடர் வீசும் திருமுக மண்டலம் நகரத்தின் மேற்குத் திசையில் உதயமாயிற்று. அசோகனது அளப்பரும் பிரதாபத்தைக் கண்டு சாக்ஷாத் சூரிய நாராயணனும் அப்பொழுது ஒளி குன்றி யிருந்தான். அச் சமயத்தில் பல சூரியனைவிட மேற்குத் திசையில் உதித்து வரும் பூபால சூரியனது தேஜஸ்ஸே ஜாஜ்வல்யமானதாகத் திகழ்ந்தது. வேந்தன் அசோகன் யானையின் மீதிட்ட பொன் அம்பாரியில் இளங்கோ வீதசோகனுடன் ஏறி வீற்றிருந்தான். விருத்த ராதாகுப்தன் மலர்ந்த முகத்துடன் அசோகனது யானையின் பக்கத்தில் அசுவாரூடனாய் விளங்கினான். அசோக நரபதிக்கு எய்திய சக்கரவர்த்தி பதத்தை முன்னிட்டுத் தம் தம் ஆனந்தத்தை வெளியிட்டு அம் மகா ராஜாதிராஜனை வாழ்த்தும் பொருட்டு பாரத கண்டத்தின் அரசர்களிற் பெரும்பாலார் பாடலிபுத்திரத்துக்கு வந்திருந்தனர். அவர்களும் தம் தம் பதத்துக்கும் பெருமைக்கும் தக்கபடி குஞ்சரமூர்ந்து உற்சவத்தின் சோபையைச் சிறப்பித்தனர். எம்மட்டிலும் கூடுமோ அவ்வளவு அதிகமாகப் போலிகாம்பீர்யம் புனைந்து இராஜமாதா புத்திமதியும் பிக்ஷு நாயகன் ஸம்புஷ்டாசாரியனும் ஒரு ரதத்தில் அமர்ந்து அவ் உற்சவத்தின் இணையற்ற ஆனந்தத்துக்கும் உல்லாசத்துக்கும் திருஷ்டி பரிஹாரம் போல் பாதை வழியே போயினர். யுத்தத்தில் தங்கள் வீர தீர பராக்கிரமங்களைக் காட்டிய சூர சூளாமணிகளும் சைனியாதிகாரிகளும் தம் தம் தகுதிக் கேற்றபடி குஞ்சரமூர்ந்தும் குதிரை யூர்ந்தும், ஜனங்கள் அளித்த நல்வரவு முகமனின் ஒரு சிறு பகுதியைப் பெற்று மகிழ்ந்தனர். அடிக்கடி "நமோ புத்தாய" என்னும் மந்திரோச்சாரணம் செய்துகொண்டு ஸம்புஷ்டாசாரியனது மாப் பெரும் சிஷ்ய கோஷ்டி வீதிகளில் விழுந்து கிடக்கும் மெல்லிய மலர்களை மிதித்துக்கொண்டு எல்லோருக்கும் பின்னே நடந்து சென்றது. இவ்வாறு இத் திவ்யோற்சவ பவனி புஷ்ப வர்ஷத்தினிடையே பிரஜைகளின் வாழ்த்துரைகளை ஏற்றுக்கொண்டு அரண்மனை வந்து சேர்ந்தது.

இன்றைய உற்சவ நிமித்தம் அரண்மனையின் அழகிய கொலு மண்டபம் சிறப்பாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் நடுவில் [illegible] இரத்தின [illegible]ழைத்த இராஜ [illegible] அமைக்கப் பெற்றிருந்தது. அதில் அசோ[illegible] [illegible] எழுந்தருளினான். குறுநில [illegible] களும், பட்ட வர்த்தனர்களும், [illegible] களும் ஏனைய பட்டணப் பிரமுகர்களும் தம் தம்

போக்கியதைக் கேற்றபடி ஆஸனங்களில் அமர்ந்தனர். பவனியிலிருந்து வந்தவுடனே, நித்திய கர்மானுஷ்டானத்துக்கு நாழிகை யாகிறதென்று போக்குச் சொல்லி, பிதா நாயகனும் ஸம்புஷ்டாசாரியனும் புத்திமதி தேவியும் போய்விட்டார்கள் உள்ளபடியே அதற்குக் காரணம் என்னவெனில் இராஜ சபையில் நகரவாசிகள் சார்பிலும் நரபதிகள் சார்பிலுமிருந்து அசோகனுக்கு வாழ்த்துரை நடைபெற வேண்டியதாய் இருந்தபடியால் அதைக் காணும்போது, மாற்சரியம் நிறைந்த தங்கள் ஆத்மா— அந்தரங்கம்—எங்கே சரீரத்தைப் பிளந்துகொண்டு தங்கள் மெய்ச்சொரூபத்தை வெளிப்படுத்தி விடுமோவென்று அவர்களுக்கு உண்டாயிருந்த அச்சமேயாகும். ஆகையால் அவர்கள் இராஜ ஸபைக்கு வாராமல் இருப்பதே உத்தமமென்று தீர்மானித்துக்கொண்டார்கள். வீதசோகனையும் இராஜ ஸபையில் இருக்கவொட்டக் கூடாதென்று பிதா நாயகன் இராஜமாதாவுக்கு எடுத்துக் காட்டிய போதிலும், அப்படி வேண்டாம், வீதசோகன் அசோகனுடன் கூடவே இருக்கட்டும், இல்லாவிட்டால் அவன் மனதில் மாற்சரியம் கன்றுப் பற்றி யெரியாதென்று சொல்லிவிட்டாள் இராஜமாதா. இந்த சமத்காரமான சமாதானத்தைக் கேட்டு பிதா நாயகன் இராஜமாதாவின் தீர்க்காலோசனையையும் தூரதிருஷ்டியையும் பாராட்டித் தன் யோசனையை வற்புறுத்தாமல் நிறுத்திக் கொண்டுவிட்டான். ஆகையால் வீதசோகன் தன் தமையன் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

இன்று அசோக மகிபதி இகலோகத்தின் மகோந்நதமான வைபவ சிகரத்தில் வீற்றிருந்தான். ஆரியா வர்த்தத்தின் அரசர் அனைவரும் அவனுடைய சக்ராதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டு அத் தேஜோமயமாகிய திவ்யத் திருமேனியைச் சூழக் குழுமியிருந்தனர். இதனால் அவனுடைய சோபை ஒளிர்ந்து திகழ்ந்தது. ஸமஸ்த பாரத கண்டத்தையும் ஆளும் ஆற்றல் அவன் ஒருவனிடத்திலேயே திரண்டிருந்தது. அக் காலத்தில் பாரத பூமி பொன் விளையும் நிலமாயிருந்தது. அதன் உதரத்தில் உற்பத்தியாகும் இரத்தினங்களும், அதன் மேற் பரப்பில் விளையும் தானியங்களும், அதன் உப வனங்களில் உண்டாகும் கனிகளும் மலர்களும், வெவ்வேறு வினைஞர் அதை அழகு செய்யும் பொருட்டு தம் வாழ்நாள் முழுதும் உழைத்தியாற்றிய திருப்பணிகளும் ஆகிய இவ் வெல்லாச் செல்வமும் இன்று மஹாராஜா சக்கரவர்த்தி அசோகனுடைய அடியிணையில் விழுந்து கிடந்தது. ஆனால் இத்தனை செல்வத்தையும், இத்தனை வைபவத்தையும், இத்தனை வல்லமையையும் சாதாரணமாய்ச் சார்ந்து காணப்படும் குற்றங்கள் ஸம்ராட் அசோகனைத் தீண்டவும் செய்யவில்லை. அவனுக்குச் செல்வத்தில் அவாவுமில்லை, வைபவத்தில் ஆவலுமில்லை, அதிகார டம்பமும் இல்லை. அவன் மிகச் சாமானியமான சுத்த வஸ்திரம் தரித்து தன்னைச் சூழ்ந்திருந்த குறு நில மன்னரை மனமுவந்து அன்புடன் போக க்ஷேமம் விசாரியா நின்றான். அவனுடைய உடம்பில் ஆபரணங்களின் தோற்றங்கூட இல்லை. கர்வமென்பது அவனிடத்தே எட்டுணையும் இல்லை. ஆனால் அவனுக்கடங்கிய குறு நில மன்னர் விலையுயரிய ஆடையணிந்து, சொர்ணாபரணங்கள் பூண்டு, இரத்தின பூஷணங்களுடன் தேஜோமயமாய்த் திகழ்ந்தனர். ஸம்ராட் அசோகன் மட்டும் சம்மதித்தால், இக் குறு நில மன்னர் அவனுக்குக் கட்டியங் கூறுவோராயும் கோல் பிடிப்போராயும் அடைப்பை ஏந்துவோராயும் மிக்க உல்லாசத்துடன் குற்றேவல் செய்யக் காத்திருந்தனர். இன்னோரன்ன வானுயர் மனோரதங்களை உள்ளத்திற்கொண்டு இன்



னும் பலர் அங்கே கூடியிருந்தனர். எத்தனையோ பேர் சக்கரவர்த்தியின் கோல் பிடிப்போராய் அமரும் சௌபாக்கியம் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று விரும்பினர். எத்தனையோ பேரின் மனம் வேலுயர்த்துவோராயும் ஈட்டி பிடிப்போராயும் ஆகும் மகா பாக்கியத்தை நாடி நின்றது. எத்தனையோ பேருக்குச் சக்கரவர்த்தியின் ஆஸ்தானத்தில் அரும்பெரும் செயல்கள் புரியும் தருணங்கள் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று ஆவலாயிருந்தது. மதுரை மன்னன் தனக்கு இத்தகைய ஆவல் உண்டென்பதை வெளிப்படையாகவும் உணர்த்தினான். ஆனால் சக்கரவர்த்தி அவனைப் பாராட்டிக் கூறினான்—"தாம் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்; தம்முடைய பதவியும் பிரதிஷ்டையும் மகோன்னதமானவை. இன்று தாம் எமது விருந்தினராயிருக்கிறீர். ஆகவே இன்று நாமே தம்மை உபசரிக்க வேணும்." இவ்வாறு பேசியதிலிருந்து ஸம்ராட்டுக்கு இக் காரியம் இஷ்டமில்லை என்றறிந்து எல்லோரும் சும்மா இருக்க வேண்டியதாயிற்று. குறு நில மன்னரனைவரும் மஹாராஜா சக்கரவர்த்தியின் சாமானியமாகிய வெள்ளாடையைப் பார்த்து, அதைத் தம் விலையுயரிய உடையுடன் ஒப்பிட்டு நோக்கி வெட்கமடைந்தனர். ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த சில குறு நில மன்னர் தம்மை ஒருவரும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை யெனக் கண்டு தம் சிரோரத்தினங்களையும் கண்டாபரணங்களையும் பேசாமல் எடுத்துச் சட்டைப் பைகளில் இட்டுக்கொண்டனர். எல்லோரும் தம் தம் ஆசனங்களில் அமர்ந்த பிறகு, மந்திரி ராதாகுப்தன் எழுந்து நின்றான். இந்திர புரத்து பாசறையில் நிகழ்ந்த இராஜ ஸபை கூட்டத்தில் தான் செய்த பிரசங்கத்தையே பெரிதும் தழுவி அவன் இங்கும் பேசினான். அவன் அசோக மஹாராஜனுடைய யோக்கியதை எவ்வளவு ஓங்கி உயர்ந்துவிட்டதென்பதை விரிவாய் எடுத்துரைத்து, சக்கரவர்த்தி பதத்தின் இலக்கணம் இன்னதென்பதையும் சுருக்கிச் சொல்லிக் கடைசியில் இவ்வாறு பேசலுற்றான்—

"சக்கரவர்த்தி என்னும் பெயரை நாம் இன்று வரையில் சென்ற காலத்து இதிஹாஸத்தில் படித்து வந்திருக்கிறோம். ஏக காலத்தில் பல்வேறு சாம்பங்கள் வழங்கி வருவதற்கும், பிரதி தினமும் வெகு தீவிரமான சமயச் சண்டைகள் விளைவதற்கும் நிலைக்களமாய் இருக்கும் நம் ஆரியாவர்த்த முழுதும் தனிச் செங்கோல் ஓச்சும் சௌபாக்கியம் முதன் முதல் நம் சக்கரவர்த்திப் பெருமானுக்கே கிடைத்திருக்கிறது. ஆகையால் அவருடைய பெயரை மும்முறை கோஷித்து, ஸம்ராட் அசோகன் இச் சக்கரவர்த்தி பதத்தை நீடூழி வகித்தலங்கரிக்குமாறு அருள் புரிய பரமபதியைப் பிரார்த்தித்து, என் ஸ்தானத்தில் அமர அனுஜ்ஞை செய்யும்படி வேண்டிக் கொள்கிறேன்."

மந்திரி இவ்வாறு பேசியபின் எல்லோரும் எழுந்து சக்கரவர்த்தியின் பெயரை மும்முறை கோஷித்தனர்.

இந்தப் பிரசண்ட கோஷத்தினின்று எழுந்த எதிரொலி ககன மண்டலத்திற் போய்க் கலந்த பிறகு, நகரத்து இரண்டொரு பிரமுகர்கள் சுருக்கமாய்ப் பேசினார்கள். அவர்கள் பேச்சின் கருத்தாவது—இந்த சுப மங்கள முகூர்த்தத்தில் சமஸ்த பிரஜைகளும் சந்தோஷமடைகிறார்கள். இப்பேர்ப்பட்ட சக்கரவர்த்தி ஸம்ராட்டு நமக்கு வாய்த்திருப்பது நம்முடைய பரம பாக்கியமென்று எண்ணுகிறோம் இத்யாதி. இது முடிந்ததும் எல்லாக் குறு நில மன்னரின் சார்பாகவும் மதுரை மன்னன் மகா ராஜ சக்கரவர்த்திக்கு வாழ்த்துரைக்கும் பொருட்டு எழுந்தான். அவனும் சக்கரவர்த்தியைப் பெரிதும் போற்றிப் பின் வருமாறு பேசினான்—

"சக்கரவர்த்தி பதம் பெறுவது சாதாரண காரியமன்று. சக்கரவர்த்தி யென்றால் ஒரு பூலோக மஹேந்திரனென்று எண்ண வேண்டும். அவனுடைய ஐசுவரியம் இந்திரனுடைய ஐசுவரியம் போன்றது. இந்திரனுடைய மகிமை போன்றது அவனுடைய மகிமை. சக்கரவர்த்தியாகிய அரசன் எந்த நாட்டுக்கு வாய்க்கிறானோ அந்த நாடு தேவலோகமாய் விட்டதென்றே கருத வேண்டும். அந் நாட்டில் இந்திரனே சக்கரவர்த்தியாகிறான். ஆகையால் வெறும் சைனிய சாமர்த்தியத்தாலும் வீர வன்மையாலும் சக்கரவர்த்தி பதம் பெறக் கூடியதன்று. சுவர்க்க லோகமோ புண்ணியத்தின் பயனாகவே பெறப்படுவதாகும். ஆனால் சக்கரவர்த்தி பதம் அதனினும் சிறப்புடையது. அந்தச் சிறந்த பதமே இன்று நமது மௌரிய குல திலகமாகிய ஸம்ராட்டிக்குக் கிடைத்திருக்கிறது. ஆகையால் நாம் அவரை மனமார வாழ்த்துவோம். அரசர் பெருமானிடம் காணப்படுகிற ஜாஜ்வல்யமான தர்ம பக்தி என்ன, ஸத்திய தர்மப் பிரசாரத்தின் பொருட்டு அவர் அல்லும் பகலும் செய்துவரும் அரும் பிரயத்தன மென்ன, தன் சுகத்தையும் உபேக்ஷித்துத் தியாகம் செய்து அவர் தம் ஜீவிதத்தைத் தர்ம பரிபாலனத்தின் பொருட்டு அர்ப்பித்திருக்கும் அருமை என்ன, இவற்றை யெல்லாம் கண்டு மகிழ்ந்து சமஸ்த பௌத்த தெய்வங்களும் பெருமானிடம் பிரசன்னமாயிருக்கின்றன. பெருமான் சகல தேவர்களுக்கும் பிரியனாய் இருக்கிறார். இல்லாவிட்டால் அவருக்குச் சக்கரவர்த்தி பதம் வாய்த்தே இராது. அவருடைய பாட்டனாராகிய மஹா ராஜா சந்திரகுப்தனும் குறைந்த பிரதாபமுடையவரல்ல. அவர் செலுத்திய அதிகாரமும் ஆளுகையும் அற்ப சொற்பமல்ல. அவருடைய சேனையும் நம் அரசர் பெருமானது சேனைக்கு ஒப்பினதாகவே அநந்தமாயிருந்தது. இவ்வளவும் இருந்தும் எத்தனை ஆண்டுகள் முயன்ற பின்னரும், அவர் சக்கரவர்த்தியாக முடியவில்லை. நமது பெருமானோ அதே பதவியைச் சுலபமாய்ச் சாதித்து விட்டார். இதற்குக் காரணம் யாது? சந்திரகுப்தனது உள்ளத்தில் தர்மத்தினிடம் பிரேமையில்லை. மாறி அவர் பௌத்த தர்மத்தைப் பகைக்கவும் செய்தார். ஆகையினாலேயே தேவர்கள் அவருக்குப் பிரசன்னமாயில்லை. அவர்களின் பிரசாதத்தை நம் பெருமான் பெற்றிருக்கிறார். ஆகையால் நம் பெருமான் சுலபமாய்ச் சக்கரவர்த்தியாகும் பாக்கியமும் பெற்றிருப்பதாக நினைக்கிறேன். நம் பெருமான் தேவர்களுக்கு அத்தியந்தப் பிரியனாயிருக்கிறார். ஆகையால் இந்த சுப மங்கள முகூர்த்தத்தில் சகல பிரஜைகளினுடையவும் அரசர்களாகிய நம்முடையவும் சார்பில் யதோசிதமாய்க் கூறப்பட்ட மங்கள வாழ்த்தின் ஒரு சிறு ஞாபகார்த்தமாக மிக மிகச் சிறப்புற்றோங்கியதும் பவித்திரமுமாகிய ஒரு பட்டம் அளிக்கப்பட வேண்டுமென்று நான் பிரேரிக்கிறேன். இன்றைய தினத்தை நினைப்பூட்டும் அறிகுறியாக நம் பெருமான் தம் பெயருடன் 'தேவாநாம் ப்ரிய: ப்ரியதர்சீ,' எனவே, 'தேவர்களுக்குப் பிரியனான பிரியதரிசி' என்னும் பட்டப் பெயரைச் சேர்த்து வழங்குவாராக. மேலும் பரத கண்டத்தின் பிரஜைகளும் அரசர்களும் நம் பெருமானின் திரு நாமத்தைக் குறிப்பிடும்பொழுதெல்லாம் இந்தப் பட்டத்தையும் சேர்த்துப் பிரயோகிப்பார்களாக."

இப்படிப் பேசிவிட்டு மதுரை மன்னன் ஆசனத்தில் அமர்ந்து, தன் சூசனையைச் சபையோர் எவ்வளவு மட்டில் அங்கீகரிக்கிறார்களென்று பார்க்கத் தொடங்கினான். அவனுடைய பிரேரணை எல்லோருக்கும் பிடித்ததென்று தெரிந்ததும், அசோகபூபதி தன் பிரஜைகளுடையவும் சிற்றரசர்களுடையவும் இந்தச் சொற்ப வேண்டுகோளை மறுப்பது யுக்தமல்லவென்று கருதி,



'தேவாநாம் ப்ரிய: ப்ரியதர்சீ' என்னும் பட்டப் பெயரை வகித்துக் கொண்டான். அதன் மேல் இந்த புதுப்பட்ட சகிதம் சக்கரவர்த்தியின் பெயரைச் சொல்லி மும்முறை ஆனந்த கோஷம் செய்யப்பட்டது.

அதற்கு பிறகு பிரஜைகளுடையவும் சிற்றரசர்களுடையவும் வாழ்த்துரைகளுக்கு விடை கூறும் பொருட்டுச் சக்கரவர்த்தி எழுந்து பேசலுற்றான்— அவன் கம்பீரமான குரலில் சாந்தமாயும் நிதானமாயும் பேசினான் அவன் கூறியதாவது:—

"அன்புள்ள பிரஜைகளே, புரவலர்களே, நீங்கள் எனக்கு 'தேவாநாம் ப்ரிய: ப்ரியதர்சீ' என்ற பட்டம் அளித்ததற்காக உங்களிடம் நன்றி பாராட்டுகிறேன். இந்தப்பட்டத்தை ஏற்றுக் கொள்ளுகையில், நான் என்னுடைய சென்றகால வாழ்க்கையைச் சிறிது நோக்காக ஆராய்ந்து நான் தேவர்களுக்குப் பிரியனாயிருப்பதற்குரிய சத் கருமங்களைச் செய்திருக்கிறேனா இல்லையா வென்றும், இல்லையாயின் என் சென்ற காலசரித்தில் என்ன காணப்படுகிறதென்றும் பரியாலோசனை செய்து பார்த்தேன். என் சென்ற கால சரித்திரம் எனக்கு அத்தியந்த பயங்கரமானதாய்த் தோற்றியது. கொலை, இரத்த வெள்ளம் இவற்றைத் தவிர எனக்கு வேறெதுவும் புலப்படவில்லை. இந்த கொலை பாதகம் உலக க்ஷேமத்தின் பொருட்டு நடந்திருந்தாலும் அவ்வளவு பயங்கரமாக எனக்குத் தோற்றாது. சமயாபிவிர்த்தியின் பொருட்டும், சமயத்தின் பொருட்டும், அஹிம்ஸா தத்துவத்தை மிக மிக உயர் நிலையில் பிரதிஷ்டிப்பிக்கும் பொருட்டும் நான் இன்றுவரை அஞ்ஞானத்தினால் லக்ஷக்கணக்கான மக்களை வதஞ் செய்தேன், செய்வித்தேன். இரத்த வெள்ளத்தினால் இந்தப் பரம பாவனமாகிய பாரத பூமியை அபவித்திரமாக்கினேன். மாதுஷத்துவத்தை அழித்தேன்! மக்களை அவர்கள் இஷ்டத்துக்கு மாறாகச் சமயப் பிரவேசம் செய்யும்படி வற்புறுத்தினேன், அவர்களை வதைத்தேன். இப்படிப்பட்ட வதையை நான் கொலை பாதகம் என்கிறேன். இனி இவ்வகையான வதை செய்பவர்களுக்குக் கொலைபாதகத்துக்குரிய தண்டனை விதிக்கப்படும். இது நிச்சயமென்று அறிந்து கொள்ளுங்கள். எவனுடைய யௌவனப் பருவமானது இவ்விதமான கோரகிருத்தியங்களைச் சமயத் தொண்டென்று எண்ணுவதில் கழிந்ததோ அவனுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் பச்சாதாபம் உண்டாவது மிகவும் ஆச்சரியப்படத்தக்க விஷயமல்லவா? பகவத் கிருபையின்றி இத் தகைய பச்சாதாபம் என்றென்று ஒருகாலும் உண்டாகமாட்டாது. அன்புள்ள பிரஜைகளே, உங்களுடைய அரசன் தேவர்களுக்குப் பிரியனான பிரியதரிசி அரசன் விசாலமான கலிங்க ராஜ்யத்தை ஜெயித்தான். லக்ஷக்கணக்கான மக்களை அடிமைகளாக மதித்துச் சிறைப்படுத்தினான்—ஒரு லக்ஷம் உயிர்கள் இந்த யுத்தத்தில் பலியிடப்பட்டன. ஆனால் கலிங்க விஜயம் உண்டானது முதல், அரசனுடைய பிரவிருத்தி ஸத் தர்மத்தின் சார்பாகத் திரும்பிவிட்டது. 'அஹிம்ஸா பரமோ தர்மம்' எனவே, அஹிம்சையே பரம தருமம் என்னும் கொள்கையில் அரசனுக்கு விசுவாசம் உண்டாயிருக்கிறது. அவனுக்குத் தான் செய்த தீவினைகளுக்காக முழு பச்சாதாபம் தோன்றியிருக்கிறது. இந்தக் கலிங்க விஜயம் உண்டானது முதற்கொண்டு அவனுக்கு நேர்ந்திருக்கும் அத்தியந்த வேதனையினால், தான் உடல் பொருள் ஆவிகளை ஸத் தர்மத்தின் பிரசாரத்துக்காக, அஹிம்ஸா தர்ம பிரசாரத்துக்காக, ஸமர்ப்பிக்க சங்கற்பம் செய்துகொண்டுவிட்டான். தான் தேவர்களுக்கு—பகவானுக்குப்—பிரியனாவதற்குரிய காரியம் ஒரு சிறிதும் என்னால் நிறைவேறி யிராவிட்டாலும் எனக்கு ஸம்பூர்ண பச்சா

தாபம் உண்டாயிருக்கிறது; என்னுடைய வாழ்நாளை ஸத்திய, தயாமய, தர்மப் பிரசாரத்தில் கழிக்கவேண்டுமென்கிற இச்சை என் உள்ளத்திலேயிருக்கிறது. ஆகவே நான் தேவர்களுக்குப் பிரியனாய் இருக்கிறேன் என்ற இக் காரணத்தினாலேயே இந்த மாறுதலும் நிகழ்வது சாத்தியமாயிற்றென்று சொல்லியே என் மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு, நீங்களெல்லோரும் ஒருமித்து அளித்த இந்தப் பட்டத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

"புது நாடுகளை ஜெயிப்பதால் உண்டாகிற மக்களுயிர்ச் சேதத்தைக் குறித்து எனக்கு வருத்தம் உண்டாயிருப்பது வாஸ்தவமே. ஆயினும் மற்றொரு செய்தியைப் பற்றியே எனக்குப் பெருந் துயரம் உண்டாகிறது. யுத்தத்தின் கொடுமைகளால் தரும சீலரும், சதாசார நிஷ்டர்களும், நீதிமான்களும், விதேயர்களும், வாய்மையாளருமாகிய பிராமணர், சிரமணர் முதலிய சாது ஜனங்கள் அதிக கஷ்டம் அனுபவிக்க வேண்டி வருகிறது. அவர்களுடைய ஆருயிர் நண்பர்களும் உற்றார் உறவினரும், யுத்தத்தில் மடிந்து போகிறார்கள். இதனால் விளையும் பிரிவாற்றாமையால் உண்டாகும் துக்கத்தையும் அவர்கள் அநுபவிக்கவேண்டி வருகிறது. இனி அவர்கள் பிராணனைப் பிடித்துக்கொண்டு வேறிடம் ஓடிப்போனாலும் சித்த சமாதானம் உண்டாவதில்லை. அவர்களுடைய வீடுவாசல், உற்றார் உறவினர், ஜாதிஜனம் எல்லாம் அவர்கள் கண்ணுக்கெதிரிலேயே அழிந்து போவதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டி வருகிறது. கலிங்க விஜயம் நிகழ்ந்த காலத்தில் லக்ஷக்கணக்கானவர்கள் இவ்வாறு தவித்தார்கள். சிலர் நீரில் மூழ்கி மாண்டார்கள். சிலர் வெட்டுண்டு அறுப்புண்டு போனார்கள். சிலர் சிறைப்பட்டார்கள். இக் காரணத்தால் உங்களுடைய இந்தப் பிரியதரிசி யரசனுக்கு மிகவும் அதிகமான துக்கம் உண்டாயிருக்கிறது. எல்லா உயிர்களுக்கும் அபயம் (பயமின்மை) அளித்தலும் செந்தண்மை பூண்டொழுகலுமாகிய இவ்விரண்டுமே அறத்தின் வெற்றிக் கொடியில் பிரகாசிக்கத் தக்கவை. இவ்விரண்டு தத்துவங்களையும் முன்னிட்டே பிரியதரிசியரசன் தன் விசாலமான ராஜ்யத்தைக் குறித்துப் பெருமை பாராட்டிக் கொள்வது. யவனர்க்கரசனாகிய அந்தியோகசும், அவனுக் கயல் நாட்டவராகிய தோலமியும் அந்திகோனசும் மாகசும் அலெக்ஜாந்தரும் என்னும் இந் நான்கரசர்களும், தக்ஷிணத்துச் சோழ நாடு, பாண்டி நாடு, தாமிரபர்ணி, கிரீக், காம்போஜம், நாபகம், நாபபந்தி, போஜம், பேத்தேனிகம், ஆந்திரம், புளிந்தம், இவ்வெல்லா நாடுகளின் அரசர்களும் அல்லது அவர்களின் தகுதி பெற்ற பிரதிநிதிகளும் இந்த சபையில் வந்திருக்கிறார்கள். நீங்கள் அனைவரும் எப்படி என் தர்மாஞ்ஞையை அநுஸரித்து நடக்கிறீர்களோ அப்படியே, எங்கெங்கே தர்மோபதேசஞ் செய்யும் பொருட்டு நான் விசேஷித்து உபதேசகர்களை அனுப்பியிருக்கிறேனோ அந் நாட்டவரெல்லோரும் தர்மோபதேசத்தைக் கேட்டு அதன் வழி நிற்க வேண்டுமென்றும் எனக்கு ஆசையாயிருக்கிறது. இவ்வாறு, எனக்கு எங்கும் எல்லாக் காரியங்களிலும் வெற்றியுண்டாவதைப் பார்க்க மிக்க ஆநந்தம் உண்டாகிறது. அறத்தின் வெற்றியால்—தர்ம விஜயத்தால்—உண்டாகும் ஆநந்தம் இவ்வாறே விசேஷமாயிருக்கிறது; ஆனால் இந்த தர்ம பரிபாலனத்தினால் எனக்குப் பரலோகத்தில் கிடைக்கப் போகிற 'அந்தமில் இன்ப'த்தை நோக்கும்போது—ஆராய்ந்து பார்க்கும் போது—இந்த ஆநந்தம் மிகத் துச்சமாகவே தோன்றும். ஆகவே இங்கே கூடியிருக்கும் எல்லா அரசர்களுக்கும் எனக்குப் பின் இந்தச் சிங்காதனத்தை அலங்கரிக்கப் போகும் சகல ஸம்ராட்டுக்களுக்கும் சூசனையாக



நான் உபதேசிப்பதென்னவென்றால், இன்றுதொட்டு நீங்கள் வாளின் வலிமையால் வெற்றி பெறுவதாகிய மப்பக்கத்தில் விழுந்து மக்களுலகத்துக்குக் கொடுமை இழைக்க வேண்டாம். தர்ம விஜயத்துக்கு நிகரான வெற்றி வேறொன்றில்லை யென்பதைச் செவ்வனே நினைவு கூருங்கள். இகத்திலும் பரத்திலும் உத்தமமான ஆநந்தத்தை அளிக்கவல்லது தனிப் பெரும் தர்ம விஜயம் ஒன்றேயாகும்."

தேவர்களுக்குப் பிரியனான பிரியதரிசி ஸம்ராட் அசோகன் இவ்வாறு பேசிச் சற்று அமர்ந்திருந்தான். அவனுடைய பேச்சு எல்லோருள்ளத்தையும் கொள்ளை கொண்டது. ஸம்ராட்டின் உபதேசத்தினால் ஸபையோர்களின் உள்ளங்களில் ஸத் தர்மத்தின் பிரகாசம் பளிச்சிடுவதைக் கண்டு மந்திரி ராதாகுப்தன் ஆநந்த பரவசனாயினான். ஸமஸ்த ராஜலோகமும் பிரஜா மண்டலமும் அசோகனுடைய விமலமாகிய முக மண்டலத்தையே பார்த்த வண்ணமாயிருந்தது. சக்கரவர்த்தி மீண்டும் பேசலுற்றான்:—

"பிரஜைகளே, நீங்கள் இன்று கொண்டாடிய உற்சவம் ஒரு காரியம் முற்றுப்பெற்ற சமயத்தில் நிகழ்ந்திருக்கிறபடியால் அதை நான் ஒரு மகா முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதுகிறேன். இன்று நீங்கள் புரிந்த வாழ்த்துபசாரங்களை என் பொருட்டே செய்யப் பட்டனவாக நான் கொள்ளவில்லை. ஆனால் என்னை உங்கள் பிரதிநிதியாகக் கொண்டு எந்தக் காரியத்தைச் செய்து முடித்தீர்களோ அந்தக் காரிய பரிபூர்த்தியின் சூசகமாகவே இந்த ஆநந்தோத்ஸவத்தை நீங்கள் கொண்டாடுவதாக நான் கருதுகிறேன். அசோகன் ஒருவனாலேயே இந்தத் திக்விஜய காரியத்தை ஒருகாலும் முற்றுறச் செய்திருக்க முடியாது. உன்னுடைய ராஜ பக்தி நிறைந்த பிரஜைகள் தங்கள் அருமையான நர-ரத்தினங்களையும் வீரபுருஷர்களையும் பலி கொடுத்து இவ் விஜய காரியத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்தக் காரியத்தில்—விஜயத்தில்—என்னுடைய பங்கு மிகச் சொற்பமானது. என்னுடைய ராஜ்யத்தில் ஒவ்வொருவரும் புத்திர ஜனனம், விவாகம், குரு பூஜை முதலிய அவசரங்களை முன்னிட்டு உற்சவங் கொண்டாடுகிறார்கள்; அத்தகைய உற்சவங்கள் முற்றிலும் சாரமற்றவை யென்று நான் வெளிப்படையாய்க் கூறுகிறேன். செய் கடமை என்று நிறைவேறுகிறதோ அன்றே உண்மையான உற்சவ தினமாகும். சேவகன் எஜமானன் கட்டளையை நிறைவேற்றுவதும், சிறியோர் பெரியோரைக் கௌரவிப்பதும், அந்தணருக்கும் சமணருக்கும் தானம் வழங்குவதும், ஜீவகாருண்ய ஒழுக்கமும் அறவளர்ச்சிக் கடுத்த மற்றுமுள்ள கருமங்களும் என்று நம்மால் முற்றுப் பெறுகின்றனவோ அன்றே வாஸ்தவத்தில் உற்சவ தினமென்று சொல்ல வேண்டும். அன்றைய தினம் பிதாவுக்கும் புத்திரனுக்கும், ஸ்வாமிக்கும் சேவகனுக்கும் இடையே ஆநந்தம் உண்டாகாமலிராது. ஆதலால் என்னுடைய பிரஜைகள் அற வளர்ச்சிக்குச் சாதனமாக இந்த உற்சவத்தைக் கொண்டாடியிருக்குமிடத்தே, அதை நான் மனப் பூர்வமாய்ப் பாராட்டுகிறேன். ஆனால் என்னைப் பெருமைப் படுத்தும் பொருட்டே, என்னுடைய கீர்த்தியையும் பிரதாபத்தையும் பெருக்கும் பொருட்டுமே இவ் வுற்சவத்தைக் கொண்டாடியிருந்தால், தேவர்களுக்குப் பிரியனான பிரியதரிசி அசோகன் இன்று முதல் கீர்த்தியையும் கியாதியையும் அதிக மதிப்புள்ளவைகளாகக் கருதவில்லை யென்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அசோகனுடைய பிரஜைகள் அழுத்தமான சதாசார சீலர்களாயுள்ளவர்கள். பிரஜைகள் தாமாகவே சதாசார சம்பன்னர்களாயிருக்குமாறு அவன் சட்ட வொழுங்கு செய்திருக்கிறான் என்னும் இக் கீர்த்தியை மட்டுமே

நான் விரும்புகிறேன். இதைத் தவிர்த்து வேறெவ்விதமான காரணத்தால் பெறப்படும் கீர்த்தியையும் நான் ஒரு பொருளாக மதிக்க வில்லை. அந்தவைப் கீர்த்தியைத் தன்னயம் போற்றும் கீழ் மக்களே விரும்பி ஏற்பார்கள்."

இப்படிப் பேசியானதும் ஸம்ராட் அசோகன் சிறிது நேரம் சும்மா இருந்தான். கலிங்க யுத்தம் முடிந்தது முதல் அசோகனுடைய இயற்கையில் மகத்தான மாறுதல் உண்டாய்விட்டது. சபையிலுள்ள சகல பிரஜைகளும் அரசரும் மிக்க வியப்புடன் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவ்வளவில் ஸம்ராட் அசோகன் மீண்டும் தொடர்ந்து பேசலுற்றான்—

"யஜ்ஞ யாகாதிகளை முன்னிட்டும், வேறு தருமக் கிரியைகளை முன்னிட்டும் இன்றுவரை லக்ஷக்கணக்கான பிராணிகளை வதை செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. இது முதல் அவ்வழக்கம் நின்று போக வேண்டும். இது விஷயமான ஏற்பாடுகள் விரைவிலேயே செய்யப்படுதல் வேண்டும். இனி நம்முடைய விருந்தினருக்கு மாம்ஸாஹாரத்துடன் கூடிய விருந்து செய்யப்படமாட்டாது; ஏனெனில் அரசன் பிரியதர்சிக்கு இது மகா பாபமென்று தோற்றுகிறது. எம்முடைய பாகசாலையிலேயே லக்ஷக்கணக்கான ஜந்துக்கள் கொல்லப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது புண்ணிய கர்மங்கள் நிமித்தமாகக்கூட பிராணிஹிம்ஸை நடக்கக் கூடாதென்று நிச்சயித்துவிட்டேன். இதனால் இன்று என் விருந்தினராயுள்ள புலாலுண்போருக்கு அசௌகரியம் உண்டாகக்கூடும். ஆனால் அதைத் தவிர்க்க முடியாமையைப்பற்றி விசனிக்கிறேன். நீங்கள் எல்லோரும் இங்கு வந்து சந்தியமும் அநுபவமும் நிறைந்த என் ஆதேசத்தைக் கவனித்துக் கேட்டீர்கள். அப்படிக் கேட்டதற்காக உங்களெல்லோரிடமும் நன்றி பாராட்டுகிறேன். மந்திரியாரே, என்னுடைய இந்த ஆதேசத்தை—கட்டளையை—பாரத கண்ட முழுவதும் கிராமங்களிலும் பட்டணங்களிலும் பிரகடனம் செய்யுங்கள். அஹிம்ஸையே உத்தம தர்மம், வாள் வலிமை கொண்டு தர்மப் பிரசாரம் செய்வது கூடாது, காரியசித்தியை முன்னிட்டன்றி செய்யப்படும் மங்களோத்ஸவங்கள் வீணாகும், சதாசார சம்பந்தே சிறந்த கீர்த்திபாதும்—இந்த நான்குமே என் சூத்திரவடிவமான ஆதேசமாம். நான் அந்தரங்கசக்தியோடு இப்பொழுது இவற்றை உச்சரிக்கிறேன். இவற்றை விவரணசகிதமாக எங்கும் பகிரங்கப்படுத்த வேண்டுமென்பதும், இவ்வாறு என் அநுபவ வாயிலாக நான் அவ்வப்பொழுது வெளியிடும் ஆதேசங்கள் உலகத்தின் முடிவு வரை நிலை பெற்றிருக்க வேண்டுமென்பதுமே என்னுடைய அபீஷ்டமாகும்." இவ்வாறு கூறி மஹாராஜ சக்கரவர்த்தி தன் ஆசனத்தில் அமர்ந்தான்.

பிறகு ராதாகுப்தன் இவ்வாறு பேசலுற்றான்—"அரசர் பெருமானின் திரு வாயிலிருந்து இதுவரை பொழிந்த அமுத மழையின் இன்சுவையைக் கேவலம் பாதமண்டலத்தில் மாத்திரமன்றி சீன, கிரீசு முதலிய வேறு தேசங்களில் வாழும் மக்களும் அநுபவிக்கக்கூடியவர்களாய் இருப்பதற்குரிய ஏற்பாடுகளை நான் இப்பொழுதே செய்து, மேலும் இந்த அமுதத்தின் சுவை பிற்காலத்திலும் உலகமுடிவு வரையிலும் உலகத்தாருக்குக் கிட்டுமாறு சாசுவதமாய் விளங்குவதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்யப் போகிறேன். மலைகளிலும் குன்றுகளிலும் குகைகளிலும் தேவாலயங்களிலும் பல்வேறிடங்களில் இவ்வுபதேசங்களைத் தூண்களில் வெட்டுவித்து நீடூழி நிலவுமாறு செய்விப்பேன்."

இவ்வாறு ராதாகுப்தன் பேசி உட்கார்ந்தவுடனே ஸம்ராட் அசோகன் சபையை முடிக்கப்



போகுந்தருவாயில், மதுரை மன்னன் எழுந்து பேசத் தொடங்கினான்—

"அரசர் பெருமான் என்னுடைய பணிவான வேண்டுகோளை ஏற்று, இந்த மங்களோத்ஸவ சமயத்தில் 'தேவாநாம் ப்ரிய: ப்ரியதர்சீ' என்னும் பவித்திரமாகிய பட்டத்தைத் திருவுள்ளம் பற்றிய தன் பொருட்டு நான் பெரிதும் நன்றி பாராட்டுகிறேன். இப்பொழுது இறுதி விண்ணப்பம் ஒன்று எஞ்சியிருக்கிறது. அது யாதெனில்: அரசர் பெருமானுடைய இராஜதானியாகிய பாடலிபுத்திர நகரம் இந்திரனுடைய அமராவதியையும் பழிக்கத் தக்கதாயிருக்கிறது. இந்த மகா நாடு தேவ லோகத்துக்குத் துல்லியமாயிருக்கிறது. மேலும் இந்திரனையும் பார்க்கச் சிறப்பு வாய்ந்த சக்கரவர்த்தியாகிய ஸம்ராட் நமக்குக் கிடைத்திருக்கிறார். மகத தேசம், பாடலிபுத்திர நகரம், சக்கரவர்த்தி ஸம்ராட் அசோகன் இம்மூன்றையும் நோக்கும்போதே தேவலோகத்தையும் அமராவதியையும் இந்திரனையும் நினையாதிருக்க முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் இதற்கு குறையாய் இருப்பதாகத் தோன்றுகிறது. தேவர்கள் பாபஞ்செய்தவர்களைத் தண்டிப்பதற்காக நரகத்தைப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால் பாடலிபுத்திரத்தில் இது வரையில் நரகம் ஸ்தாபிக்கப் படவில்லை. இந்தக் குறையை நீக்க வேண்டி அரசர் பெருமான் இங்கே நரக ஸ்தாபனத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்வாராக. இதிலிருந்து நரகத்தின் கோர யாதனைகள், குற்றவாளிகளாயும் குரூரகிருத்தியங்கள் செய்வோராயும் உள்ள துஷ்டர்களை எளிதில் அச்சுறுத்தும். அன்றியும் அதன் பயனாக மக்களின் மனம் தீவினையினின்று விலகி நிற்கும். நரக ஸ்தாபனம் செய்வது நன்னெறிப் பாடம் கற்பிக்கும் கடுமையான கல்விச் சாலைகளை ஸ்தாபிப்பதை யொக்கும். ஆகவே, இன்றையக் கொண்டாட்டத்தை முழுப் பிரயோஜனமுள்ளதாகச் செய்யும்பொருட்டு நரக ஸ்தாபனம் செய்யுமாறு பெருமான் கட்டளை யிடுவாராக வென்று பணிவுடன் பிரார்த்திக்கிறேன்."

இந்த விசித்திரமான பிரார்த்தனையைக் கேட்டு ஸம்ராட் அசோகனுக்கு மிக்க ஆச்சரியம் உண்டாயிற்று. சில அரசர்கள் மந்திரத்தால் கட்டுண்டவர் போல் மயங்கி, இந்தப் புதிய யோசனைக்காக மதுரை மன்னனைப் பெரிதும் கொண்டாடலானார்கள். மந்திரி ராதாகுப்தன் இந்தப் புதிய ஏற்பாடு நல்லதாகுமா ஆகாதா வென்று சிந்தித்துக் கொண்டிருந்தான். இந்தப் பிரஸ்தாவத்தை எதிர்த்து ஒருவரும் பேசவில்லை என்பதை ஸம்ராட் கவனித்தான். நரக பயம் பெரும்பாலான துஷ்டர்களைத் தீவினைகளிலிருந்து விலக்குமென்றும் அவன் புத்தியிற் பட்டது. ஆகையால் நரக ஸ்தாபனம் செய்யுமாறு சக்கரவர்த்தி கட்டளையிட்டான்—இதனால் அரசர்களுக்கு எவ்வளவு உபகாரம் உண்டாம் என்பதையும் சக்கரவர்த்தி மந்திரிக்கு எடுத்துக் காட்டினான்—மந்திரி இன்னும் இதைப் பற்றித் தனக்குள் தர்க்கித்துக் கொண்டிருக்கையிலேயே நரக ஸ்தாபனத்தைப் பற்றிய கட்டளை அவன் காதில் விழுந்தது. அப்பொழுது மந்திரியும் விசேஷ விசாரம் செய்யாமலே, இதனாலும் லாபமுண்டாகக் கூடுமென்று நினைத்து மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டான். இவ்வளவு ஆனபிறகு அன்றைய ராஜஸபை முற்றுப்பெற்றது.

சில தினங்களுக்குள் சாஸ்திர முறைப்படி நரக ஸ்தாபனம் செய்யப்பட்டது. ஆனால் அது மண்ணுலகத்தில் மக்களின் பொருட்டு அமைக்கப்பட்ட படியால், மக்களைப் போலவே சர்க்காருக் குட்பட்டிருந்தது. ஆயினும் அந்த அழிவுபாடெய்துங் காலையில் அந்த அழிவைப் பார்ப்பது ஆநந்தகரமாயிருக்குமா?

# புறப்பொருள் வெண்பாமாலை

## வெட்சியும் கரந்தையும்

(ஸ்ரீ ரா முத்தையர் எழுதுவது)

தமிழ் மொழியின் வரையறைக்குத் தலைபட்ட இலக்கண நூல்கள் பலவற்றிலும் தலைமையாக, பல நக்ஷத்திரங்களின் நடுவில் சந்திரன்போல, தற்பொழுது விளங்குவது விரிந்த தொல்காப்பியம் ஒன்றேயாம். அதில் ஆசிரியர் தொல்காப்பியனார் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திற்கும் சூத்திரங்கள் மூலமாக இலக்கணம் தொகுத்துக் கூறினார். அவைகளில் எழுத்தும் சொல்லும் பொருளை ஆராய்ந்து அறிதற்கு உதவியாகும். பிற்காலத்தார் தொல்காப்பியத்தில் மிகவும் விரிந்து நாள் பழக்கத்தில் வழக்கத்தில் இல்லாமலும் அநுபவத்தில் இல்லாதவையுமான இலக்கணங்களைச் சுருக்கியும், அதில் மிகவும் சுருங்கி உரைகளாலும் யுக்திகளாலும் நுட்பமாக விளங்குவனவற்றை அழகாகவும் விரிவாகவும் சூத்திரங்களாக அமைத்தும் உண்டுபண்ணினர்.

மாந்தர்க்கு உறுதி பயக்கும் பொருள்கள் நான்கு. அவையாவன அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். அவற்றுள் இன்பத்தை அகமென்றும், அறம் பொருள்களைப் புறமென்றும் தமிழ் மக்கள் இருவகைப் படுத்திக் கூறலாயினர். வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லாத நிலைமைத்தாதலால் அது அறம் பொருள் முதலிய நிலையாமை மூலமாகவும், தன்னை அடைவதற்கு ஒருசார் காரணமாகிய துறவறத்தின் மூலமாகவும் கூறப்படுவதன்றி, அறம் பொருள் இன்பங்களைப்போல இலக்கண வகையால் கூறப்படா தென்பர்.

அவ் விதமே இப்பொழுது எடுத்துக்கொண்ட பொருளின் ஓர் பகுதியாகிய புறப்பொருளையும் வினைய பிற்காலத்து இலக்கண ஆசிரியர்கள் விரிவாக உரைத்தனர்.* அவைகளில் அகத்தியமுனிவருடைய மாணாக்கர் பன்னிருவராலும் முறையாகவே இயற்றப்பட்ட பன்னிரு படலம் என்னும் நூலின் வழிநூலாகிய புறப்பொருள் வெண்பா மாலையே தொல்காப்பியத்தைவிட விரிவாக இப்பொழுது காணப்படுகிறது. புறப்பொருள் வெண்பாமாலையானது பன்னிருபடலமென்னும் நூலின் வழி நூலாதலால் தொல்காப்பியத்திற்கும் இதற்கும் பல வேறுபாடுகள் காணலாகும். அவ்வாறு காணப்பட்டாலும் இவ்விரண்டு நூல்களினுடையவும் பொருள் முடிவு ஒன்றேயாதலால் இரண்டு நூல்களும் ஒற்றுமையுடையவேயாகும். இந் நூல் பன்னிரு படலத்தின் வழிநூல் என்பதற்கு வெட்சிப்படலம் முதல் பெருந்திணைப் படலம் ஈறாகப்பன்னிரண்டு படலங்கள் இருப்பதே சாக்ஷியாகும்.

இந்தப் பெருமை பொருந்திய அருமையான நூலை இயற்றியருளியவர் சேர பரம்பரையில் அவதரித்த ஐயனாரிதனார் என்பவராவர். இந் நூலின் துறைகளின * பொருளடங்கிய கொளுக்களுக்கும், அப் பொருளின் உதாரண வெண்பாக்களுக்கும் ஓர் உரை யுளது. அவ் வுரையில், மற்ற உரைகளைப்போல விரிவின்றி இலக்கண குறிப்புகளும் இல்லாதனவாகி, வெண்பாக்களினுடையவும் கொளுக்களினுடையவும் பொழிப்புரையை மட்டும் திட்டநுட்பமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வுரையுங்கூட இல்லையானால் இந் நூலின் பாக்களின் பொருள்களை எளிதில் அறிந்து தெளிய முடியாது. இவ்வுரையை இயற்றிய சாமுண்டிதேவ நாயக்கரது ஊர் முதலிய விவரங்கள் அடியில் வரும் வெண்பாவால் விளங்கும்.

### வெண்பா

ஒப்பரிய மாகறலூ ரான்கிழா ராதிபன்
செப்பரிய செய்வராய கன்றெரிந்து—தப்பரிய
வெண்பாமா லைதனக்குத் தக்க விருத்தியினை
நண்பா லுரைத்தா னவின்று.

இதனால்இவர்வெண்பாமாலைக்குத்தகுந்த விருத்தியுரை உரைத்ததாகத் தெரிகிறது. விருத்தியுரைக்குண்டான இலக்கணப்படி பார்த்தால் இவ் வுரை விருத்தியுரையாகத் தோன்றவில்லை.நிற்க,

அகப்பொருளை அகமென்றும் அகப்புறமென்றும் பிரிவு செய்திருக்கிறது போல, புறப்பொருளையும் புறமென்றும் புறப்புறமென்றும் பிரிவு செய்யப் பட்டிருக்கிறது. இவ் விபரங்களைச் சொல்லு முன்னதியாக அகம் புறம் என்றஇரண்டினுடையவும் வெளிப் பொருளைக் கூறிவிட்டு மேற்சென்றால் மேற் பொருள் வெளிப்படையாகுமாதலால் முதலில் கூறுவோம்.

அகமாவது ஒத்த அன்புடைய நாயகனும் நாயகியும் தம்முட் கூடுகின்ற காலத்தில் பிறந்து அக் கூட்டம் நிகழ்ந்ததற்குப் பிறகு அவ்விருவராலும் தத்தமக்குப் புலனாக இவ்விதமாக இருந்த தென்று கூறப்படாததாகஎப்பொழுதும் மனதின் உணர்வாலேயே அநுபவிக்கப்படும் இன்பமாம். புறமாவது மேற்கூறிய இருவரேயல்லாமல் எல்லாராலும் அநுபவித்து உணரப்பட்டு இஃது இவ்வாறிருந்ததெனப் பிறருக்குக் கூறப்படுவதாய், அறம் பொருள் என்னும் தன்மையையுடையதாய் வெளியில் நிகழும் ஒழுக்கமாம். அவ்வாறு வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை என ஏழும் புறத்தைச் சேர்ந்த தெனவும்; வாகை, பாடாண், பொதுவியல் என மூன்றும் புறப்புறமெனவும் பகுக்கப்பட்டிருக்கிறது. இத் திணைகளின் பெயர் பொருள் ஒழுக்கங்கள் பிறகு விரிவாக எழுதப்படும். எனினும் ஒருவாறு அவைகளின் கருத்து அடியில் வரும் பாட்டினால் அறியத் தக்கது.

வெட்சி நிரைகவர்தல்; மீட்டல் கரந்தையாம்;
வட்டார் மேற் செல்லுதல் வஞ்சியாம்;—உட்காது
எதிரூன்றல் காஞ்சி; எயில் காத்தல் நொச்சி;
அது வளைத்தலாகும் உழிஞை; —அதிரப்
பொருவது தும்பையாம்; போர்க்களத்தில்
செருவென்றது வாகையாம். [ஒன்னார்

பசு நிரையைக் கவர்ந்து வருதல் எவ்வாறு அறச் செய்கையாகுமென்றால்,

“ஆவும் ஆனியற் பார்ப்புன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடனிறுக்கும்
பொன்போற் புதல்வரைப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும், பூட்கை மறத்தின்”

என்றதனால், அறியலாகும் அதாவது.

தலைவனும் தலைவியும் தனித்த விடத்துக் களவு நிகழ்கின்ற குறிஞ்சிப் பொருளாகிய கந்தருவ மணம் வேத விதிப்படி இல்லறமானாற் போல; இரண்டு பெரிய அரசர் போர் செய்யக் கருதினால் ஒருவர் ஒருவர் நாட்டுப் பசு, அந்தணர், பெண்டிர், நோயர், குழந்தை யில்லாதோர் முதலிய நீங்கு செய்யத் தகாத கூட்டங்களை அவ்வி

* துறை என்றால் ஓர் யாற்றில் இறங்கி அனைவரும் நீராடல் நீருந்தல் முதலியவைகளுக்குச் சௌகரியமாகப் பல துறைகள் ஏற்படுத்தியிருப்பது போல ஒரு திணையின் உட்பொருளான பல பொருள்களை யறிவதற்குப் பல துறைகள் அறிஞரால் ஏற்படுத்தப்பட்டதாம்.—திணை—ஒழுக்கம்.

டத்தினின்றும் விலக்க வேண்டி, 'போதருக' என்று சொல்லுதலும், அங்ஙனம் போவதற்கு அறிவில்லாத பசுக்களைத் தாமே களவாடிக் கொணர்ந்து பாதுகாத்தல் செய்யக் கருதிய நிரை கவரச் செல்வதனாலே இச் செய்கை தீமையாகாதெனக் காரணங் காட்டி உரை கூறுவர் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்.

இதனால் முற்காலத்தில் தமிழ் நாட்டு மன்னரின் செயல்களும், அறத் தொழிலும், போர்த் திறமும், கொடை வண்மையும், அன்னோர் படைகளின் மறத் தொழிலும் வன்மையும், அவரது ஒழுக்கமும், பெண் மக்களின் வீரமும், அவர்கள் வீரப் பாலூட்டி வளர்த்த குழந்தைகளின் செயலும் பிறவும் இப் புறப்பொருள் நூலினாலே இனிது விளங்கும். இந் நூலின் ஒவ்வொரு திணையிலும் பல துறைகள் வெவ்வேறு பெயரோடு எளிதில் பொருள்கொள்ள முடியாததால், கற்றோரன்றி ஏனையோரும் அதன் பொருள்களை விரைவில் அறியும் பொருட்டு, துறைகளின் பெயர்களை நீக்கிவிட்டு அவைகளின் சுருக்கப் பொருள்களைத் தொகுத்தெழுதுவதோடு பழக்க வழக்கங்களையும் எடுத்துக் காட்டுவோம்.

## வெட்சி

வெட்சிப் பூவாலாகிய மாலையைச் சூடிக் கொண்டு, பகைவருடைய பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வருதலால் இத்திணை வெட்சியெனப் பெயர் பெற்றது. இச் செய்கையைப் பெரும்பாலும் மாலைக்காலத்தில் அல்லது இராப்பகலில் பின்னர் தான் செய்வார்கள். இது வெட்சியரவ முதல் வெறியாட்டு வரை கசு-துறைகளையுடையது. இவ்வாறு வெட்சிமாலை சூடிவந்து பசு நிரையைக் கவர்ந்து செல்வாரை, பசுநிரைக் குடையவர்கள் வந்து எதிர் மறித்துத் தாக்கிப் பொருதலைக் கரந்தையெனப்படும். இத் திணையின் ஒழுக்கங்கள் அதன் தலைப்பின் கீழ் விவரிக்கப்படும். தொல்காப்பியனார் கரந்தையென ஓர் திணை கொள்ளாது நிரை மீட்டலை வெட்சித் திணையி லடக்கியதுமன்றி, இதனை அகத் திணையின் ஒன்றாகிய குறிஞ்சியின் புறமென்றுங் கூறுகிறார்.

அர்ஜுனன் தீர்த்த யாத்திரைக்குக் காரணமாக, அந்தணன் தனது பசுக்களைப் பகைவர் வந்து கவர்ந்து சென்ற செய்தியை முறையிட நிரையை மீட்டியதும்; பாரதப் போரின் தொடக்கமான "சண்டைக் கடிபிடி மாடு பிடி" என்ற நம்மனோர் பழமொழிப்படி விராட தேசத்தார் பசு நிரையைத் துரியோதனாதியரின் ஏவலிற் கவர்ந்து செல்லுங்கால் பிருகந்நளையாகிய அர்ஜுனன் சென்று மீட்டிக்கொண்டுவந்ததும் இக் கூற்றிற் கிலக்கியமாக வற்புறுத்துகின்றது. இதனால் அக் காலத்து மன்னர்கள் ஏற்கெனவே யிருந்த முன் பகையை மனதில் வைத்துக்கொண்டு அதன் காரணமாகப் பசு நிரையைக் கவர்ந்து வர, அதனால் சண்டை ஏற்பட்டுப் பொருது வெற்றி கொள்ளக் காரணந் தேடுவர் எனத் தெளிதலாகும்.

இவ்வாறு வெற்றியையுடைய அரசன் தனது படைத்தொழிலாளரைப் பகைவரித்துப் பசு நிரையைக் கவர்ந்து வரும்படி ஏவியும் கவர்ந்து வருவார்கள்; அல்லது அரசன் தங்களிடத்துச் சொல்லாதிருக்கவும் தங்கள் குறையை முடிக்க வேண்டி வீரர்தாமே சென்று நிரையைக் கவர்ந்தும் வருவார்கள். இதற் கிலக்கியம் சிலப்பதிகாரம் வேட்டுவவரியிலும் பிற நூல்களிலும் பரக்கக் காணலாம். வில்லாகிய கலப்பையினால் பகைவர் மார்பாகிற வயலில் ஆழ உழப்பட்ட மறவர் ஒன்று சேர்ந்து நிரையைக் கவர்ந்து கொண்டுவரச் செல்லச் சோதிடரால் குறிக்கப்பட்ட நல்ல நாளில் நல்ல ஓரையில் ஆயத்தமானபொழுது, சொல் நிமித்தங்களும் நல் நிமித்தங்களும் புள் நிமித்தங்களும் பார்த்துப் புறப்பட்டு, கன்மலை



நிறைந்த காட்டு வழியாகச் சென்று கழித்துச் செல்வார்கள். பிறகு பகைவரிடத்திற் சென்று அவரது உட்கிடக்கைகளை அறியத்தமது தூதரை ஏவி, அவரால் அறிந்து, அத் தூதர் சொன்ன வழியாகச் சென்று, பகைவரது ஊர்க்கோட்டையையும் அதன் சிறு வாயில் பெரு வாயில்களையும் யாவரும் வெளியிற் போகாதபடி வளைத்து, அக் கோட்டையில் தீயை வைத்து எரித்து விட்டு; ஆரவாரித்த சிறு கன்றுகளுடனே பசுக் கூட்டங்களைக் கவர்ந்துகொண்டு வருவார்கள்.

இவ் விபரத்தைக் கரந்தையார் (பசுக்களின் உடையவர்) படை வீரர் அறிந்து வந்து எதிர்த் தாக்கும்போது, அவர் கூட்டம் பிணக்கூட்டமாம்படி பொருது பசுக்கூட்டத்தை நோவுபடாதபடி அரிய வழிகளிலும் பரந்த காட்டினிடத்தும் செலுத்திக்கொண்டு வருவார்கள். அவ்வாறு வெற்றியோடு கொண்டு வரப்பட்ட ஆனிரையை வீரர் உறவினர் புகழும்படி; துடியென்னும் மேளம் ஒலிசுறங்கக் கொண்டு வந்து, ஊரார் கண்டு அதிசயிக்க ஊர் அம்பலத்தில் சேர்ப்பார்கள். அப் பசுக்களைத் தொழில் செய்தார் தொழில் தன்மைக்கேற்ப அறிந்து தகுதி போலப் பரிசளிப்பார். அதன் பிறகு பசுக்களைக் கவரச் சென்ற வீரக் கழலணிந்த தறுகண் வீரர் கள்ளுண்டு களித்தாடுவார்கள். வீரர்களுக்குத் தகுதி போற் கொடுத்து மீதியான பசுக்களை, தம்மை வந்து வேண்டினார்க்கும், பகைவர் நிலைமையை அறிந்து வந்து சொன்ன ஒற்றர்க்கும் தப்பாமல் சகுனம் பார்த்துச் சொன்னவர்க்கும் தம் கூற்றினும் மிக்க ஏராளமாகக் கொடுத்துதவுவார்கள். இறுதியாக வீரமறவர் வழிவழியாகத் துடியென்னும் வீர வாத்தியத்தைக் கேட்கிறவனுடைய குணத்தை வியந்து, அவனால் தமக்கு வெற்றி தந்த கொற்றவையாகிய காளிகா தேவிக்குத் துடி கொட்டச் செய்து வெற்றி ஆயுதத்தையுடைய காளிகா தேவியின் நீங்காத கருணையைச் சொல்லித் தொழுது, பிறகு முருக பூசை பண்ணுபவனோடுகூட வள்ளிக் கூத்தாடுவார்கள்.

## கரந்தை

கரந்தையாவது வெட்சியார் வந்து கவர்ந்து சென்ற பசு நிரையை மீட்டல். இதற்கு கரந்தை மாலை சூடுதல் உரித்து இதில் கரந்தை யரவம் முதலிய பதின்மூன்று துறைகள் உள. இது வெட்சித் திணைக்கு மறுதலைத்திணை தொல்காப்பி கரந்தையென்று ஒரு திணை கொள்ளாமல் நிரை மீட்டலை வெட்சித் திணையிலேயே அடக்கினர். அதுவன்றி வெட்சித்திணைக்குள்ள துறைகளைத் தானே எதிர்முகமாகக் கரந்தைக்கும் கொண்டனர். வெட்சியார் வந்து பசு நிரையைக் கவர்ந்து சென்ற செய்தியைக் கேட்டதும், போர் செய்ய முடியாதார் தவிர ஏனைய தறுகண் வீரர்கள் தாம் செய்யாநின்ற காரியங்களைத் தவிர்த்து, அனைவரும் ஒன்று கூடி இக் கரந்தை மாலையைச் சூடிக் கொண்டு, காலனை யொத்த கோபத்தோடு கூடின வெட்சியார் பசுக்களோடு திரும்பிச் சென்ற வழியே காட்டிடங்களைக் கழித்துத் தேடி வருவார்கள். அவ்வாறு தேடிக்கொண்டு வரும்பொழுது வெட்சியாரைக் கிட்டியதும் சூழ்ந்து கொண்டு அவர் அஞ்சப் பலவிதமான போர் வரிசைகளால் தாக்குவார்கள் இதற்கிடையில்,

> "விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
> வைக்குந்தன் னாளை யெடுத்து"

என்ற எண்ணத்தோடு கூடின சில வீரர்கள் போர் செய்ததனால் ஏற்பட்ட புண்ணோடு புகழை நிறுத்திவிட்டு வருவார்கள்; சிலர் பகைவர் ஆயுதத்திற்குப் புறங்கொடாமல் அந்த யுத்தக் களத்திலே எதிர் நின்று பொருது தாங்காமல் வீர சுவர்க்கம் போவதும் உண்டு. சிலர் எதிர்பொருவாரை விலக்கித்தான் ஒருவனுமே மேம்பட்டு எதிரி வீரரை வாள்கொண்டு வெட்டிய பிறகு அடி

யென்னும் வாத்தியம் ஒலிக்கத் தன் புண்ணைப் பிரியப்பட்டு விரும்பிக் கூத்தாடுவார்கள்; அல்லது பகைவர் குடராகிய மலையைச் சூடி கையிலே வேலாயுதத்தை எடுத்து வீசிக்கொண்டாவது ஆடுவார்கள்.

மேற்கூறியபடி நோக்குபவர் அஞ்சும்படியான வாட் போரில் பட்டு உயிர் நீத்த நறுகண் வீரரை யாழ்ப்பாணம் (களம்பாடுவோர்) வந்து அவன் பட்டபடியைச் சொல்லிப் பாடுவார்கள். வெற்றி கொண்டுவந்த வீரர்கள் கொற்றக்குடையை யுடைய அரசனிடம் தாம் போய் பொருத மேம்பாட்டைக்கூற; அது கேட்டு அரசன் அவ் வீரர்கள் மகிழும்படி பல வெகுமதிகள் கொடுப்பான். இது கண்ட வாள் வீரர் தோள்வலியுடைய மற மன்னன் புகழைக்கூறி, இவ் வுலகத்தில் தொன்று தொட்டு வருகின்றதும் மிக்க அந்நாத வீரத்தன்மையையுமுடைய குடியின் வரலாற்றினை விரித்துக் கூறுவார்கள். இதில் வெற்றி கொண்டு பகைநிரைகளை மீட்டிக்கொடு வந்த அப் பசுக்களைச் சொந்தக்காரர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிடுவார்கள்.

# ராஜகோபாலன் கடிதங்கள்

—— :[o]: ——

என் நண்ப, சித்திரை ௧௨.

நம் ஜனங்களிடத்திலிருக்கும் நல்ல குணங்கள் எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது. இது வரையில் நான் ஏழை ஜனங்களோடு பழகினதே யில்லை. பள்ளிக்கூடத்தில் படிக்கிற வரையில் எத்தனை வயதான போதிலும் சரி, பையன்களை, உலகத்தைப் பாராமல் வெள்ளைக் காகிதங்களையும் கறுப்பு எழுத்துக்களையும் மாத்திரம் பார்த்துக் கொண்டு இருக்கும்படி செய்து விடுதல் என்ன அநியாயம்! ஆனால் விவகாரத்தில் அப்படித்தான் இருக்கிறது. என்னைத் தான் எடுத்துக்கொள். என் நிலங்களைப் பயிரிடுகிற குடியானவர்களோடு நான் ஒரு நாள் பேசியிருக்க வேண்டாமா? எல்லாம் காரியஸ்தர் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். செல்லு மாமா, செடியா என்றுகூட எனக்கு இந்த ஊருக்கு வந்த பிறகுதான் தெரியும். படித்தவர்களாகிய நாம் வேறு ஜாதி, ஊர் ஜனங்கள் வேறு ஜாதி, என்று நினைத்துக்கொண்டு விடுகிறோம்.

அங்கே இங்கே ஓடி ஆடிக் திரியாமல் 'பொன் போல'ப் புஸ்தகமும் கையுமாகவே இருக்கிற பிள்ளைகளுக்குப் படிப்பு நன்றாக ஏறுகிறது என்று மனிதர் நினைக்கிறார்கள். ஆனால் புத்தகங்களில் சொல்லப்படுகிற விஷயங்கள் பிரகிருதியைப் பற்றியும், மனிதரைப் பற்றியும், மனிதர் செய்கிற செய்கைகள், எண்ணுகிற எண்ணங்கள் இவைகளைப் பற்றியும் தானே ஒழிய வேறில்லை. அப்படியிருக்க, பிரகிருதியையும் மனிதர்களையும் சாக்ஷாத்தாய் அறியாமல், புத்தகங்களில் சொல்லியிருக்கும் விஷயங்களை எவ்விதம் அறிய முடியும்? பள்ளிக்கூடங்களில் உயர் படிப்பு படித்தவர்களில் பெரும்பாலார் கற்றறி மூடர்களாகவும் ஜனுபிமான மற்றவர்களாகவும் இருக்கிறதற்கு இதுதான் காரணம்.



இதெல்லாம் எதற்காகச் சொல்ல வந்தேன்? நான நேற்று வரையில் நம் ஜனங்கள் நம்மவர்கள் என்று நினைத்ததே யில்லை. இந்த ஜன சமுகத்தின் மத்தியில் அம்மா காரியஸ்தர் குப்புசாமி அய்யர், நீ, இன்னும் என் சகபாடிகளில் ஒரு பத்து பேர்—இவர்கள் தான் என்னுடைய உலகம்—மற்றவர்களைப் பற்றி நான் சிந்தித்துக் கூட இருக்க மாட்டேன்.

ஆனால் முந்தாநாள் இந்த ஊருக்கு அப்புறம் கொஞ்ச தூரம் உலாத்திவிட்டு வரலாம் என்று புறப்பட்டேன். சாயங்காலமிருக்கும்; போகிற வழியெல்லாம் இரண்டு பக்கமும் நெற் பயிர் கொழு கொழு என்று வளர்ந்திருந்தது.

இவ்வளவு அழகான பச்சை நான் எங்கும் பார்த்ததில்லை. தூரத்துக் காம்புகளில் மாட்டுக்காரப் பையன்கள் குதித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். மாடுகள் வயிறு நிறைய புல் மேய்ந்துவிட்டு ஏரியில் போய்த் தண்ணீர் சாப்பிட்டுக்கொண்டிருந்தன. சற்று நேரத்துக்கெல்லாம் பையன்கள் விளையாட்டை நிறுத்திவிட்டு, மாடுகளை ஓட்டிக்கொண்டு தங்கள் தங்கள் கிராமம் நோக்கிப் புறப்பட்டார்கள். மாடுகளின் கழுத்துகளில் கட்டியுள்ள மணிகள் ஆலசியமாய் அடித்துக்கொண்டு வருவதும், சூரியன் இறங்க இறங்கப் பட்சிகள் அமர்ந்த குரலில் கத்துவதும் உலகத்துக்கே ஒரு விச்ராந்தியைத் தருவது போலிருந்தது. மாடுகள் செல்லும் வழியில் கிளம்பும் தூசி சூரிய ஒளியால் தங்கமயமாக்கப்பட்டுப் பூமியை ஒட்டி ஒரு மேகக் கூட்டம் செல்வது போலச் சென்றுகொண்டிருந்தது.

சாந்தியைத் தருகிற இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே என் இதயக்கிரந்தி கொஞ்சம் நெகிழ்ந்தது. மூடியிருந்த என் நெஞ்சின் கதவு கொஞ்சம் திறந்தது, மாட்டுக்காரப் பையன்களென்ற இழிவையும் அவர்களது உணர்ச்சியில்லாவது அன்பு குரோதம் முதலிய மன வியக்கங்களிலாவது தாய் தந்தையர் சகோதர சகோதரிகள் இவர் போன்ற பந்துகளின் மீதுள்ள பற்றிலாவது, அவர்களுக்கும் எனக்கும் என்ன பேதமிருக்கிறது? அவர்களுக்குக் கல்வி இல்லை, அதனால் அவர்கள் அறிவு விரியவில்லை என்பது வாஸ்தவம். ஆனால் நான் கல்வி கற்ற அறிவை ஒரு பக்கம் விரித்துக்கொண்டிருக்கிறேன் என்றாலும்; ஜனங்களோடு பழகி, இயற்கை உற்சாகங்களும், பற்றுக்களும், உணர்ச்சிகளும் என்னுள்ளே பிரவேசிக்க இடம் தாராமல் என் இதயத்தைக் காய்ந்து போகும்படி விட்டுவிட்டிருக்கிறேன். ஒரு தட்டில் விரிந்த, கூரிய அறிவையும் காய்ந்து போன இதயத்தையும், மற்றத் தட்டில் ஸ்தூலமான அறிவையும், இயற்கை உணர்ச்சிகளும் இயக்கங்களும் நிரம்பி உயிர் ததும்பிக்கொண்டிருக்கும் இதயத்தையும் வைத்து, நடுவு நிலைமையோடு நிறுத்துப் பார்த்தால், பின் சொல்லப்பட்ட இரண்டும் முன் சொல்லப்பட்ட இரண்டையும்விட எத்தனையோ மடங்கு மேலானதாகவே தோற்றும்.

இதையெல்லாம் நினைத்துப் பார்த்துக்கொண்டு நான் அந்தப் பையன்கள் மீது எனக்கு வழக்கமாயிருந்த அவமதிப்பைவிட்டு அவர்களை நெருங்கி அவர்களோடு பேச்சுக் கொடுத்துக்கொண்டு செல்லலானேன். அத்தனை பேரிலும் ஒருவனுடைய கதை என் மனதை மிகவும் ஆக்ருஷித்தது. அதை மாத்திரம் இன்று உனக்கு எழுதுவேன்.

அவனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயதுதானிருக்கும். ஆனால் அந்தப் பையன்களுக்குள் அவன் தான் தலை. அவனை விடப் பெரிய பையன்கள்கூட அவனுக்கு அடங்கித்தான் நடக்கிறார்கள். விளையாட்டிலாகட்டும், முரட்டு

மாடுகளை அடக்குவதிலாகட்டும், மரமேறுவதிலாகட்டும், நீந்துவதிலாகட்டும், குத்துச் சண்டையிலாகட்டும் அவனுக்கு அங்கே ஒருவரும் இணையில்லை. பார்வைக்கு மிகவும் 'சூட்டிகை' யாக இருக்கிறான். பேசுவதும் வெடுக்கு வெடுக்கென்று பயமின்றிப் பேசுகிறான். அவன் வீட்டில் எப்படி யிருக்கிறான், பார்க்கவேணுமென்று எனக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. ஆகையால் பேசிக்கொண்டே அவன் வீட்டுக்குப் போனேன். வீட்டு வாசலில் அவன் தங்கை அவன் வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் அவள் குடுகுடு என்று ஓடிவந்து, "என் அண்ணே, இன்னைக்கு இத்தனை நேரம்?" என்று கேட்டாள். அவன், "இன்னைக்குஐயா இப்படிபேசிவிட்டு வந்தாங்க; அதனாலேதான் நேரம்" என்று சொன்னான். என்னைக் கவனித்து வீரம்மாள் (அதுதான் அவள் பெயர்) கொஞ்சம் நாணத்தோடு ஒதுங்கிக் கொண்டாள். நம் ஊர்ப் பெண் குழந்தைகளுக்கு நாணம் உடம்போடேயே பிறந்துவிடுகிறது! "பாட்டியார் கூட இருக்காத என் தங்கச்சி இங்கே வந்தே?" என்று பையன் கேட்டான், அதற்கு அவள் "இல்லே, பாட்டியார் தூங்குறாங்க" அதுக்குள்ளேயும் நீ வந்துட்டயா இன்னுபார்க்கலாம் இன்னு வெளியே வந்தேன்" என்றாள். இவர்கள் பேசியதிலிருந்து இவர்களுக்குத் தாய் தகப்பன் இல்லையென்றும், இவர்கள் பாட்டியார் வியாதியிலிருக்கிறாளென்றும் ஏற்பட்டதால் "நானும் உங்கள் பாட்டியாரைப் பார்க்கிறேன் வாருங்கள்" என்று சொல்லிக் கொண்டு அவர்கள் வீட்டிற்குள் சென்றேன். அங்கே, பாவம், கிழவி இன்னும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்து விட்டு வீட்டுக்கு வெளிப் புறத்தில் உட்கார்ந்து இந்தக் குழந்தைகளின் வரலாற்றை விசாரித்தேன்.

இவர்களுக்குத் தாய் தந்தைகளின் ஞாபகமே யில்லை. இவர்கள் ஒரு வயது இரண்டு வயதுக் குழந்தைகளாக இருக்கும் போதே அவர்கள் இறந்து போய் விட்டார்களாம். இவர்களை எடுத்து வளர்த்தது இப்பொழுது கடுஞ் சுரத்தில் படுத்திருக்கும் இவர்கள் பாட்டியாரே. அவளைப் பற்றிப் பேசுகையில் அவர்கள் குரல் அடைந்த மாற்றத்தைக் கவனிக்கும் போது, அந்தச் சிறு குடும்பத்தில் அன்பு எவ்வளவுக்கு வளர்ந்திருந்தது என்று ஒரு மட்டுக்குத் தெரிந்தது. காம்பில் குதித்து விளையாடிக்கொண்டிருந்த பையனுடைய முரட்டுத்தனமெல்லாம் எங்கேயோ போய் விட்டது. இங்கே, பாட்டியார் விழித்துக் கொள்ளப்போகிறாள் என்று மிருதுவாகப் பேசுகிறான்; தன் தங்கையின் தலைமயிர் காற்றில் பிரிந்தால் அதைக் கூட்டி வைக்கிறான். பாட்டியார் விழித்துக்கொண்டு விட்டாளோ என்று அடிக்கொரு விசை எழுந்திருந்துபோய்ப் பார்த்துக்கொள்ளுகிறான். "பாட்டியார் சீக்கிரத்திலே விழித்துக் கொள்ளுவாங்க, கஞ்சி காச்சி விடு தங்கச்சி" என்று சொல்லி விட்டு என்னோடு பேசிக் கொண்டே விறகுகளை ஒடித்துத் தருகிறான். இந்தக் குழந்தைகளின் நடவடிக்கைகளைக் காணும்போது என் மனம் நெகிழ்ந்த விதத்தை உனக்கு எடுத்துச் சொல்ல முடியாது. நேரமாய் விட்டபடியால் ஊர் நோக்கிப் புறப்படலாம் என்று எழுந்திருந்தேன் ஆனால் பையன், "எங்கள் ஊருக்கு வந்துவிட்டுப் பட்டினியாகத் திரும்பக் கூடாது" என்று சொல்லிக் கட்டாயப் படுத்தி வீட்டிலிருந்த பாலைக் காய்ச்சி எனக்குக் கொடுத்தான் நானும் சாப்பிட்டுவிட்டு இடுப்பைப் பார்த்தேன். அரை ரூபாய்தானிருந்தது. "இதை உன் பாட்டியாருடைய மருந்துச்செலவுக்கு வைத்துக்கொள்" என்று கொடுத்தேன். அவன் வாங்கிக் கொள்ளமாட்டேவே மாட்டேன் என்று



போராடினான். பின்பு மிகுந்த பலவந்தப்படுத்திக் கொடுத்துவிட்டு வீடு நோக்கி வந்தேன். வரும் வழியெல்லாம் அவர்களுடைய அன்னியோன்னியத்தையும் சிறுமைபற்ற குணத்தையும் நினைந்து நினைந்து சந்தோஷப்பட்டுக் கொண்டே வந்தேன்.

நேரமாகி விட்டதால் இதோடு நிறுத்துகிறேன்.

# திரு வ. வெ. ஸு. ஐயரின் நினைவு

(ரா. முத்தையப்பர் எழுதுவது)

தரவு

பொறைமகளும் ஜயமகளும் போர்மகளுந் துயாடைய
நறியதமிழ் பாமகளும் நலம்பெருகு சீர்மகளு
மறைபோக வயல்நாட்டு வாங்கிலரும் வெட்டுயிர்க்கச்
சுறவுமறி மலையாற்றில் துணிந்தரிய வுயிர்நீத்தோய்!

தண்ணுமையி னொலியின்மிகத் தங்காம லார்த்தோடுங்
கண்ணகன்ற பொதிகைமலைக் கலியாண வருவிதனில்
மண்ணவரே துயர்மூழ்க வானவரும் விருந்தழைக்க
விண்ணுறச் சென்றனையே வீரவவெசுப்பிரமணிய!

தாழிசை

பிரியாத சுயத்திரையைப் பிரியமுடன் பார்த்தன்றான்
வரையவே ஏர்க்கக வன்னிரை யளித்தனையோ.

போற்றுவார் போற்றுவதுன் புகழ்ப்பொருளே யல்லாது
வேற்றுவா சகங்களையே விளம்புவதைக் கேட்டிலமால்.

இந்தியர்தாம் ஒற்றுமைக்கு இணங்குவா ரெனமதித்து
அந்தமுடன் வானவர்க்கு மறிவிக்கச் சென்றனையோ.

பாரத்துவாஜப் பெயரோடு பாரதனிற் குருகுலத்தைத்
திருத்தியே யம்முனியைத் தேடிவரப் போயினையோ.

வள்ளுவனுங் கம்பனும் வகுத்தவிரி நூலதனின்
உள்ளுறையைக் கேட்டிடவே உவந்தவ ரிடத்தினையோ

கார்திமுத லோருடனே கலந்துமுடி வடையாத
சாந்திசெயுங் காரியத்தைச் சாதிக்க நடந்தனையோ.

**அராகம்**

சிறியன பெரியன சிலவென பலவென
குறியன நெடியன குலவுறு புகழினை.

அவரவ ரிறையவ ரரியவ ரெனவுனைத்
தவமென வுளமதில் தரித்து நின்றனரே.

தனதென வயலென தயவென கறவென
உனதென வெனதென வுரைபெறு நினைவினை.

மறவியு நினதுயிர் மறமெனக் கருதியோ
நிறைபுன லருவியில் நிலவியே யுருவினன்.

**தாழிசை**

முந்நீரில் நீந்தியபேர் மொய்ம்புடைய வீரனே நீ
சின்னீரி லோய்ந்ததுமே சிறைப்பட்ட தென்னினைந்தோ.

கலையாழிக் கரைகண்ட கருணையுடைச் சீர்வள்ளால்
சிலையாழுஞ் சிறுசடத்தில் சிக்குண்ட தொருவியப்பே.

பார்மகளை இசைகொண்டு பரிவினொடு தழுவியபின்
நீர்மகளைத் தழுவினையோ நின்மலனே நீயறையாய்.

தேசத்துக் கெனவுழைத்துத் தேய்ந்துசமர்த் தர்காத்த
மாசற்ற திருவுருவில் மயங்கினரோ வானவரே.

மண்ணவர்க்காச் சிறைப்பட்டு மாய்ந்த மாயாப் புகழோய்
விண்ணவரைச் சிறைமீட்க வீரமுட னேகினையோ.

குறுமுனியைத் தேடித்தமிழ்க் குறைகடனை யாய்ந்துரைத்தும்
பிறகதனை நிரப்பிடவே பெய்யாமற் பாய்ந்தனையோ.

**அம்போதரங்கம்**

ஆங்கிலம் போன்ற அயல்நூற் பொருள்களை
ஓங்கவே பாரதர் உணரவே யளித்தனை.

உரைக்கப் பொருளுறு உயர்தமிழ்ப் பொருள்களை
திரைபெறு பறங்கியர் தெளியவே மொழிந்தனை.

சட்டப் படிப்பில் சமர்த்த னாகியே
விட்டுப் பிறகதை வெறுத்தாய் வெறுப்பிலாய்.

சண்டமா ருதம்போல் சபைதனிற் பேசியே
கொண்டிடு காங்கிரஸ்க் கொள்கையி லாழ்ந்தனை.

ஆங்கிலக் கூற்றுக் ககன்றனை.
ஓங்கவே பொருளறு யுயர்ந்தனை.



நாட்டி னின்னலால் நலிந்தனை.
கூட்டிச் சேர்க்கக் குறித்தனை.

மனையை விட்டனை
வினையை யெட்டினை
இருடி யாயினை
அருடா யாயினை
மருள றுத்தனை
அருள் கொடுத்தனை
பெருமை யுற்றனை
சிறுமை யற்றனை
எனவாங்கு

**அரிதகம்**

தூல யாக்கை துலைந்த தாயினுஞ்
சில மடையச் சிறுவர்க்கு செறிவை
சூக்கும மெய்யால் தேக்குவாய் கல்விப்
பால பாரதியைப் பரிவுடன் றுவக்கினை
சால வருடங் கழிந்தில நின்னும்
புதுவது விளக்கும் பொற்புடை யாப்பும்
நிதர்சன மாக்கும் நிலைத்துரை பலவதும்
படிப்போ ருளத்தைப் பாகு படுத்திக்
கடிதிற் றன்பாற் கட்டியே யீர்க்கும்
புனைந்துரை யுலகிய லெனுந்திற மிரண்டினு
நிலவிய நின்னுடை நீள்பே ரறிவாற்
பலவித பாஷையிற் பகுத்தறிந் தெடுத்த
பேர்புத் துரையைச் சீர்பெற வருளுதி
ஆய்ந்த பேரறிவுடை யமலனே நின்மல
தாய்த்தமிழ் நாட்டிற் றகுந்த திலக
தேசத் தொண்டரில் காசிலா மணியே
பாரத தேவியின் பண்புடைப் புதல்வ
வீர சுவர்க்கம் விரும்பி யேகிய
தீர நின்னுழைத் தெரிய வேண்டுவன
பலவே யாயினுஞ் சிலவதிற் பெருகிய
தேசநு சுதந்திரம் வீசிடக் கருணையால்
அருளுதி யாமு மன்புட னுன்னைக்
குருவாய்க் கொண்டு கொள்கையிற் சோர்வுறும்
வாழி வாழி வாழி நின்புகழ்
ஊழிதோ றூழிதோ றூழி
நில்நா ளுறைந்த பல்புக ழோனே.

# ஆனந்தரங்கப்பிள்ளை தினசரி

விக்கிரம வரு சித்திரைமீ ௲எ௱௬௰-ம் ஆண்டு
௧௨ செவ்வாய்க்கிழமை அபிரேல்மீ ௨௰௨

இந்த நாள் காலமே யேழு மணி துவக்கி பத்து மணி மட்டுக்கும் நம்முடைய பிரெஞ்சுக்காரர் பிரம்பை மேட்டிலேயிருந்தவர்கள் பேரிலே இங்கிலேசுக்காரருடைய பவுஞ்சு ஐனூறு அறநூறு குதிரைமட்டும் பதிவாயிருந்து வந்து சண்டை பண்ணுமிடத்திலே வெள்ளைக்காரர் பின்னடைஞ்சு வாங்கிவந்துவிட்டதாயும் சிபாயிகள் முனைஞ்சு நல்ல சண்டைபண்ணுமிடத்திலே சிபாய்களுக்கு கப்பித்தானாயிருந்த சேக்குதாக்கிக்கும் அவனுக்கு ரெண்டாதவனாயிருந்தவன் ரெண்டு பேருக்கு பின்னையும் யிருபது முப்பது பேர்சிபாயிகளுக்குகாயமும் கூடயிருந்த மூணு பேர் வெள்ளைக்காரருக்கு காயமாச்சுதென்று நாற்பது பேர் சிபாயிகளை சாவுயென்றும் நூறு பேர் சிபாயிகள் துபாக்கியை போட்டுவிட்டு ஓடிப் போனார்களென்றும் அந்த துபாக்கியெல்லாம் இங்கிலேசுக்காரர் எடுத்துக்கொண்டு போனார்களென்றும் அதின் பேரிலே நம்முடவர்கள் முறிஞ்சு வந்துவிட்டார்களென்றும் அப்புறம் இங்கிலேசுகாரருடைய குதிரை வாங்கி வடக்கே போகச்சே நம்முடவர்கள் வெள்ளைக்காரிருந்தவர்கள் ஒரு பிரங்கியாலே போட்டார்கள். ஒரு வெள்ளைக்காரன் குதிரைக்காரனுக்கு பட்டுகுதிரை விழுந்துபோச்சுது. அந்த வெள்ளைக்காரனை நம்முட உசார்க் குதிரைக்காரர் பிடிச்சுக்கொண்டார்களென்கிறதாய் சேதி கேழ்க்கப்பட்டுது. காலமே ஒன்பது மணிக்கு கோட்டைக்குப் போனவிடத்திலே முசேசிப்பளாம் வாரதை தொட்டு முசே கொடுத்தேன். சாவடி ஞாயத்துக்கு போனபடியினாலேயும் முசெலெறி சதலை சாத்திக்கொண்டு கடுதாசி எழுதிக்கொண்டிருந்தான். முசே துபுவா வந்து முசேலெறியைக்கண்டு பெசிக்கொண்டிருந்துப் புறப்பட்டு போய்விட்டான். நாமும் பதினொரு மணிக்குப் புறப்பட்டு விட்டுக்கு வந்துவிட்டோம். போனவிடத்திலே ஒரு விசேஷமும் நடக்கயில்லை. இந்த நாள் சாயங்காலம் அஞ்சு மணிக்கு முசெலெறியமைச் சனுப்பிவிச்சார். போனவிடத்திலே அவர் சொன்னது வீத்திலே எழுதியிருக்கிற பேர்வழியிலே தீந்த பேர் யிம்மாத்திரம் என்றும் இனிமேல் தீரவேண்டிய பேர் யிம்மாத்திரம் என்றும் எழுதி வரச் சொல்லி நயினாருடனே சொல்லியிருந்தோம். கொண்டுவந்தீரா என்றுகேட்டார். நாம் சொன்னது காலமே தானே கொண்டு வந்தோம் நீங்கள் அலுவலாயிருந்தபடியினாலேகண்டு பேசுகிறதுக்கில்லாமல் போச்சுதென்று சொன்னேம். நல்லது காலமே கொண்டுவாருமென்று சொல்லி இது நிமித்தியந்தான் உம்மை அழைச்சனுப்பிச்சது போமென்று சொன்னார் அதின் பேரிலே நாம் வெளியே புறப்பட்டுச் சவாரி போகச்சே முசெவியும் பாதிரிவீபுசேலாரேறியும் இரண்டு பேரும் வண்டியேறிக்கொண்டு வந்தார்கள். அப்பால் நாம் போகச்சே தண்டு நம்முடவர்கள் இறங்கி இருக்கிற இடத்திலே ஒரு பயித்தியக்கார பண்டாரம் ஒருத்தனை வெகுகாறனென்று ஒரு அவமாங்கி வெள்ளைக்காரன் ஒருத்தன் கத்தியினாலே வெட்டி அண்டுக்கரைக்கு எசமானாயிருக்கிற புலியண்டை கொண்டுபோயி ஒப்பிவிச்சான். அவன் கதிவாலண்டை கூட்டி அனுப்பிவிச்சான். நாம் ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்து விட்டோம். மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு டங்க சாலைபாபுராயர் சோத்திலே யிருந்தவர் இருபதனாயிரம் ரூபாயைத் தீத்துகொண்



டார். அதுக்கு கெடுவு எட்டு நாளிலே பதினாயிரம் ரூபாய் குடுக்கவும். பதினைந்து நாளையிலே நாலாயிரம் ரூபாய் குடுக்கவும். அப்புறம் பதினைஞ்சு நாளையிலே ஆறாயிரம் ரூபாய் குடுக்கவும். இப்படி மூணு கெடுவாய் குடுக்கச்சொன்னதின் பேரிலே ருமசந்திர ராயனுக்கு பிள்ளையும் பத்து நாள் கெடுவு முசத்தி வச்சுக் கொள்ளவேணுமென்கிறது. கெடுவு எறக்குறைய யிருந்தாலும்தீத்தது, இருபதனாயிரம் ரூபாய் சரியாய் குடுக்க தீத்துக் காவல் விடுதலையாய் வீட்டுக்கு வந்துவிட்டார், இந்த ரூபாய் பாபுராயன் லட்சுமணராயன் ரெண்டு பேருக்கும் தீர்ந்தது.

# நமது சிற்பச் செல்வம்

—:[o]:—

## மிக்கேல் ஆஞ்சலன்

பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரோமாபுரியை அழகான சிற்பத்தாலும் சித்திரத்தாலும் அணிபுறுத்தினவர்களில் ரபேலன் * மிக்கேல் ஆஞ்சலன் † லினாரதன் ‡ முதலியோர் முதன்மையானவர்கள். அவர்களுள் மிக்கேல் ஆஞ்சலனுடைய பிலியே கண்ணுக்கு அமுதளிக்கும் பற்பல அற்புதமான சித்திரங்களை எழுதி விளங்கி சிற்பதேவியின் இணையற்ற செங்கோலாக இலகியது. மிக்கேல் ஆஞ்சலன் கி.பி ௧௪௭௫-ம் ஆண்டு காப்ரீஸ் நகரத்தில் பிறந்தான். அவன் ரப்பேலனுக்கு அ-வயதுக்கு மூத்தவன். லினாரதனைவிட உ௩-வயது இளையவன். மேல் நாட்டு நவசக்தி இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்தவர்களில் மிக்கேல் ஆஞ்சலனும் முதன்மையானவன். ரோமாபுரியிலும் பிளாரன்ஸ் நகரிலும் அவன் செய்துள்ள சித்திரவேலைகளும் சிற்ப வேலைகளும் நேரே நின்று பேசுவதுபோ லிருக்கின்றன.

மிக்கேலின் தகப்பனும் ஒரு ஓவியன், ஆனால் தன் பையனைத் தன் தொழிலிலேயே விடுவதற்கு மனமற்றவனாய் இருந்தான். மிக்கேலோ சித்திரம் எழுதுவதில் இயற்கையிலேயே வல்லவனாய் இருந்தான். மிக்கேல் ஒரு தக்க சித்திரக்காரனிடம் வேலைக்கு அமர்ந்து, தேர்ந்த ஒரு மகவுக்குடன் தன் தொழிலில் உழைத்தான். பதினைந்து வயதிலேயே தன் ஆசானுடைய சித்திரத்தையும் திருத்த வல்லவனானான். இவன் மேல் பொறாமைகொண்ட ஒரு சிற்பி ஒரு தரம் இவன் மூக்கை உடைத்து இவனுடைய அழகைக் குலைத்தான்.

௧௫௦௫-ம் ஆண்டில் கிருஸ்தவ மதகுருவாகிய இரண்டாவது ஜூலியனின் ¶ சமாதியின் மேல் ஒரு அலங்காரமான மாளிகையை எழுப்ப மிக்கேல் அமர்ந்தான். இதில் திகழும் இணையற்ற சித்திர வேலைகளால் மிக்கேலின் புகழ் எங்கும் பரவிற்று. பிறகு ௧௩௦-அடி நீளமும் ௪௦-அடி அகலமும் உள்ள ஸிஸ்தன் கோவிலின் உட்

*Raphale † Michael Angelo ‡ Leonardo

¶ Julius II

கூரையை அலங்கரிக்க ஏற்றுக்கொண்டு தான் தனியே இருந்து நான்கு ஆண்டுகளில் இணையற்ற சித்திர வேலைகள் செய்தான். இந்த ஸிஸ்டன் கோவிலில் இலகும் சித்திரங்கள் இன்னும் வியப்புடன் உலகத்தால் போற்றப்படுகின்றன. தாவீது விலுடைய உருவத்தை வெகு அழகாக மிக்கேல் பிளாரன்ஸில் கற்சிலையில் செதுக்கினான். இப்படிப்பட்ட மிக்கேல் எழுதிய ஒரு படத்தை

### கௌதம க்ஷேத்திரம்

இது மைசூர் சமஸ்தானத்திலுள்ள ஸ்ரீரங்கப் பட்டணத்திற்கு மறுபெயர். இது சரித்திரத்தில் கீர்த்திபெற்ற இடம். இங்கிருக்கும் அரங்கநாதர் கோயில் கௌதமமுனிவரால் வழிபடப் பட்டதால் இதற்கு இப் பெயர் வந்தது. இவ்வூர், காவேரியும் கொள்ளிடமும் நாற்புறமும் வளைந்துள்ள ஒரு தீவு.



அரங்கநாதர் கோயில், ஸ்ரீரங்கபட்டணம்.

நமது 'பால பாரதி'யின் முகப்புப் படமாகப் போட்டுள்ளோம். ஒரு கொம்பில் இரண்டு பூக்கள்" என்று பெயர் தாங்கி நிற்கும் அப் படத்தைப் பார்த்தவுடன் நமது பாரத அன்னையிடம் பூத்து சமீபத்தில் மறைந்த வ. வெ. ஸு. ஐயர், சித்தரஞ்சன தாஸர் என்ற இரண்டு வீரப் பூக்களின் நினைவு வருகிறது.

இத் தீவு சரித்திர சம்பந்தமானது. இங்கே தான் ஐதராலியும், அவன் மகனான மைசூர்ப் புலியும் (திப்பு சுல்தான்) கோட்டை காலத்தில் தங்குவது. அவர்கள் வசித்த அரண்மனை இவ்வூரை அழகு செய்து கம்பீரமாக இன்றும் விளங்குகிறது. அதில் ஐதர் ஆங்கிலேயரை வென்ற பொலிலூர்ச் சண்டையைப் படமாக எழுதியிரு



கிறது. ௧௭௯௯-ம் ஆண்டு திப்பு சுல்தான் வெகு தீரத்துடன் ஸ்ரீரங்கப்பட்டணம் கோட்டையை ஆங்கிலேயரின் படையோடு எதிர்த்து, நெடு

கோட்டையின் கிழக்கே ௨ மைல் தூரத்தில் லால்பாக் என்ற தோட்டம் உள்ளது. அதில் ஐதர் திப்பு இருவருடைய சமாதும் இருக்கிறது.



சீதை, ராமர், லக்ஷ்மணர்.

நேரம் கோரயுத்தம் புரிந்து கடைசி முடிவில் தான் தனியாய் நின்றும் சிம்மம் போலப் பொருதி வீழ்ந்தான்.

"இஸ்லாம் மத[illegible] திப்பு முகம்மதின் கொள்கைக்காக உயிர் நீ[illegible] என்று திப்புவின் சமாதியில் எழுதப்பட்டுள்ளது.

## இராமேஸ்வரம்

பாரத ஜாதி தனது இதயத்திலும் தேசத்திலும் தெய்வத்திற்கே உன்னதமான இடம் தந்திருக்கிறது. உலகெல்லாம் கோயிலாகக் கண்டிருப்பதே நம்மவர் மகிழ்வு. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் கட்டளையினின்றே நமது நாடு அரசனுடைய மாளிகையினும் கோயிலையே வணக்கத்துடன் கொண்டாடுகிறதெனத்



ராமேஸ்வர ஆலயத்தினுள் உள்ள கோபுரம்.



தெள்ளிதின் விளங்கும். காசி ராமேஸ்வரம் முதலிய தலங்கள் எக்காலத்திலும் பாரத ஜாதியால் வணங்கப் பெறுவதால் கோயில் நம் ஜாதியை ஒற்றுமைப்படுத்தி இன்னும் ஓங்கச் செய்கிறதெனத் தெரிகிறது.

இராமேஸ்வரத் தீவிலிருக்கும் இராமநாதன் சந்நிதியில் கைக்கூப்பித் தொழாத இந்துக்கள் வெகு சிலரே என்று கூறுகிறேன். அச் சந்நிதியின் பெருமை அளவிடப்படுமோ! ஸ்ரீ ராமபிரானால் இராமலிங்கமூர்த்தி கொலைப்பாவத்தினின்றும் விடுதலை பெற மண்ணால் பிடித்து வைத்து பூசிக்கப் பெற்றது. ராமபிரான் பிடித்து வைத்த மண் லிங்கம் பின்பு அனுமான் கொணர்ந்த கல் லிங்கத்தினும் வலியதானது. இராமேஸ்வரம் கோயில் வெகு நேர்த்தியான சிற்பவேலையுடையது. அதன் அழகிய தூண்களும், மண்டபங்களும், கோபுரமும் பார்வைக்குப் பெரு விருந்தாகும். படத்தில் வரிசையாகச் சித்திரத் தூண்கள் தாங்கும் மண்டபத்தைக் காட்டியிருக்கிறது. இராமேஸ்வரம் கோயில் விக்கிரகங்கள் வெகு அழகாக முன்னின்று பேசுவது போலிருக்கும். இராமர், இலக்குமணர், சீதாபிராட்டியார் இம்மூவரின் விக்கிரகங்களையும் படத்தில் காட்டியுள்ளோம். இவற்றை நோக்கினால் எவ்வித்திய மனத்திலும் கலைகள் மலர்ந்து விளங்கிய நம்



இராமேஸ்வரத்தில் அழகிய தூண்களடங்கிய சந்நிதி

பண்டைப் பாரதநாட்டின் எண்ணங்கள் உதிக்கா மேல் மூடியிருக்கும் திரை எப்போது மறையாது, நமது சிறப்புச்செல்வ இந்தியாவின் விலகுமோ!

# ஆலோகன அவலோகனம்

———[o]———

பாரதநாட்டின் கண்ணீர்

முன்னே யமுனையாற்றின் கரைகளில் கண்ணனின் குழலோசைகேட்டது. பசுக்கள் அணி அணியாய் மேய்ந்தன. இராட்டினத்தின் ஒலி காற்றை நிரப்பிற்று. இப்பொழுதோ "பசி பசி" என்ற ஏழைகளின் கூக்குரலால் இந்திய நதிக்கரைகள் எதிரொலிக்கின்றன. நூற்றுக்கு ௬௦-பேர் பட்டினியால் தவிக்கின்றனர். "நனை சுவர்க் கூரையும், நனை குறம் பல்லியும்" பெற்ற இருண்ட மண் வீடுகளில் நமது ஏழைகள் ஆடு மாடுகள் போன்று வசிக்கின்றனர். சுகாதாரக் குறைவால் இந்தியரின் சராசரி வயது உ௩ ஆக இருக்கிறது. சராசரி க½ அணாக் கூலியே அவர்கள் தலையில் எழுதியிருக்கிறது. இந்த வாழ்வில் கோடிக் கோடியாக, அயல் நாட்டிற்குக் கொள்ளை போகிறது. விளைந்த பருத்தியை அன்னியருக்கு விற்று, அவர்களிடமிருந்து நூலாக வாங்குவதில் ௬௦-கோடி ரூ. இழக்கிறோம். கட்குடியால் கோடிக் கணக்கான பணத்தை ஏழைகள் பறிகொடுக்கின்றனர். அயல் நாட்டு இடம்பச் சாமான்களின் மாயை இவர்கள் செல்வத்தை உறிஞ்சுகிறது. அரசாங்கச் செலவோ, மற்ற நாடுகளைவிட மிகவும் அதிகம். நாட்டின் காவற்காரனை சேனைக்கு ௬௦-கோடி ரூ. செலவு. கலால் வரும்படியில் பன்னிரண்டிலொருபங்கு கல்விக்காகத் தரப்பட்டிருக்கிறது. நூற்றுக்குத் தொண்ணூற்றுநான்கு பேர்கள் எழுத்தறியாதவர். கப்பல் வியாபாரமும் கல்வி பொழுங்கும் பிற நாட்டாரிடமிருந்துவருகிறது. பஞ்சமும் மடமையும் அடிமைத்தனமும் நமது அழகிய நாட்டைச் சீர் குலைத்தன! உழைப்பவர் குறைவு உண்பவர் மிகுதி!

நமது ஜனசமூகமோ, ஒற்றுமையினின்று ஓடிக்கொண்டிருக்கிறது. மதச் சண்டையும் ஜாதிப் பொருமலும், கட்சி வேற்றுமையும், உத்தியோக வேட்டையும் தொழிற் சோம்பலும், அடிமை புணர்ச்சியும், ஆண்மையின் அயர்வும், சுதந்திரதேவியின் மனதைப் புண்ணாக்குகின்றன. அங்கே இந்து முகம்மதியருள் புகைச்சல்! இங்கே அந்தணர், அற்றோர், பஞ்சமர்களின் கிளர்ச்சி! சகிப்புத் தன்மையும், சமாச உணர்ச்சியும், மக்கள் நடமாடுங் கோயில் என்ற நினைவும் ஆன்ம வளர்ச்சியும், ஆருயிர்ப் பணியும், பிறர்க்கெனவாழும் பெருமையும் போயின!

அங்குமிங்கும், கொடுங்கொலைகளும், வெறியாட்டங்களும், கடுஞ்சாவுகளும் பெருகுகின்றன. பாவலாக்கொலை, மவுண்டு ரஸ்தாகொலை, சப்ராய்கொலை இன்னும் எத்தனை கொலை!

சுமார் கால் நூற்றாண்டுகளாக நமது சுதந்திரப் போரின் நாயகமாக விளங்கின கலை வாணிக வல்லவர், ஐயரும், தியாகமூர்த்தியான தேசபந்துவும்பூகம்பத்தால் குலைந்த மலைகளைப் போல் மறைந்தனர். அந்தோ கடுஞ்சாவு! கொடுங் கூற்று! நாட்டின் நிலைமையைப் பார்த்தால் கண்ணீர் ததும்புகிறது!

இன்னும் விடியுங்காலமில்லை

இன்னும் நம் வீட்டில் நாம் அன்னியராகவே இருக்கிறோம். நம் நாடு இன்னும் சிறைக்கோட்டமாயிருக்கிறது. நமது அமர நாட்டின் கையிலுள்ள அடிமைச் சங்கிலி அறுந்த பாடில்லை. புத்தரும், அசோகரும், விக்கிரமாதித்தியனும், சாணிக்கனும், அக்பரும் விளங்கிய நாட்டை அன்னியர் ஆள்கின்றனர்! "இந்திய நாகரிகத்தைக் காக்க வாள்கொண்டு உழைத்தோர்! நாங்களின்றி, இந்நாடு கொடிய அராஜகத் தொல்லையில் வீழ்ந்துவிடும்" என்று மார்பைத் தட்டி, சிவாஜியை ஈன்ற பாரத தேவியின் முன்னே மற்றோர் பேசும் காலம் வந்துவிட்டது. மலையசைந்து எலி ஓடிய கதையாய்! ௧௧௬௦௦-பவுன் செலவழித்து ரீடிங்கு பிரபுவும், பாக்கன்ஹெத் பிரபுவும், விலை யுயர்ந்த காலத்தை வீணாக்கி இந்தியரைக் காப்பாற்ற இரவும் பகலும் பேசி முடிவில் இந்தியா பொறுப்பு வகிக்கத் தயாராகவில்லை என்ற அசரீரியை அளித்தனர்! காத்தது போதாதாம் இன்னும் ௧௯௨௯-வது ஆண்டு வரையில் பொறுமையாக அடக்கவொடுக்கத்துடன் அமர்ந்திருக்க வேண்டுமாம்! இனி நாம் இலவு காத்த கிளியல்லோம். நமது விடுதலை புறத்தினின்று வருவதல்ல. உள்ளத்தினின்று உதிக்கும் உறுதியாலும், பொறுமையாலும், முயற்சியாலும் ஒற்றுமையாலும், சுதந்திர மெய்துவோம்! காந்தியடிகளின் அடி நிழலில் ஒதுங்குவோம்! நமது தேவைகளைக் குறைத்துக்கொண்டு, அவ்வகைளையும் அடிமையற்ற வழியில் அடைந்து, சாரியில்லாது வயிற்றை வளர்க்க முயல்வோம். நூற்றுத்துவோம்! உழுதுண்போம்! தன்னறிவெய்துவோம்! காற் கஞ்சிப் படிப்பைவிட்டு, ஆத்ம வளர்ச்சியும், தொழில் முயற்சியும் தரும் நாட்டுக் கல்வியை வளர்ப்போம்! உத்தியோக வேட்டையை விடுவோம். ஒற்றுமைச் சங்கை ஊதுவோம்! நம் நாட்டின் கண்ணீரைத் துடைத்துக் களிப்பு பெருக எழுவோம்!

உலக சமாதானத்திற்கு வழி

மாக்டோனல்டு சொல்லுகிறார்:—

"சமாதானத்திற்கு ஜெர்மனி ஸர்வதேச சங்கத்தில் ஸ்தானம் வகித்தல் அவசியம். ஒவ்வொரு நாடும் ராணுவத்தைக் குறைத்தல் அவசியம். முதல் முதல் ராணுவத்தைக் குறைக்க வேண்டுவதே அவசியமென கனம் சேம்பர்லின் அறிந்திருக்க வேண்டும். தற்காலம் தேடும் கூட்டுறவு முறைகள் பயனையும் தருமென நான் நினைக்கவில்லை."

உலகில் பேராசை அதிகமாயிற்று. பிறர் உடைமையைப் படை காட்டிப் பிடுங்கிக்கொள்ளும் அநீதி பெருகி வருகிறது.

"இன்னொரு நாட்டை இகல் வென்றின் காளையதை வென்றெரிகல் கொள்ளும் வியப்பு"

என்ற உண்மையை மிருகபலவீரர் இன்னும் அறிந்திலர். வென்றோர் வெல்லப்படுவர் என்றதைக் கண்டும் ஓர்ந்திலாது உலகில்படுகொலைக்கும், சண்டைக்கும், துயருக்கும் காரணமாயுள்ளார். இப்போதுதான் படை யூற்றத்தால் மேல் நாட்டில் கூற்றின் கொலைத்தாண்டவத்தைக் கண்டனர். தம்நாட்டைச் சிறுடனே தம் போற்றி மற்றோர் நாட்டைப்பற்றின் என்னைக் கால் இகல் ஏது? இவ்வுண்மை என்று அரசருக்கு விளங்குமோ? சிலருக்கு இவ்வுண்மை விளங்கி வருகிறது.

ஜெர்மனியின் கீர்த்தி பெற்ற ராஜதந்திரி யான பிஸ்மார்க் கூறுகிறார்:—

"ஐரோப்பாவின் தலைவிதி பசிபிக் மஹாசமுத்திரத்தில் எழுதப் பெறும். ஜனப் பெருக்குள்ள ஐரோப்பிய நாடு தன் விரிவுக்கும் வாழ்வுக்கும் அதிகமான மண்ணின் தேவையை உணரும். ஆசியாவின் குடியேற்ற நாடுகளுக்காக ஐரோப்பாவில் போர் நிகழ்வது உறுதி. அந்தப்போரும் பசிபிக் மஹாசமுத்திரத்தில் நேரும்."

ஐரோப்பியரின் இடம்பம் குறைந்து அவர்கள் என்று கடவுள் தமக்குக் கொடுத்த நிலத்திலேயே நிலைத்து வாழக் கற்றுக்கொள்ளப் போகிறார்களோ! பசிபிக் சமுத்திரத்தில் பெரும்போர் எதிர் பார்க்கவே படுகிறது. அமெரிக்கர் சிங்கப்பூரில் கப்பல் படையை சேர்க்கிறது. சைனாவில் பொது உடைமைக் கிளர்ச்சியின் புயல் அன்னியரை வெளியே பிடித்துத் தள்ளுகிறது. ருஷியா சீனத்திற்கு உதவி புரிகிறது. பூகம்பம் ஜப்பானை குடியேற்ற நாடுகளை வெல்லக் கிளப்புகிறது. பிரான்ஸும் ஸ்பெயினும் மொராக்கோவுடன் பொருதுகின்றன. வட கோடிப்பிரதேசங்களின் பாத்தியத்தைக் குறித்து ஐக்கியமாகாணமும் கானடாவும் போட்டிபோடுகின்றன. ஜெர்மனி நஷ்டயீடு தரவில்லையென்று பிரான்ஸுக்கு வருத்த மனஸ்தாபம். ஐரோப்பியர் புதிதுபுதிதாய்க் கண்டுபிடித்துள்ள ஆட்கொல்லி ஆயுதங்களுக்குச் சீக்கிரம் செலவு வரும்போலிருக்கிறது. ஈசனே யோற்று உலகிற் பொறுமை விளங்குவ தென்றோ!

**சீனத்தில் கிளர்ச்சி**

சீனர் நாட்டன்பு மிகுந்தவர். படை கொண்டு பிற நாட்டைப் பிடிக்கும் பேராசையற்றவர். அமைதியுள்ளவர்கள். லவோத்ஸெயையும், கொன் பூத்ஸேயையும், புத்தரையும் தங்கள் மத குருவாகப் பெற்றவர்கள். அயல் நாட்டாரிலிருந்து தம் நாட்டைக் காக்கப் பெருஞ் சுவரெழுப்பி தம் நாகரிகத்தின் எல்லைக்குள் பெருமையுடன் வாழ்பவர். இருப்பினும் மேல்நாட்டு நாகரிகம் மெல்ல மெல்ல சீனச்சுவரைத் தாண்டித் தலைக் கோலைக் கொண்டு பாவிற்று. ஐரோப்பிய இறக்குமதிகளால் நாட்டுச் செல்வம் வற்றத் தொடங்கியது. சீனத்திற்குள் அபின் நுழைந்து நாட்டை மயக்கி வீரத்தை உறுஞ்சியது. இக்கேட்டைக் கண்ட சில சீனர் ௧௮௪௰-ஆண்டில் அன்னியரைத் தடுக்கக் கிளர்ந்தனர். அந்த அபினிச் சண்டையில் ஆங்கிலேயர் வென்று ஹாங்காங்கை அடைந்தனர். பர்மா அவர் கைவசமானது. ௧௮௯௪-ஆண்டில் கொரியாவும் பார்மோஸாவும் ஜப்பானைச் சேர்ந்தன. ௧௮௯௮-ஆண்டில் ஜெர்மனி, கியாசோவையும், இங்கிலாந்து வெய்-ஹை-வெய்யையும் கைப் பற்றிக் கொண்டன. மேல் நாட்டார் சீனத்தில் மென்மேலும் வேரூன்றி தங்கள் தனிச்சட்டப் படியே ஆட்சி செலுத்தி வந்தனர். சுதேசிகளை மதிப்பதில்லை. தங்கள் சுதந்திரம் மெல்ல விழுங்கப்படுவதைக் கண்ட சீனர் சென்ற நூ ஆண்டுகளாக விழித்தெழுந்து பிற நாட்டாரின் ஆதிக்கத்தை ஒடுக்கக் கிளர்ச்சி செய்து வருகின்றனர். பாக்ஸர் கலகத்தில் சீனர் தோற்றபின் அன்னியரின் ஆதிக்கம் உரம்பெறத்தொடங்கியது. மத்திய அரசாங்கம் மெலிந்தது. சன்யாத்ஸென், [illegible]டன் கிளர்ச்சி செய்து ௧௯௧௨-ம் ஆண்டு குடியரசு ஏற்படுத்தினார். ஆனால் அன்னியரின் கடுமையான ராணுவ ஆட்சியில் சீனர் மருகினர். இந்த நிலைமையில் சீனரின் உரிமையுணர்ச்சியும், வேற்று நாட்டவரை வேர் பெயர்க்க வேண்டுமென்னும் ஆத்திரமும் பொங்கியது. பொது உடைமையாளரிடத்தில் அவர் மனம் ஈடுபட்டது. பலமான வேலை நிறுத்தங்களும் புத்தகப்பிரசுரங்களும், அன்னியர் மீது வெறுப்பும் பரவுகின்றன. ஸன்யாத்ஸெனின் கட்சி பலமடைகிறது! என்ன நடக்குமோ!

"பாலபாரதி" புஸ்தகசாலை சேரமாதேவி.

—————[*]—————

| | நூல் | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| க. | மகாத்மா காந்தி | ... | க | 0 | 0. |
| உ. | ஆரோக்கிய வழி | ... | 0 | கஉ | 0 |
| ங. | நீதி தர்மம் | ... | 0 | [illegible] | 0 |
| ச. | இந்தியாவைப் பற்றிய உண்மை | ... | 0 | [illegible] | 0 |
| ரு. | திரிபாலா நாடகம் | ... | 0 | ச | 0 |
| சா. | அர்ச்சன சந்நியாசி | ... | 0 | கஉ | 0 |
| எ. | வால்மீகி விஜயம் | ... | க | 0 | 0 |
| அ. | விவேகானந்தரின் வர்த்தமான பாரதம் | ... | 0 | க0 | 0 |
| கூ. | தன்னம்பிக்கை | ... | 0 | அ | 0 |
| க0. | ரவீந்திர டாகூரின் கதைகள் உ-ம் தொகுதி | | 0 | கஉ | 0 |
| கக. | ஷை ங-ம் தொகுதி | ... | 0 | கஉ | 0 |
| கஉ. | ஸ்வபந்த ப்ரகாசம் | ... | 0 | அ | 0 |
| 13. | V.V.S. Aiyar's English Translation of the *Kural* 2nd Edition | ... | 5 | 0 | 0 |

SOUTH INDIAN SHRINES

Describes the chief temples in all aspects. Double Crown Quarter 638 Pages: 251 Illustrations, Rs. 6/

VAIDYANATHAN BROS.,
TRIPLICANE, MADRAS, S. E.

## வெளி வந்துவிட்டது!

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திரு வரலாறும், உபதேச ரத்தினமும் அடங்கிய இனிய செய்யுள் நூலான

## ☞ இராமகிருஷ்ணாமிருதம்

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரால் பாடப்பெற்றது)

சுவை சொட்டும் சீரிய விருத்தங்களில் பரமஹம்ஸரின் சரித்திரமும் தெட்பநுட்பம் செறிந்த அகவற்பாக்களில் பரமஹம்ஸோபதேசமும் இதில் அடங்கியுள்ளன. பரமஹம்ஸர் விவேகானந்தர் இவ்விருவரின் படங்களும் இதில் உள்ளன. பக்தியும், பேரின்பமும் ஊட்டி வாழ்வை உயர்த்துவதற்கு இந்நூல் பெரிய சாதனமாகும்.

**இதன் விலை அணா சா.**

வேண்டுவோர் எ-அணா தபால்தலை அனுப்புவது நலம்.

இரண்டு அரிய நூல்கள்

## குரு கோவிந்த சிங்கன்

பாரத தர்மத்தை நிலை நிறுத்த அரிய தியாகங்கள் செய்த ஒரு வீரனுடைய சரிதை வேண்டுவோர் ரு½-அணா தபால்தலை அனுப்பவும்.

## ஜாரதுஷ்டிரன்

ஜொராஸ்தர் என்கிற பாரசீக மதகுருவின் திவ்விய சரித்திரமும் உபதேசமும்

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது)

வேண்டுவோர் உ½ அணா தபால் தலை அனுப்பவும். ஷை இரண்டு புத்தகங்களும் வேண்டுவோர் எ½ அணா தபால்தலைகள் அனுப்பவும். கிடைக்குமிடம்:

'பால பாரதி' புஸ்தகசாலை சேரமாதேவி.

160206

# பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

நாகரீகமான ஜரிகைவேலை செய்த பட்டுச்சேலைகள்,
ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டுகள், முதலியன
மிகச் சரசமாகக் கிடைக்கும்.

காசுமீரச் சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி,
கோரோஜனை முதலியனவும், கிடைக்கும்.

முந்துங்கள்! முந்துங்கள்!

## SILK PITAMBAR Co.
## BENARES CITY

## T. B. T. Mafays, French Perfumers.
**KALAKKADU POST, TINNEVELLY DIST.**

**Hair Oil Essence!** Cheap Price கூந்தல் தைல வாசனை!

[c]

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் வாசனைகளால் நீங்களே 16- அவுன்ஸ் அளவுள்ள நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பாதாமி எண்ணெய், ஆலிவ் எண்ணெய் இவைகளில் உயர்ந்த கூந்தல் தைலம் தயார் செய்துகொள்ளலாம். கடைகளில் விற்கப்படும் 2-அவுன்ஸ் புட்டிகளுக்கு ரூ 1—0—0 கொடுத்து ஏமாற வேண்டாம்.

| NAME | | | PRICE | NAME | | | PRICE |
|---|---|---|---|---|---|---|---|
| ரோஸ் | ½ oz | Rs. | 1—12—0 | கஸ்தூரி | ½ oz | Rs. | 2—0—0 |
| மல்லிகைப்பூ | „ | „ | 1—12—0 | தாமரைப்பூ | „ | „ | 1—4—0 |
| வெட்டி வேர் | „ | „ | 1—12—0 | தாழம்பூ | „ | „ | 1—0—0 |
| மனோரஞ்சிதம் | „ | „ | 2—0—0 | மகிழம்பூ | „ | „ | 2—8—0 |
| சந்தனம் | „ | „ | 1—4—0 | குங்குமப்பூ | „ | „ | 1—0—0 |
| ஒயிட் ரோஸ் | „ | „ | 1—8—0 | சுரங்கி | „ | „ | 1—8—0 |
| சைபர் | „ | „ | 2—0—0 | செண்பகப்பூ | „ | „ | 2—8—0 |
| அம்பர் | „ | „ | 2—4—0 | ஜேரோவி | „ | „ | 2—0—0 |
| கருவைப்பூ | „ | „ | 1—4—0 | பிச்சிப்பூ | „ | „ | 1—0—0 |

முக்கிய கவனிப்பு:—எங்களுடைய வாசனைகளில் ஒரே தடவையில் 6-புட்டிகள் வாங்குவோருக்கு ஒரு தங்கப் பவுனுடன் பேனாவும், தைலத்திற்குச் சேர்க்கக்கூடிய கலரும் இனாமாக அனுப்பப்படும். தபால்சார்ச்சு வேறு

# THE KURAL

OR

## The Maxims of Tiruvalluvar

Translated by

*Acharya V. V. Subrahmanya Aiyar.*

*Second Edition, thoroughly revised and enriched with a large number of footnotes and otherwise.*

The difficulty of unravelling the sense out of the cryptic though magnificent commentary of Parimelalakar can be conquered by the use of this translation which is the only one that preserves all the force and sublimity of the original.

This edition is beautifully bound and is ready for sale.

Price Rs. 5. V.P.P. charges 8 as.

**For copies apply to:—**

**The Bala Bharati Bookshop,**

**Sheramadevi.**

ஓம்

# தமிழ்க் குருகுல வித்யாலயம்

## சேரமாதேவி

—(1)—

**புதிய கல்வி வருஷம், தைமீ ௩௨ ஆரம்பித்துவிட்டது!**

—ஹ—

ஆங்கிலத்தில் பி.ஏ. வகுப்புக்குச் சரியான கல்வி வரையில் கொடுக்கப்படுகிறது. தமிழில் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் வரையில் கற்கலாம். ஐரோப்பிய முறைகளில் இலக்கிய ஆராய்ச்சிகள் செய்யவும் மாணவர் பயிற்றப் படுகின்றனர்.

கணிதம், தேச சரித்திரம், சம்ஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாடங்கள் செவ்வையாக நடக்கின்றன.

நெசவுத் தொழில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. பயிர்த் தொழில் செய்யவும் வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது.

பிள்ளைகளை இலக்கியக் கல்வியும் ஓர் தொழிலும் அப்பியசிக்கச் செய்ய விரும்பும் தந்தையர் உடனே முந்துக!

விவரங்களுக்குக் காரியஸ்தனுக்கு எழுதித் தெரி[ந்து] கொள்ளுக.

ஆசாரியன்.

சேரமாதேவி "குருகுல" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, [சச்சி]தானந்த பாரதியாரால் பிரசுரிக்கப்பெற்றது.